# திராவிட நுபதி

...விவேகி...

நாட
272



# திராவிட பூபதி

நாடக ஆசிரியர் :

**'விவேகி'**

*

பாடல்கள் :

**'நல்லதம்பி'**

*

வெளியிடுவோர் :

**திராவிட கலா நிலையம்,**

57, முக்தாருனிஸா பேகம் தெரு,

சென்னை-2.

பதிப்புரிமை உடையது] 1953. [விலை ரூ. 2.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 210
நன்கொடை எண்: 210

# முக்கிய அறிவிப்பு:

இந்நாடகத்தைப் பயிலவோ, நடத்தவோ விரும்புவோர் ஒவ்வொரு தடவையும் கண்டிப்பாகத் 'திராவிட கலா நிலைய'த்தாரிடம் நேரிலோ, அஞ்சல் மூலமாகவோ ரூபாய் ஐந்து (5-0-0) செலுத்தி அநுமதியும், ஆலோசனையும் பெற வேண்டும்.

நிர்வாகி
**திராவிட கலா நிலையம்**
57, முக்தாருனிஸா பேகம் தெரு
சென்னை-2.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்
தமிழியல்துறை

சிடி பிரிண்டர்ஸ் மதராஸ்-2

5A-02

'விடுதலை' ஆசிரியர் S. குருசாமி B.A., அவர்களின்

# சிறப்புரை

**"விரட்டுங்கள் ஆரியரை! திராவிட நாட்டை விட்டே ஓடி ஒழியும்படி!!"**

இதுதான் இந்த நாடகத்தின் சாரம். "திராவிட பூபதி" என்ற இந்நாடகத்தை ஆதாரப் பூர்வமாக எழுதி இருக்கிறார் இதன் ஆசிரியர் "**விவேகி**".

தமிழனின் இன உணர்ச்சியைத் தூண்டுவதற்காக இவர் வேறு சில நூல்கள் எழுதி இருப்பினும் இதுதான் அவற்றுள் தலை சிறந்தது.

இந்நூல் முழுவதையும் படித்தேன். இவ்வளவு வட மொழிச் சொற்களை, இவ்வளவு பொருத்தமாக எப்படி எழுதினார் என்பது ஒரு தனி வியப்பு!

மனுதர்மத்தில் இருந்தும், வேதத்தில் இருந்தும் ஏராளமான ஆதாரங்களை எடுத்துக் காட்டி இருக்கிறார், நாடகப் பாத்திரங்கள் வாய் மூலமாக.

இதை நாடகமாக நடிப்பது ஒருபுறம் இருக்கட்டும். இந்நூலைத் தடை செய்யாமல் இருந்தாலே போதும்! அப் பேர்ப்பட்ட உண்மை "முழு நிர்வாண"த்தோடு காட்சி அளிக்கிறது.

ஆரியம் அன்று நடந்தது மட்டுமல்ல; இன்று நடப் பது; நாளைக்கு நடக்கப் போவது, இம்மூன்றையும் அப் படியே அப்பட்டமாக எழுதிக் காட்டுகிறது இந்நாடகம்.

"ஆரியன் அறுத்திருக்கிறான்: நம் புலவனின் நாக்கை மட்டுமல்ல; நம் மூக்கை—மானத்தை! மூளையை —மூதறிவை!! முதுகெலும்பை—முழு வலிமையை!!!".

(பக்கம் - *118*)

முற்றிலும் உண்மை; **குன்றன்** கூறுகின்ற இக் கூற்று.

"திராவிடபூபதி" பிரச்சார நாடகந்தான். நாடகத்தில் பிரச்சாரம் செய்வது, நாட்டையே கெடுப்பது என்று ஒரு சில குருட்டு மதியினர் கூறலாம்!

பிரச்சாரம் என்றால் 'கோயபெல்ஸ்' செய்த, பொய்யை மெய்யாக்கும் பிரச்சாரமல்ல! தாழ்ந்த இனத்தைத் தலை நிமிரச் செய்யும் பிரச்சாரம்!! நீ திராவிடன்—ஆரியத்தால் அழிந்தாய் என்பதை எடுத்துக் காட்டும் பிரச்சாரம்!!!

இடிந்த கோட்டைகள், தூர்ந்த அகழிகள் இன்று— அன்றோ, உயர்ந்த கோட்டைகள், ஆழமான அகழிகள்! வான் முட்ட உயர்ந்து பறக்கும் வண்ணக் கொடிகள்!! வளமிக்க வாழ்வு !!! அச் செழிப்பு நிறைந்த நாட்டைச் செந்தமிழ் நடையில் பார்க்கும்போது உடலெல்லாம் சிலிர்க்கிறது.

காட்சிக்குக் காட்சி துடிப்பும், வேகமும் தொடர்கிறது. முதற் பக்கத்தில் இருந்து, முடிவு வரை படிக்காமல் புத்தகத்தைக் கீழே வைக்க முடியாது.

சில காட்சிகளில் நம்மை அறியாமல் கண்ணீர் கசிகிறது. மாபாடியைக் கொல்லும் கட்டம்—பூங்கோதை பூங்குன்றன் இறக்கும் கட்டம்—திராவிடபூபதி, ஆரியர் சூழ்ச்சியை உணரும் கட்டம்—பூமகள் புலம்பும் கட்டம் ஆகிய காட்சிகளில் எல்லாம் நமக்கு உணர்ச்சியும் வேகமும் பிறக்கிறது.

ஆராய்ச்சி மிக்க நாடகம் இது. இந்நாடகம் மிக எளிமையாக, அழகாக, அற்புதமாகக் கையாளப்பட்டு இருக்கிறது. இதைப் போன்ற நூற்றுக் கணக்கான நாடகங்கள் இன்னும் தேவை.

M. R. ராதா.

# சிறப்புப்பா

இராப் பகலாய் அறிவியக்கத் தோழரீண்டு
எடுத்துரைத்தும் கேளாத செவி மடுத்து
பராபரமே நின் பெருமை யல்லால் இந்த
பாருலகில் பிறிதொன்றும் அறியோம் என்று
புராண இதிகாசம் எனும் அழுகச் சேற்றில்
புதையுண்டு கிடப்பவர்கள் வினவுகின்றார்
திராவிடர் யார்? ஆரியர் யார்? என்று. அன்னோர்
தெளிவுபெற விடைகூறு முகத்தான் இந்நூல்

ஆரியர்கள் இன்னவர்கள்; அவர்கள் வந்த
அழகிய இந்நாட்டினிலே வாழ்ந்த மக்கள்
சீரியதோர் பண்பாடும் திறலுங் கொண்டு
சிறப்புற்ற திராவிடர்கள் இன்னார் என்று
நேரியதோர் முறையோடு விளம்புகின்ற
**நல்லதொரு நாடகத்தைக் கொண்டதாகும்**
தேரிய நுண்ணறிவாளர் 'விவேகி' யாரின்
திருமுயற்சி பயனீந்து நீடு வாழ்க.

'நல்லதம்பி'

# பாயிரம்

வளமான நீர் நிலேயும், பயிர் விளேக்கும்
வயற்காடு, பழத் தோட்டம், மலர்த் தடாகம்,
இளவேனிற் களிப்பூட்ட நிலாச் சோறுண்டு
எழில் மடவார் கண்துஞ்சும் முன்றில், இன்னும்
களம் என்ருல் குதித்தோடும் காளேயர் தம்
கழலார்ப்பும் கற்கோட்டை பிறவுங் கண்டு
உளமெல்லாம் பூரித்துத் திராவிடத்தில்
உறைந்திருக்க ஆரியர்கள் எண்ணங் கொண்டார்.

வாளெடுத்துப் போர் புரியும் வண்மையில்லா
வைதீகப் பிண்டங்கள் அழுக்காறுற்று
'தோள் வலியும் போர்த்திறனும் ஒருங்கே பெற்ற
திராவிடரை வஞ்சத்தால் வெல்வோம்' என்று
சூளுரைத்துச் சூழ்ச்சிபல செய்தார் அன்னோர்
சூழ்ச்சிக்கு முதல் பலியாய் 'தலேவன்' வீழ்ந்தான்
நீள் விழிசேர் மடமாதை ஆடவிட்டு
நுழைந்திற்று நச்சரவக் கூட்டம் உள்ளே

விதி என்ருன் வேதமருள் போதமென்ருன்
வையகமே ஆரியர்க்குச் சொந்தமென்ருன்
இதிகாசம் இறைவனது ஆணே என்ருன்
எதிர்ப்பவர்க்குப் பாழ் நரகம் கிடைக்குமென்ருன்
மதி இழந்த திராவிடபூபதி சென்றந்த
மதக்குருவின் கைபாவை ஆனதாலே

சதிசெய்த ஆரியர்கள் மேம்பாடெய்தச்
சிதைவுற்றுத் திராவிடர்கள் வீழ்ச்சி கண்டார்

இடியட்டும் மதக்கோட்டை இருள் ஒழிந்து
இன்ப ஒளி நல்கட்டும் புதுமைத் தீபம்
படியட்டும் புழுதியுடன் புராணக் குப்பை
பாழடைந்து போகட்டும் ஆலயங்கள்
மடியட்டும் மதக் குருமார். மடமை நீங்கி
மலரட்டும் பகுத்தறிவு மணம் வீசட்டும்
விடியட்டும் பொதுவுடைமை இன்பக்காலை
விளங்கட்டும் கதிரொளி போல் மக்கள் வாழ்வு.

'நல்லதம்பி'

# நான்முகம்

உலகத்திலேயே இன உணர்ச்சியற்ற ஒரு சமுதாயத்தைக் காண வேண்டுமேயானால், அது இன்றைய திராவிட நாட்டில் வதியும் திராவிட மக்களைத் தவிர வேறெங்கேயுமே காணமுடியாது.

திராவிடர்கள் தமக்கென்று ஒரு 'தனித்துவம்'' கொள்கையின் பேராலோ—நாட்டின் பேராலோ—மதத்தின் பேராலோ சமைத்துக்கொண்டு தனித்து இயங்க வேண்டும் என்ற அடிப்படைத் திட்டம் தீட்டிக்கொண்டு திகழாததாலோ, அல்லது பல ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன் திராவிடத்தில் வந்து புகுந்த ஆரியர்களின் சூழ்ச்சிக்கு அடிமையாக்கப்பட்டு விட்டதாலோ தான் திராவிடர்களின் சந்ததிகளுக்கு மேற்கூறியபடி இன உணர்ச்சி அற்றுப்போயிருக்கவேண்டும்!

இன்றும் திராவிடர்கள் தம் நாட்டைத் தாங்களே ஆள முடியாத அடிமைகளாயும், இந்து-கிறிஸ்துவ-முஸ்லிம் முதலிய அன்னிய மதங்களால் ஆக்கிரமிக்கப் பட்டவர்களாயும் இருந்து வருகின்றனர்.

எனவே, திராவிட இன உணர்ச்சி அற்று வீழ்ச்சி உற்றுக் கிடக்கும் திராவிட சமுதாயச் சந்ததிகளுக்கு ஒரு சிறிதேனும் விழிப்பூட்டுவதற்கு இந்நாடகம் உதவுமேயானால், அதுவே இந்நூலை எழுதியதின் பயனாகும்.

மேலும், இந்நூலைப்பற்றி நூன்முகமாக நான் ஏதும் எழுதவேண்டிய அவசியமின்றி மிக்கத் தெளிவாகவும், ஆணித்தரமாகவும் தனது குத்தூசி நடையில் சிறப்புரை வழங்கியுள்ள 'விடுதலை' ஆசிரியர் எஸ். குருசாமி பி.ஏ., அவர்கட்கும், மதிப்புரை தீட்டியுள்ள நடிகவேள் எம். ஆர். ராதா அவர்கட்கும், சிறப்புப்பாவும், பாயிரமும் பாடியுள்ள தோழர் 'நல்லதம்பி' அவர்கட்கும் எனது மனமார்ந்த நன்றி.

'விவேகி'

# உறுப்பினர் குறிப்பு

| | | |
|---|---|---|
| திராவிடபூபதி | ... | திராவிடர் தலைவன். |
| திராவிட மாபாடி | ... | ,, புலவன். |
| மீளிப்பாகன் | ... | ,, அமைச்சன். |
| பூங்குன்றன் | ... | ,, தளபதி. |
| மாமல்லன் | ... | ,, மன்றத் தலைவன். |
| மல்லன் | ... | ,, அம்பலகாரன். |
| பூமகள் | ... | திராவிடபூபதியின் மனைவி. |
| பூங்கோதை | ... | ,, மகள். |
| மல்லி | ... | மல்லனின் காதலி. |
| ப்ருத்வி | ... | ஆரியர் தலைவன். |
| ப்ரஹஸ்பதி | ... | ,, குருதேவ். |
| அக்னீத்ரன் | ... | ,, தளபதி. |
| உபஹாதா, ஹோதா, ப்ரஸ்தோதா, ப்ரதி-ஹர்த்தா. | | ப்ரஹஸ்பதியின் சீடர்கள். |
| ஊர்வஸி, இரம்பை, திலோர்த்தமை, மேனகை. | ... | ஆரிய ஆடல் அணங்குகள். |

—:O:—

## உ டை :

திராவிடர்களாய் வேடம் பூணுவோர் விலங்குகளின் தோல்களை ஆடைகளாகவும், அதன் கொம்பு, பற்கள், நகம் முதலியவைகளை ஆபரணங்களாகவும் அணிந்து கொள்ள வேண்டும்.

ஆரியர்களாய் வேடம் பூணுவோர் மரங்களின் பட்டைகளையும், இலை குலைகளையும் ஆடைகளாகவும், அதன் கொட்டைகளையும், தோடுகளையும் ஆபரணங்களாகவும் அணிந்து கொள்ளவேண்டும்.

## மே டை :

நீல நிற வானையும், காடு மலை வனாந்தரங்களைக் குறிக்கும் பூமியையும் சித்தரித்துக் காட்டும் காட்சிகளே இந்நாடக மேடையாகத் திகழவேண்டும்.

மற்ற விபரங்களை நேரிலோ, எழுத்து மூலமாகவோ, 'திராவிட கலாநிலைய' நிர்வாகி இடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

நிர்வாகி,
திராவிட கலாநிலையம்.

# “திராவிட பூபதி”

## (விவேகி)

### காட்சி 1.

இடம் : சென்னைக் கடற்கரை, காலம் : மாலை.

[பொதுக் கூட்டம்]

உறுப்பினர்.— பெரியார், தளபதி, பாடகர், ஒரு பார்ப்பனர், பொது மக்கள்.

நிகழ்ச்சி:— [பெரியார் தலைமையில் தளபதி பேசிக்கொண்டிருக்கும்போது ஒரு பார்ப்பனர் கொடுத்த கேள்வித் தாளிற்குப் பதிலளிக்க நேரிட்டதால், திராவிடத்தைச் சிதைத்த ஆரியர் வரலாற்றை, வேதகாலச் சரித்திரச் சான்றோடு கற்பனாலங்காரக் கதையும் புனைந்ததோர் நாடக வடிவிலே நவில்கிறார்.]

ஆரம்பப் பாடல்

பாடகர்:— [மேடை மீது வைக்கப்பட்டுள்ள ‘மைக்’ முன் நின்று பாடுகிறார்.]

வாளேந்தி வா திராவிடா! வீணர்களை வீழ்த்தடா!!

வான் புகழ்ந்தேற்றவே வையகம் போற்றவே
வீரப் பண்பாடடா!!! (வாளே)

கோழைகள் போல அஞ்சி மாள்வதோ?
குண்டர்கள் இன்னும் இங்கே வாழ்வதோ?
(வாளே)

முன்னோர்கள் வானுயர்ந்து வாழ்ந்தநாட்டிலே
மூவேந்தராண்ட நாட்டிலே—

வாழ்க்கை நலிந்ததே—வீரம் புதைந்ததே
வைதீகம் என்ற சேற்றிலே (வாளே)

ஆரியக் கோட்டைகளை தாக்கடா
அஞ்ஞான வேதங்களை நீக்கடா
பாரோர் புகழ் திராவிடர்கள்
பண்பாட்டினை போற்றடா
போர் திறங்காட்டடா! வெற்றி கொண்டாடடா
(வாளே)

[பாடி முடிந்ததும் மேடையை விட்டகல்கிறார்.]

பொது மக்கள்:— [பலத்த கையொலி செய்கின்றனர்.]

பெரியார் :— [தலைமைப் பீடத்திலிருந்து எழுந்து]

பேரன்புடைய பெரியோர்களே! தாய்மார்களே!! தோழர்களே!!!

இக்கூட்டம், திராவிடர் கழகக் கொள்கைகள் பற்றி விளக்கம் கூறுவதற்காகக் கூட்டப்பட்டுள்ள கூட்ட மாகும்.

'திராவிடர் கழகம்' என்ற பெயர் 1944-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 27-ம் தேதி சேலத்தில் கூடிய S. I. L. F. அதாவது 'ஜஸ்டிஸ்' கட்சியின் 16-வது மாநில மாநாட்டில் அக்கட்சிக்குச் சூட்டப்பட்ட ஒரு பழம் பெயராகும்.

திராவிடர் கழகத்தின் கொள்கைகள் என்னென்ன என்றால், முதலாவது: இந்திய 'உபகண்டத்தின் மத்திய அரசாங்க ஆதிக்கத் தொடர்பிலிருந்து விடுதலை பெற்று சுதந்தரம் அடைவது; இரண்டாவது: திராவிட இனங்களின் சுயநிர்ணய ஆட்சிகளை அமைத்து, ஐக்கியச் சமதர்மக் குடியரசை நிறுவுவது; மூன்றாவது: மத ஆதிக்கத்தைச் சிறுகச் சிறுக ஒழித்து விஞ்ஞான வளர்ச்சியைத் துரிதமாய்ப் பெருக்குவதுமேயாகும்.

இனி, இவற்றைப் பற்றி மிகவும் அழகாகவும், ஆழமாகவும், அகலமாகவும், அணியலங்கார அடுக்குத் தொடர்ச் சொற்களோடும் சொற்பொழிவாற்றும் திறமை வாய்ந்த நமது தளபதி அவர்கள் உங்கள் முன் தோன்றிப் பேசுவார்கள்,

[எனக் கூறி அமர்கிறார்]

பொது மக்கள் :— [கை தட்டல் புரிகின்றனர்]

தளபதி :— [மேடை மீது வந்து நிற்கிறார்]

பொது மக்கள் : [நீண்ட நேரம் கை தட்டல் புரிகின்றனர்]

தளபதி :—அன்புள்ள தலைவர் அவர்களே ! அருமை அன்னைமார்களே !! ஆர்வமிக்கத் தோழர்களே !!!

நாம் யார் ? நம் நாடு எது ? நமது பண்பாடு என்ன? என்ற எண்ணத்தை, ஏற்றத்தை, எழுச்சியை எல்லாம் மறந்திருக்கிறோம்-மறக்கடிக்கப் பட்டிருக்கிறோம், ஆரியர் கோட்டையாகிய இந்து மதம் எனும் இருட் குகைக்குள் நுழைக்கப்பட்டுச் சாதிப் பிரிவினைகள் எனும் சாக்கடைக்குள் மூழ்க்கடிக்கப்பட்டிருப்பதால்.

வடக்கே விந்திய மலையையும், மற்ற மூன்று திசைகளிலும் முழங்கும் முத்துக் கடலையும் இயற்கை எல்லையாய் கொண்டு வளமிக்கதாய் விளங்கும் நமது திராவிடத்தைத் திக்கற்ற—நாதியற்ற நாடாக ஆக்கி விட்டிருக்கிறோம் இன்று.

அன்றொரு காலத்தில் கடல் வாணிபம் நடத்தி, நாவாய்கள் பல ஓட்டித் தமது புகழ் நாவலந் தீவு மட்டுமின்றி உரோமாபுரியிலும், சிங்கை மா நகரிலும், சீனத்துத் தெருவிலும் பரிமளிக்க வாழ்ந்தவர் நமது முன்னோர்கள் என்று சங்க இலக்கியங்கள் பலவும்—சரித்திரங்கள் சிலவும் சான்று பகர்கின்றன.

இன்றும் விசாகபட்டினம், காக்கிநாடா, பிம்பிலி பட்டினம், மசூலிபட்டினம், சென்னை பட்டினம், கடலூர், புதுச்சேரி, காரைக்கால் நாகபட்டினம் தனுஷ்கோடி, தூத்துக்குடி, தெல்லிச்சேரி, ஆலப் புழை, கொச்சி, கொல்லம், மங்களூர், முதலிய பதி னாறு துறைமுகங்களையும் மற்றும் பல கடல் சார்ந்த பட்டினங்களையும் உடையதாய் நமது திராவிட நாடு திகழ்கிறது.

இயற்கை இவ்வளவு வளத்தையும் வசதியையும் நம் நாட்டிற்கு அளித்திருந்தும். நாம் ஏமாந்து கொண்டிருக்கிறோம்—ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக் கிறோம்.

"எப்படி வாழ்வது தனியாக பிரிந்து?" என்று நம் சகோதரர்களில் கூடச் சிலர் சஞ்சலத்தோடு பேசுகின்றனர்! சந்தேகத்தோடும் கேட்கின்றனர்!!

"திராவிட நாட்டு ஆட்சியை, இந்திய உபகண்டத்தின் மத்திய அரசாங்க ஆதிக்க தொடர்பிலிருந்து விடுதலை பெற்று தனியாகப் பிரிக்க வேண்டும் என்று முழக்கமிடுகிறீர்களே! பிரிந்தால், எப்படி வாழ்வது? வியாபாரம் ஒரு நாட்டின் இன்றியமையாத தொன்றல்லவா? வட நாடு தானே அதற்கு அருகதை உள்ளதாக இருக்கிறது? அங்கிருந்து தானே வர்த்தகங்களெல்லாம் நடை பெறுகின்றன?" என்றும் கேட்கப்படுகிறோம்!!!

உண்மைதான். வர்த்தகம் வளர்ந்திருக்கத் தான் செய்கிறது வட நாட்டில்! காரணம், வளம் நிறைந்தது வடநாடு என்பதாலோ, தென்னாடு வரண்ட பாலைவனம் என்பதாலோ அல்ல! வளம் இங்கு இருக்கிறது ஏராளமாக; ஆனால், வழிதான் இல்லை அவை வளர!

வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் மூலப் பொருள்களில் முக்கியமான பலவும் தென்னாடாகிய நமது திராவிட நாட்டிலிருந்துதான் செலகின்றன!

துறைமுகங்கள்நிரம்பிய தென்னாடு சோர்ந்து கிடக்கிறது—தொழில் வளமில்லாததால்! ஏராளமான துறைமுகங்கள் இருந்தும், வெளிநாட்டு வர்த்தகம் கொழிக்கும் வகைஇருந்தும் ஏழையாக இருக்கிறது!!

துறைமுகங்கள்—திரைகடல்—இயற்கை நமக்குத் தந்திருக்கும் பரிசு! எனினும், நாம் இயலாதவர்களாக இருக்கிறோம்—நம் நாடு தொழில் துறை வளராத நாடாக இருக்கிறது!!

வறுமை புயல் வீசுகிறது திராவிடத்தில்! செல்வ தென்றல் பவனி வருகிறது வடநாட்டில்!! சோலை இருக்கிறது இங்கு; எனினும் துன்பம் தீர்க்கும் தென்றல் வீசுகிறது இங்கல்ல—அங்கு! இது ஏன்? பதில் தரவேண்டாம், உங்கள் இதயத்தையே கேளுங்கள்; 'இந்நிலை நீடிக்கலாமா?' என்ற கேள்வி எழும்பும்.

ஒரு பார்ப்பனர்:—நிறுத்து! முதலில் இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லு!

[எனக் கூறிக் கொண்டே எழுந்து வந்து ஒரு கேள்வி தாளைக் கொடுக்கிருர்]

தளபதி :— [அக்கேள்வித் தாளை வாங்கிப் பொதுவில் படித்துக் காட்டி விட்டு தொடர்ந்து பேசுகிருர்.]

"ஆரியராவது? திராவிடராவது? இதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?"

இந்தக் கேள்வியைக் கேட்கும் தோழர், மூன்ருவது வகுப்பு வரையில் கூடப் பள்ளியில் படித்தறியாத முழுமகனுகத் தான் இருக்கவேண்டும்.

நம் நாட்டு மாணுக்கர்களுக்கு, மூன்ருவது வகுப்பி லிருந்தே இந்தியச் சரித்திரப் பாடம் போதிக்கப்படு கிறது. அப்பாடத்தின் முதலாவது அத்தியாயத் தில், "திராவிடர்களே இந்தியாவின் பூர்வ குடிகள்" என்றும்; இரண்டாவது அத்தியாயத்தில், ஆரியர்கள் மத்திய ஆசியாவிலிருந்து ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டு 'கைபர்' கணவாய் வழியே இந்தியாவிற் குள் வந்து குடியேறியவர்கள்" என்றும் தெளிவாகச் சிறுவர்களும் புரிந்து கொள்ளும் விதமாகச் சரித்திரப் பேராசிரியர் பலர் ஏக மனதாக எழுதி வைத்திருக் கின்றனர்.

இது மாத்திரம் இன்றி இன்னும், ஆரியர்களே எழுதிய 'ருக்' முதலான வேத மந்திரங்களின் சுலோ கங்கள் பலவும் 'ஆரிய-திராவிட' போராட்டங்களைக் குறிப்பவைகளாகவே இருக்கக் காண்கிருேம்! ஆதலால், அவற்றைப் பற்றிய ஒரு கற்பனைக் கருத் தோவியத்தை வேத காலச் சரித்திர முலாம் பூசிக் காட்டுகின்றேன் கேள்வி கேட்ட தோழருக்கு! அதே சமயத்தில், அவருக்கு வாய்த்த இந்த அருமையான சந்தர்ப்பத்தை, இங்கு குழுமியுள்ள அனைவரும் பயன்படுத்திக் கொள்வதில் எனக்கு எவ்வித ஆட் சேபனையும் இல்லை!!!

## காட்சி 2. [வட மேற்குக் கணவாய்கள்]

உறுப்பினர்:— ப்ரஹஸ்பதி, ப்ரஸ்தோதா, ப்ரதிஹர்த்தா, ஹோதா, உபஹாதா, அக்னீத்ரா, ப்ருத்வி, இரம்பா, ஊர்வஸி, திலோர்த்தமா மேனஹா, ஆடு மாடு கன்று காளைகள் முதலியன.

நிகழ்ச்சி:— [ஆரியர்கள் ஆடுமாடுகளோடு வடமேற்குக்கண வாய் வழியேஇந்தியாவிற்குள் நுழைகின்றனர்.]

### ஆரியர் பாடல்

ஆடவர்:—
ஸாஸ்வதம்மோ வாதையே—
ஜீவனும்ஸப் பாதையே—இச்
ஜீவனும்ஸப் பாதையே [ஸாஸ்]

பெண்டிர்:—
நேற்று அங்கே இன்று இங்கே—
நாளை நாமும் எங்கேயோ—ஹாய்
நாளை நாமும் எங்கேயோ [ஸாஸ்]

ஆடவர்:—
மேஷ ரிஷபம் உய்யவே
மேய்ச்சல் நிலத்தைச் சேருவோம்—நாம்
மேய்ச்சல் நிலத்தைச்சேருவோம் [ஸாஸ்]

பெண்டிர்:—
பர்வதங்கள் எதிரிலே
பாதை உண்டோஇடையிலே—நடை
பாதை உண்டோ இடையிலே [பர்வ]

ஆடவர்:—
ஆடுமாடு மேயவே—
அலைந்து பாதை காணுவோம்—நாம்
அலைந்து பாதை காணுவோம் [ஆடு]

ஆடவரும் பெண்டிரும் }
வாஸ்தவமோ வாதையே—
ஜீவனும்ஸப் பாதையே—நம்
ஜீவனும்ஸ பாதையே [ஸாஸ்]

ஆடவர்:—
ஹா.........ஹா......ஹா......ஹா.........

பெண்டிர்:—
ஹோ......ஹோ......ஹோ......ஹோ.....

ஆடவரும் பெண்டிரும் }
அதோ அதோ தோன்றுதே
பாதைபோலத் தோன்றுதே—ஒரு
பாதைபோலத் தோன்றுதே

அந்தக் கணவாய்தன்னிலே
புகுந்து சென்று பார்ப்போமே—நாம்
புகுந்து சென்று பார்ப்போமே

ப்ரஹஸ்பதி:— ஆஹ்ா? கணவாய்க்கு அப்பாலே...?

மற்றவர்கள்:— நம்—கனவு நினைவாகிடுமே,
கனவு நினைவாகிடுமே
கனவு நினைவாகிடுமே......

———

## காட்சி 3. [திணைப் பரண் குன்றம்]

உறுப்பினர் :— பூங்கோதை, மல்லி, பூங்குன்றன்.

நிகழ்ச்சி :— [திராவிடப் பூமகளின் மகள் பூங்கோதை தன் தோழியோடு, திணைக்குன்றில் கட்டப்பட்டுள்ள பரணுக்குப் பரண்தாவிப் பறவைகளை விரட்டியும், ஆல விழுதில் ஊஞ்சலாடியும் மகிழ்ந்திருக்கும் சமயம் அவள் காதலனாகிய பூங்குன்றன் அங்கு வந்து அவளோடு அளவளாவிக் கொஞ்சிக் குலாவிச் செல்கிறான்.]

### ஆலோலப் பாட்டு

கோதை }
மல்லி } சோ...சோ...சோ..!

கோதை:— அங்குமிங்குமெங்கும் பறவைகள்—
வந்து திணைகளைக் கவர்ந்து செல்லும்
விந்தையை பாராய்—தோழி— (அங்கு)

மல்லி:— சொந்த முயற்சியாலே—வியர்வைதனை
சிந்தியனு தினம் உழைத்ததினாலே—
கந்தங் கமழு மலர்ச் சோலையும்—விளைதரும்
கழனிகளும் அமைத்தோம்—பறவைகள்
வந்து கவருதல் விந்தை காட்சியோ
எந்தக் காட்டுப் பண்போ? தோழி!

கோதை:--- இயற்கையன்னையின் இல்லங் கொழித்திடும்
பயன்தரு விளைவும் பல் பொருளும்
எந்த உயிர்க்குமே சொந்தமென்றேதும்
சிறந்த பண்பாலே—பறவைகள்
வந்து தினைகளை கவர்ந்து செல்வதும்
விந்தை காட்சியன்றோ? தோழி— [அங்கு]

கோதையும் மல்லி } சோ...சோ...சோ......

[எனப் பாடியவண்ணம் ஆலம் விழுதுகளில் ஊஞ்சலாடிப் பரணுக்குப் பரண் தாவிப் பறவைகளை விரட்டி விளையாடிக் கொண்டிருக்கின்றனர்.]

குன்றன்:— [கரத்தில் எஃகாலான கூறிய வேலாயுதத்தைப் பற்றியவண்ணம் வேகமாய் வந்து கொண்டிருக்கும்போது, வழியில் மதம் பொலியும் யானை ஒன்று எதிர்ப்பட்டதால், அதன் மத்தகத்தின் மீது வேலெய்து வீழ்த்தி விட்டு, அம்மாவீரச் செய்தி சொல்லப் பூங் கோதையை நோக்கி ஓடுகிறான்.]

கோதை:— [யானையின் அலறல் கேட்டுத் திடுக்கிட்டதால் அந்தரத்தில் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த ஆல விழுதின் பிடி தவறிக் கீழே விழுகிறாள்.]

குன்றன்:— [ஆலம் விழுதிலிருந்து தவறிக் கீழே விழும் பூங்கோதையைத் தரையில் விழுந்து படு காயப்படாவண்ணம் தன்னிரு கரமேந்தித் தாங்கிப் பிடித்துக்கொண்டு பெருஞ் சிரிப்புச் சிரித்து மகிழ்கிறான்.]

கோதை:— [பூங்குன்றனின் கைவேல் அவன் கையில் இல்லாததைக் கண்டு, அவனேதான் வேணுமென்றே அந்தக் காட்டானையைக் கதறடித்துத் தன்னைத் திடுக்கிட்டு விழச் செய்திருப்பான் என யூகித்துக்கொண்டு உடனே அவன் கரத்திலிருந்து துள்ளிக்கீழே குதித்து]

ஏன் இப்படிச் சிரிக்கிறாய்? எங்கே உன் கைவேல் ?

குன்றன்:— அந்தக் காட்டானையின் மத்தகத்தின மீது.........

கோதை:—போட்டு விட்டாயோ?

குன்றன்:—ஆமாம்.

கோதை:—சரி, போய் மீட்டுக்கொண்டு வா!

குன்றன்:—எதை?

கோதை:—உன் கைவேலை!

குன்றன்:—என்ன......!

[எனத் திடுக்கிடுகிறான்.]

மல்லி:— கோதை......?

[எனத் திடுக்கிடுகிறான்.]

கோதை:—சும்மா இரு மல்லி. நான் கவண் ஒரு கையிலும் விழுதொருகையிலுமாய் அந்தரத்தில் ஊஞ்சலாடும் போது, என்னைத் திடுக்கிட்டு விழச் செய்வதற்காகக் காட்டானை மீது கைவேல் எறிந்து அதைக் கதறடித்த இச் சூரப்புலி தன் கைவேலை மீட்டுக் கொண்டு வா என்றால், ஏன் கலங்க வேண்டும்?

குன்றன்:—கலக்கமா! எனக்கா.........?

[என விரைந்து திரும்புகிறான்.]

கோதை:—எங்கே போகிறாய்?

மல்லி:— ஏன் கேட்கிறாய்?

கோதை:— நீ சும்மா இரு மல்லி. இந்தா, உன்னைத் தானே! எங்கே போகிறாய்?

குன்றன்:— [சற்று நின்று ஆலோசித்துவிட்டு] ஊம்............! உம். ஏன் கேட்கிறாய்?

கோதை:— எனக்குத் தெரியும்! நீ தப்பி ஓடிவிடப் பார்க்கிறாய்!!

மல்லி:— அதெப்படி முடியும்?

கோதை:— நீ சும்......உம்! ஏன் முடியாது?

மல்லி:— நீதான் உன் காதல் கோட்டைக்குள் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறாயே!

கோதை:— மதங்கொண்ட காட்டானையின் மத்தகத்தைத் தகர்த்திடும் வேலாயுதத்தின் முன் என் கோட்டையும் பூட்டும் எம்மாத்திரம் மல்லி?

குன்றன்:—என் கைவேல் காட்டானையின் மத்தகத்தைத் தகர்த்திடலாம்! ஆனால், பஞ்சில் பாயுமோ?

கோதை:—என் கோட்டை பஞ்சு மூட்டையல்ல!

மல்லி:— கறுங்கற் பாறையாகவே இருக்கட்டுமே!

கோதை:— இருந்தால்......? பசுமரத்தின் வேர்போல் நுழைந்து என்னைப் பசப்பிவிட்டுத் தப்பி ஓடிப்போய் விட முடியாதோ...?

மல்லி:— ஓ...! முடியும் முடியும்!! இந்தப் பசப்பு இருக்கிறதே, இது இரம்பப் பொல்லாதது!!! இப்போது, இங்கு நான்கூட நிற்கக்கூடாது......

[எனக் கூறிவிட்டுச் செல்கிறாள்.]

கோதை:—ஏன்? மல்லி! எங்கே போகிறாய்...?...

மல்லி:— [திரும்பிப் பார்த்துச் சிரித்துவிட்டுச் செல்கிறாள்.]

கோதை: — [பூங்குன்றனை நோக்கி]
ஊம்......! நீ ஏன் நிற்கிறாய்?

குன்றன்:—உன் கட்டளையை நிறைவேற்றுவதற்காகத் தான்!

கோதை:—ஓகோ! சரி. நீ போய், அந்தக் காட்டானை மீது போட்ட உன் கைவேலை மீட்டுக்கொண்டு வா; போ.

குன்றன்: — [உடனே, பூங்கோதையின் முகத்தை ஏறிட்டுப் பார்த்துத் தலையை அசைத்துக் கொண்டு புறப்படுகிறான்.]

கோதை:— நில்! எங்கே போகிறாய்?

குன்றன்:—காதல் பரிசு பெறுவதற்காகக், காட்டானையிடம் போகிறேன்!

கோதை:—ஏது! சாதலுக்கே துணிந்துவிட்டாய் போல் இருக்கிறதே......?

குன்றன்:—நான் சாதல், விலங்கிடமல்ல! என்னிலும் வலிய வீரனிடம்!!

கோதை:— உன்னிலும் வலிய வீரன், உன்னை வெல்வானேயன்றிக் கொல்லமாட்டான்! ஆனால், விலங்கோ உன்னைக் கொன்றுவிடும்!!

குன்றன்:—அதை உனக்கு உணர்த்தத்தான், நான் அனுபவிக்கப் போகிறேன்......

[என மீண்டும் விரைகிறான்]

கோதை:—ஆ? அன்பா.........!

[எனத் திடுக்கிட்டு ஓடி வழி மறித்து நிறுத்தித் தழுவுகிறாள்]

குன்றன் :—இதெல்லாம், அந்தக் காட்டானைமீது போட்ட என் கைவேலை மீட்டுக்கொண்டு வந்த பிறகுதான்.

கோதை :—இல்லை ! வேண்டாம் !! நான் விளையாட்டாகப் பேசினேன் !!!

குன்றன்:—உம். நீ விளையாட்டாகப் பேசுவதற்கு நான் ஒரு வீணன் அல்ல—வீரன் !!

[என நெஞ்சை உயர்த்தி, அரும்பு மீசையை முறுக்குகிறான்.]

கோதை }
குன்றன் } [ஒருவரையொருவர் குறும்புப் பார்வை பார்த்துப் பூரித்துப் பொங்கிச் சிரித்து மகிழ்கின்றனர்]

கோதை:— [அந்த யானையின் வேதனைக் குரலைக் கேட்டு விட்டு]

அது என்ன சத்தம்?

குன்றன்:—அந்த யானையின் வேதனைக் குரலாய் இருக்கலாம்!

கோதை:—அம்படியா......? வா போய் பார்க்கலாம்.
[என அழைத்துச் செல்கிருள்]

குன்றன்:— [பூங்கோதையோடு யானை விழுந்து கிடக்கும் இடத்திற்குச் சென்று]

அதோ பார்! வீழ்ந்து கிடக்கிறது!!

கோதை:—ஆமாம். கொல்லன் உலையில் பொருத்திய பெரிய துருத்தியைப் போல், பெருமூச்சு விட்டுக் கொண்டு கிடக்கிறது.

குன்றன்:—ஆ! உன் உவமை மிகப் பொருத்தம்!!

கோதை:—அதோ, அந்த வேங்கை மரக் கிளைகளைப் பார்த்தியா? அந்த யானையின் பெரு மூச்சால், ஆடி அசைந்து அதன் பூக்களை உதிர்த்து ஆகாய வெளியில் அள்ளி இறைக்கின்றன...........

குன்றன்:—ஆம். அந்த யானை விடும் பெரு மூச்சால்த் தான் அம்மரக்கிளைகள் குலுங்கி மலர்களை உதிர்க்கின்றன!

கோதை:—அம்மலர்கள், கொல்லன் உலையிலிருந்து கிளம்பும் தீப்பொறிகள் போல் கிளம்பி, இரவில் தோன்றும் மின்மினி பூச்சிகள் போல் நாலா பக்கமும் பறந்து சென்று, பெரும் பெரும் புதர்களில் போய்த் தங்கிளுலும் தங்கும்!

குன்றன்:—ஆகா! உண்மையில் நீ ஒரு மாபெரும் கவியைப் போல் வர்ணிக்கிறாய்!!

கோதை:—ஆனால், அவ்வாறு தங்கும் அம்மலர்களின் நறுமணமும், தேனும் எல்லோர் மனதையும் கவர்ந்து எல்லோர்க்கும் இனிப்பது போல், பெரும் பெரும் புதர்களுக்கும் இனிக்குமோ?

குன்றன்:—என்ன? சிலேடையா.........?

[எனச் சற்றே சிந்தித்து விட்டு]

நல்லது! பூங்கோதை! உன் அறிவாற்றலைப் போற்றுகிறேன்! நமது களவொழுக்கத்தால் நீ கருவுற்றுவிட்டால், அச் செய்தி, என் கைவேல்பாய்ந்த காட்டானையின் பெரு மூச்சால் உதிர்ந்திடும் வேங்கை மலர்கள் போல் பரவி, அதன் மணம் போல் பலர் மனதைக் கவர்ந்து, அதில் உள்ள தேன்போல் சிலருக்கு இனித்தாலும். உனது பெற்றோர் உள்ளத்தைத் தீப்பொறிகள் போல் சுடும்! நமது பெருங்குடி மக்களின் செவிகளுக்கு எட்டினால், இழிவெனத் தங்கிவிடும் என்றுதானே எண்ணுகிறாய்?

கோதை:—அன்பே! அதுமட்டுமா? எத்தனையோ தடவைகளில் இரவென்றும் இருளென்றும் பாராமல் என்னைக் காண்பதற்காக அந்தக் கைவேல் ஒன்றையே துணையாகக் கொண்டு, பயங்கரமான நீர் வீழ்ச்சிகள் நிரம்பிய இம்மாமலையின் அடவிக்குள்ளே எதைப்பற்றியும் அஞ்சாது துணிந்து வந்திருக்கிறாயே, அந்தச் சமயங்களில் எப்போதாவது இம் மாதிரிக் காட்டானையோ, கடுவாயோ உன்னை எதிர்த்திருந்தால், என் கதி.........?

குன்றன்:—கண்ணே! கவலை ஏன்? வேங்கை மரந்தான் பூத்து விட்டதே! இதுதானே திருமண காலம்!! இன்னும் சில தினங்களில் பலபேர் அறிய நாம் திருமணமே செய்து கொள்வோம்.

[எனக் கூறிப் பூங்கோதையைக் கட்டி அணைந்து கொள்கிறான்.]

## காட்சி 4. [சிந்துநதிக் கரை]

உறுப்பினர்:—ப்ருத்வி, அக்னீத்ரன், ப்ரஸ்தோதா, உபஹாதா, ப்ரதிஹார்த்தா, ஹோதா, ப்ரஹஸ்பதி.

நிகழ்ச்சி:— [திராவிடத்தின் செழிப்பைக் கண்டு ஆரியர் பொருமைப்படுகின்றனர். பிறகு, ப்ரஹஸ்பதியின் மூலம் திராவிடத்தைச் சிதைக்கத் திட்டம் தீட்டுகின்றனர்.]

ப்ருதிவி:— [பொருமைக் கனல் மூளை யைக் குழப்பக் கூண்டுப் புலிபோல் உலாவிய பின்]

அக்னீத்ரா......! அக்...னீத்ரா...!! ஆக்னீத்ரா!!!

அக்னீ:—நமஸ்தே......!

[என அலறி ஓடி வருகிருன்.]

ப்ருத்வி:— க்ஷிரேஷ்டா! க்ஷீக்கிரம் வராததேன்?

அக்னீ:—ராஷ்ட்ரபதே! நமது ப்ரஹஸ்பதி, இந்த்ர லோக கந்தர்வ ஸுந்த்ரிகளின், ஸௌந்த்ரிய ஸம் போக ஷிலாக்கிய ஷாங்கோபாங்க உபன்யாஷ வரப்ர ஷாதம்......!! ஆ,ஹ்...ஹாஹா......

ப்ருத்வி:— க்ஷீ!

[என கோபிக்கிருன்.]

அக்னீ:—க்ஷமிக்க!!

[எனப் பணிகிருன்.]

ப்ருத்வி:— இந்த்ர்லோகம்? கர்ந்தர்வ ஸுந்த்ரி??? க்ஷேக்ஷக்ஷே!!! ஸர்வம் ஸொப்பன கோஷ்டம். மேஷ ரிஷப போஷக மன்ஷரில் ஸதா ஆஷா பாஷ ஷம்பா ஷன உபன்யாஷ மஹரிஷி......

அக்னீ:—ப்ரஸ்தோதா!

ப்ரஸ்தோதா:— [வந்து நிற்கிருர்.]

அக்னீ:—ப்ரதிஹர்த்தா!!

ப்ரதிஹர்த்:தா— [வந்து நிற்கிறர்.]

அக்னீ:—உபஹாதா!!!

உபஹாதா:— [வந்து நிற்கிறர்]

அக்னீ:—ஹோதா!!!

ஹோதா:— [வந்து நிற்கிறர்.]

ப்ருத்வி:—அக்னீத்ரா!

[எனக் கடுங்கோபமாய்க் கர்ச்சிக்கிறன்.]

அக்னீ:— [திடுக்கிட்டுத் துரிதமாய்]

அத்வர்யு, யக்ருதி, அச்சாவாஹ், ஆத்ரேயா, ப்ரஹஸ்ப...

ப்ருத்வி:—ஆத்ரமூட்டுறய்......!!

அக்னீ:—க்ஷமிக்க.

[எனப் பயந்து பணிகிறன்.

ப்ரஹஸ்பதி:—★"வேதாத் யயனம் ஸர்வம், குர்வத்யயன பூர்வகம் வேதாத்யயன ஸாமான்யதாது ஞத்யயனம்] யதா",

[எனச் சுலோகத்தைப் பாடியபடி வருகிறன்.

ப்ருத்வி:—நமஸ்தே ப்ரஹஸ்பதி!

ப்ரஹஸ்:— ப்ருத்வி! வேதம்-மஹரிஷி ஸாமான்யமோ? பரிஹஷிப்பது விஸ்வாஸ காதகம்.

ப்ருத்வி:—மஹரிஷி......!

ப்ரஹஸ்:—போதும். ஆத்ரம் ஆரோஹரித்ததேன்?

ப்ருத்வி:—பொறுமை!

---

★வேதம் கற்றுக் கொடுப்போர் மற்றெரு குருவினிடமிருந்து கற்றுக் கொண்டவர்கள். ஆதலால், வேதம் நித்தியமானது.

ப்ரஹஸ்:—பொருமை?

ப்ரஸ்தோ:—பொருமை??

ப்ரதிஹர்:—பொருமை???

உபஹாதா:— பொருமை????

ஹோதா:— பொருமை?????

அக்னீ:— ஆம் பொருமையே. பஞ்ச ஜீவநதி! சிரஞ்ஜீவித புல் புலம்!! ஸாஸ்வத நவதான்யப் பூமா தேவி!!! நவரெத்னஹாரப் பர்வதம்!!!! குபேர சம்பத்!!!!! ஸர்வமும் அங்கே.........

ப்ருத்வி:— மேஷம், ரிஷபம், ரோமம், கூடாரம்: கொம்பு இங்கே.

ப்ரஹஸ்:— ப்ருத்வி! உன் பொருமைக்கு இதுதான் காரணமா?

ப்ருத்வி:— ஆம். இன்னும் எத்தனே வருஷம், இந்த மேஷ ரிஷப ஸமேதராய் ஸதா ஸஞ்சலத்தோடு ஸஞ்சாரம் செய்வது?

ப்ரஹஸ்:—வேறென்ன ஸெய்வோம்?

அக்னீ:—திராவிடரைச் ஸம்ஹாரம் ஸெய்வோம்!!

ப்ருதிவி:— ஆரிய ஸாம்ராஜ்யம் ஸ்தாபிதம் ஸெய்வோம்!!

ப்ரஹஸ்: — ஸாந்தி—அக்னீத்ரா! நீ ஸுலபமாய் ஸம்ஹாரம் ஸெய்ய, திராவிடர், நாம் மேய்க்கும் மேஷ ரிஷபங்கள் அல்ல!!

ப்ருத்வி:— மஹரிஷி?

ப்ரஹஸ்:—உம். மேஷ ரிஷபம் மேய்க்கும் நம் அப்பியாஷம், அஸ்திர சஸ்திர ஆயுத பலம், யுத்த தந்திரம், காவல் கோட்டை, க்ஷுரச் ஸேனே இத்தனேயும் உடைய திராவிடரைச் ஜெயிக்குமா?

அக்னி:—அப்போ......! பொருமை புகைந்து போவ்தா?

ப்ரஹஸ்:—ஆம். புகைய வேண்டியதே!

ப்ருத்வி:—என்ன......?

ப்ரஹஸ்:—யாஹ குண்டம்!

ப்ருத்வி:—தண்ட போஜனம்!!

ப்ரஹஸ்:— [கர்வமாய் நகைத்துவிட்டு]

ப்ருத்வி......? ஆர்ய ராஷ்ட்ரபதி! ஆயின், மஹரிஷியின் உபாயத்தைக் கிரஹிக்க வேண்டும்.

ப்ருத்வி:— உபாயமா?

ப்ரஹஸ்:—ஆம். யாஹக் குண்டம்? இனித் தண்ட போஜனம் மாத்ரமல்ல; ஆர்ய ஸாம்ராஜ்ய ஸ்தாபித உபாய குண்டம்.

அக்னி:—ஓ......ஹோ......!

ப்ரஹஸ்:—வேதம்! இனி வீண் கோஷ்டம் மாத்ரமல்ல, ஆர்யனைப் ப்ராஹ் மணனுக்கும்—திராவிடனைச் சூத்திரனுக்கும் சூட்ச்சமம்!!—மந்த்ர ஸ்லோகங்கள், திராவிட பூபதியின் சூரச்சேனையை மாய்க்கும் தந்திர ஜாலங்கள்!!!

ப்ருத்வி
அக்னி } :— ஆஹா! மஹரிஷே......!!

[என மண்டியிட்டுப் பணிகின்றனர்.]

ப்ரஸ்தோதா
ப்ரதிஹர்த்தா
உபஹாதா
ஹோதா } :—ஜெய்......! ஜெய விஜயீ பவா......!!

ப்ரஹஸ்:— ததாஸ்த்து!!!

[எனக் கூறிவிட்டு மஹரிஷிகள் புடை சூழச் செல்கிருர்.]

ப்ருத்வி:— [கண்களைத் திறந்து எழுந்து பார்த்தபோது மஹரிஷிகள் மறைந்து விட்டதறிந்து.]

ஷிரேஷ்டா!

அக்னீ:—ராஷ்ட்ரபதே!

ப்ருத்வி:—நிஷ்டை நீங்கட்டும்.

அக்னீ:—மஹா கஷ்டம்!

ப்ருத்வி:—க்ஷீ!

அக்னீ:—க்ஷமிக்க

[எனப் பயந்து பணிகிருன்.]

ப்ருத்வி:—நாம் என்ன தான் மேஷ ரிஷப போஷக மனுஷ ரேனும், நமது பூ தேவாதி தேவ......

அக்னீ:—ப்ரஹஸ்பதி, யக்ருதி, ப்ரஸ்தோதா, ப்ரதிஹர்த்தா, உபஹாதா, ஹோதா......போதா?

ப்ருத்வி:—போதும் போதும் போதும்......

அக்னீ:—இத்யாதி சத் புருஷோத்ம மஹரிஷிகளின் யாஹ குண்டங்களுக்காகத் தோண்டப்படும் ஒவ்வொரு பள்ளமும்......

ப்ருத்வி:—திராவிட ஸாம்ராஜ்யத்தைப் புதைக்கும் பாதாளமாகும்...ஆஹ ஹ ஹ ஹ ஹ ஹ ஹ ஹி......

[எனக் கொக்கரித்துச் செல்கின்றனர்.]

## காட்சி 5. [எண் பேராயம்]

உறுப்பினர்:—திராவிட பூபதி, திராவிட பூமகள், புலவன் மாபாடி, அமைச்சு மீளிப்பாகன், தளபதி பூங்குன்றன், இளவரசி பூங்கோதை, மன்றத் தலைவன் மாமல்லன், அம்பலகார மல்லன், ஆயத்துமல்லி.

நிகழ்ச்சி:— [அறிவாற்றலோடும் மகிழ்ச்சியோடும் வாழும் திராவிடரின் அரசியல் பொருளியல், போரியல் பண்பாடுகளை எண் பேராயத்தில் தலைமை வகிக்கும் புலவன் மாபாடி மென்மேலும் வளர்ச்சி அடையச் செய்கிறான்.]

பூபதி:—புலவர் பெருமானே! அவை ஆரம்பமாகலாமே!!

மாபாடி:—எண் பேராயம் என்றென்றும் வாழ்க! இன்று இவ்வயத்தில் மன்றத் தலைவன் மாமல்லன் உணவுத் தாவரங்களின் சீர்திருத்தம் பற்றிய ஆலோசனையைக் கூறலாம்!

மாமல்லன்:—ஊம். இந்தக் கிழங்கும், வாழையும், மருத நிலத்தில் பயிர் செய்யப்பட்டவை-இதோ, இந்தக் கிழங்கும், வாழையும் குறிஞ்சி நிலத்தில் பயிர் செய்யப்பட்டவை-இதோ இருக்கின்றனவே இவைகள் காட்டில் தம்மிச்சையாய் விளைந்த கிழங்குகளும்; வாழைகளும் ஆகும். இவை ஒவ்வொன்றிலும் உள்ள தோலிலும், உணவுச் சத்திலும், கொட்டையிலும் கூடப் படிப்படியான மாறுபாடுகளிருக்கின்றன. ஆதலால், சீர்திருத்தப்பட்ட மருத நிலத்தில் கிழங்கையும் வாழையையும் பயிர் செய்ய முயல்வதின் மூலம் கிழங்கில் இயற்கையாய் உள்ள கசப்பையும், தடித்த தோலையும்-வாழைப் பழத்திலுள்ள கொட்டையையும், தடித்த தோலையும் கொஞ்சங் கொஞ்சமாய்ப் போக்கி விட்டு, அவைகளில் மெல்லிய தோலும், தோலுக்குள் முழுவதும் சத்து நிறைந்த சுவையான உணவுப் பொருளும் உண்டாகும்படி செய்யலாம்.

பூமகள்:—மன்றத் தலைவன் மாமல்லன் கூறிய இவ்வா லோசனையை நான் மிக்க ஆர்வத்தோடு வரவேற் கிறேன்! இயற்கையில் தாவரங்களெல்லாம் விதை களிலிருந்தே முளைத்தாலும், நாம் நம் முயற்சியால் விதைகள் இல்லாமலே பல தாவர இனங்களை முளைக் கச் செய்ய முடியும்!! அப்படிச் செய்வதினால், விதை களில் உள்ள சத்தும் பழங்களிலேயே சார்ந்து அதிக நிறையும், சுவையும் உள்ள உணவுப் பொருட்களாகி விடக் கூடும்!!!

பூபதி:—விதைகளின்றி கிழங்குச் செடியையும், வாழை மரத்தையும் எப்படிப் பயிர் செய்ய முடியும்?

மீளிப்:—கிழங்குச் செடியின் வேர்களிலிருந்தே கிழங்கு களையும், வாழையின் அடிமரத்திலிருந்தே வாழை யடி வாழையாய் வாழையையும் பயிர் செய்ய இயலும்படி அவைகளைச் சீர்திருத்தி அமைத்து விடலாம்.

பூபதி:—அவ்வாறே முயற்சி செய்து நம் விவசாயிகளுக்கு வழி காட்டும்படி அமைச்சைக் கேட்டுக் கொள் கிறோம்.

மாபாடி:—அடுத்தபடியாகப் பருத்திச் செடியில் உள்ள ஒரு புதிய அநுகூலத்தைப் பற்றிய ஆலோசனையை அம்பலகார மல்லன் கூறக் கூடும்.

,டில்லன்:—பருத்திச் செடியிலிருந்து நமக்குக் கிடைக்கும் பருத்திக் கொட்டை, நம்மோடு ஒத்துழைக்கும்படி பழக்கப்பட்டுள்ள நம் நாட்டு விலங்குகளுக்கு நல்ல வலுவூட்டும் உணவு என்பது நாம் அறிந்ததே!

ஆனால், அப்பருத்திக் கொட்டையோடு ஒட்டிக் கொண்டிருக்கும் இந்தப் பஞ்சைக் கழிவு பொருள் எனக் கருதிக் குப்பையில் போட்டு விடுகிறோம்!!

இனிமேல், அவ்வாறு போட்டுவிடாமல் பஞ்சையும் சேகரிக்க வேண்டும். ஏனென்றால் இப்பஞ்சிலிருந்து இவ்வாறு நூல் நூற்கலாம்! நூல்களிலிருந்தும் உடை நெய்து உடுத்தலாம்!!!

மல்லி:—அம்பலத்தின் ஆலோசனையை நான் ஆதரிக்கிறேன். பஞ்சிலிருந்து நூல் நூற்கவும், உடை நெய்யவும் இயலும்! ஆனால், இதற்கு வேண்டிய நிசவுக் கருவிகளை செய்யக் கற்றுக்கொள்ள வேண்டுமே?

பூபதி:—அக்கருவிகளைப் பற்றியும் ஆராய்ந்து, நம் மக்கள் இப்புதிய அநுகூலத்தை அடைவதற்குத் தக்க உதவி செய்யுமாறு அமைச்சைக் கேட்டுக்கொள்கிறோம்.

மாபாட்டி:—இப்போது, தளபதி பூங்குன்றன் நம் நாட்டு எல்லைப்புறக் காவல் சுவர்களின் சீர்திருத்தம் பற்றிய ஆலோசனையைக் கூறலாம்!

குன்றன்:—நாம் நம் நாட்டைக் காவல் புரிய வேண்டிய பொறுப்புடையவர்களாவோம். நம் நாட்டின் மீது படை எடுத்து வரக்கூடிய பகைவர்கள் உண்டோ, இல்லையோ நாம் அறியோம்! ஆனால், கொடிய விலங்குகள் நம் நாட்டிற்குள் இருட்டு வேளையில் புகுந்து நாசம் செய்து விடாமல் பாதுகாப்பதற்காகவே நான்கு பக்கங்களிலும் காவல் சுவர்கள் எழுப்பி இருக்கிறோம்.

இக்காவல் சுவர்களின் அகலத்தையும், உயரத்தையும் இன்னும் சற்று விரிவாக்க வேண்டும். ஏனென்றால், இப்போதிருக்கும் அச்சுவர்களின் அகலமும், உயரமும் ஒருபெரிய வேங்கைப் புலி கொஞ்சம் கடினமாய் முயன்றால் தாண்டிவிடக்கூடிய அளவினதாக இருக்கின்றன.

கோதை:—தளபதியின் ஆலோசனையை நான் வரவேற்கிறேன். முக்கியமாக மலைச்சாரலில் கட்டப்பட்டுள்ள காவல் சுவரின் உயரத்தையாவது உடனடியாகக் கவனிக்க வேண்டும்.

காமராசர் ப
அ

பூபதி:—ஆம். மலைச்சாரலில் கொடிய விலங்குகளின் தொல்லை மிகைத்திருக்கக்கூடும்! நாம் வேட்டைக்குப் போய் வெகு நாட்களாகி விட்டன!! நம் நாட்டின் காவல் சுவர்களைச் சீர்திருத்தும் வேலையைத் தொடங்குவதற்கு முன், ஒரு முறையாவது வேட்டைக்குச் சென்று கொடிய விலங்குகளை நாட்டின் எல்லையை விட்டு வெகு தூரத்திற்கு அப்பால் துரத்தி விட்டு வர வேண்டும்!!!

மாபாடி:— சரி; இனி, வேட்டைக்குப் போக வேண்டிய ஏற்பாடுகளை நம் அமைச்சு உடனே கவனிக்கக்கூடும். ஆதலால், அமைச்சு மீளிப்பாகன் கூறயிருக்கும் சில சீர்திருத்த ஆலோசனையை அடுத்த தடவை நாம் இங்கு கூடும்போது ஆலோசிப்பதற்காக ஒத்தி வைத்துவிட்டு இன்று இவ்வவையை இத்துடன் இனிது கலைக்கிறேன்.

வாழ்க எண்பேராயம்!

வளர்க அறிவாற்றல்!!

---

## காட்சி 6. [காடு]

உறுப்பினர்:—திராவிட பூபதி, பூங்குன்றன், வேட்டை வீரர்.

நிகழ்ச்சி:— [சிங்கம், புலி, வேங்கை, சிறுத்தை, யானை முதலிய கொடிய விலங்குகளெல்லாம் கலங்கிச் சிதறி ஓடும் வண்ணம், கொட்டும் கொம்பும் முழக்கிக் காட்டைக் கலக்கி வேலும், வில்லம்பும் கொண்டு வேட்டையாடுகின்றனர்.]

வேட்டை வீரர்:— [கொட்டும் கொம்பும் முழக்கிக் கூக்குரல் போட்டுக் காட்டைக் கலக்கிக் கடுவாய், புலி, சிங்கம், யானை முதலியவற்றை மிரண்டோடச் செய்கின்றனர்.]

## வேட்டைப் பாட்டு

வேட்டையாடி வெல்வோம் (வேட்)

அடர்ந்த காவிலே தொடர்ந்து யாவரும்
அச்சமின்றி செல்வோம்
இடர் விளைத்திடும் விலங்கினத்தை நாம்— (வேட்)

எரி சுடர் தீ நிகர் கண்ணுடை
வரிதிகழ் வேங்கை, தளர் நடை
கரியொடு விரிசடை சிங்கம் யாவையும்
கண்டபோது வேல் கொண்டு தாக்கியே — (வேட்)

புதரிடை பதுங்கி யோடும்—நம்மை
புறமிருந்து புலி சாடும்
எதுவரினும் அதை எதிர்த்து நின்றே
இன்புறுவோம் களம் வென்றே — (வேட்)

எல்லை தாண்டி பெருந் தொல்லை ஈந்திடும்
இடும்பை கூர் விலங்கினத்தை நாம்
ஒல்லை யொழித்து அமைதி காணுவோம்
ஒண்பொருள் இன்னுயிர் பேணுவோம்— (வேட்)

பூபதி
குன்றன்
மல்லன் }:— [வில்லம்பும், வேலுங்கொண்டு தாக்கி அநேகக் கொடிய விலங்குகளைக் கொன்று குவிக்கின்றனர்.]

———

## காட்சி 7. [எல்லைப்புறம்]

உறுப்பினர்:—திராவிட பூபதி, பூங்குன்றன், மல்லன், வேட்டை வீரர், உபஹாதா, ஹோதா, ப்ரஹஸ்பதி.

நிகழ்ச்சி:— [ஆரியப் ப்ரஹஸ்பதி, திராவிட பூபதியைக் கண்டதும் தனது சூழ்ச்சி வலையை விரித்து ஏமாற்று வித்தையை ஆரம்பிக்கிறான்.]

பூபதி:— [வேட்டை முடிந்ததும், வேட்டையில் கிடைத்த விலங்குகளையும், பொருட்களையும் சேகரித்துக் கொண்டு தனது ஆட்களோடு வந்து நாட்டின் எல்லைப் புறத்திலுள்ள ஒரு மேட்டில் தங்கி இளைப்பாறிக்கொண்டிருக்கும்போது, கண்ணுக்கெட்டிய தூரத்தில் வெட்ட வெளியில் புகை கிளம்பிக்கொண்டிருப்பதைக் கண்டு]

தளபதி! அதோ பார், அங்கு ஏதோ புகைந்து கொண்டிருப்பதுபோல் தோன்றுகிறது!!

குன்றன்:—இங்கு வந்ததிலிருந்து நானும் அதைத்தான் கூர்ந்து நோக்கிக்கொண்டிருக்கிறேன்.

மல்லன் :—போய்ப் பார்த்துவிட்டால், புரிந்துவிடுகிறது!

பூபதி :—சரி. புறப்படுங்கள் போகலாம்.........

[என எழுந்து எல்லோரையும் அழைத்துக்கொண்டு செல்கிறான்.]

ப்ரஹஸ்:— [தனது பிரதான சீடர்களாகிய உபஹாதாவையும், ஹோதாவையும் மட்டும் அழைத்துக் கொண்டு திராவிட நாட்டின் எல்லைப்புறத்திற்கு வந்து ஒரு

[பெரிய யாஹ குண்டத்தைத் தோற்று வித்துப் பெரும் புகையைக் கிளப்பிக்கொண் டிருக்கிறார்.]

❋ யதாவை ச்யேனோ நிபத்யாதத்தே......

உபஹாதா
ஹோதா } ததாயம்......

ப்ரஹஸ் :— த்விஷந்தம் ப்ராத்ருவ்யம் நிபத்யாதத்தே

உபஹாதா
ஹோதா } ததாயம் ...........

[என மந்திரம் முழக்கிய வண்ணம் திராவிடப் பெருங் கூட்டத்தைக் கண்டுதிடுக்கிட் டெழுந்து நடு நடுங்கி]

ப்ரஹஸ்பதி :—நிபத்யாதத்தே

சீடர்கள் :—ததாயம்

ப்ரஹஸ்பதி :—யாதத்தே

சீடர்கள் :—ததாயம்

பூபதி :— [யாஹகுண்டத்தையும், அம் மூன்று ஆரியர்களையும் கூர்ந்து கவனித்துவிட்டு]

நீங்கள் யார்? எங்கிருந்து வந்திருக்கிறீர்கள்?

ஹோதா
உபஹாதா } மேஷ ரிஷபப் பரதேஸ்

❋பருந்தானது, கோழி முதலிய ஏழைப் பிராணிகளைத் தூக்கிச் செல்வது போல், இந்த யாகமும் பகைவனை ஒழித்துவிடும்.

மல்லன் :—பரதேசிப் பயல்களா...?

ப்ரஹஸ்பதி :—க்ஷே க்ஷே! பர்வத்வாஸ்!!

குன்றன் :—பர்வத் வாஸ்......! அப்படி என்ருல்?

ப்ரஹஸ் :—பருவத வாஸி.

பூபதி :—பரு......வத......வா ஸி......?

ப்ரஹஸ் :ஆம். அதோ,...அந்தப் பருவத வாஸி.

பூபதி —ஓ......! இமய மலே!!

ப்ரஹஸ் :—ஆம். ஹிமாஸலவாஸி.

மல்லன் :—அட! இமயமலேயிலிருந்து வந்திருக்கிருேம் என்று சொல்கிறீர்களா?

ப்ரஹஸ் :—ஆம்!

உபஹாதா :—ஆம்!!

ஹோதா :—ஆம்!!!

குன்றன் :—உங்கள் செயல் என்ன?

ப்ரஹஸ் :—ஷெயல்........ஊ......ம்......

உபஹ்தா, ஹோதா :—மேஷ ரிஷப போஷகம்.

ப்ரஹ்ஸ் :—க்ஷீ! ஊம்...தபஸு.

பூபதி :—சரி. இது என்ன?

ப்ரஹஸ் :—இது யாஹ குண்டம்.

பூபதி :—இதன் பலன்?

ப்ரஹஸ் :—ஸர்வ ஸித்தி! இதோ ஙிணமும், க்ருதமும் உதிரமும், மாமிஸமும், நவதான்யமும் அக்னீ பஹவத் பஸ்பீஹரம்!!

இதன் பிரதிப் யிரயோஜனம், லெக்ஷ்க்ஷோப லெக்ஷம் ஆரியப் பிரஜை, மேஷ ரிஷப ஸமேத ராய் ஹிமாஸல மஹேஸ்வர வரப்ராஸதப் பூதேவராய்ப் பிரஸன்னமாவர்.

குன்றன் :—என்ன! இந் நெருப்புக் குழியிலே நெய்யும், கொழுப்பும், இரத்தமும், இறைச்சியும், உணவுப பொருள்களும் கொட்டிப் புகைத்து எரித்துச் சாபலாக்கினுல், இலட்சக் கணக்கான உன் இன மக்களை ஆடுமாடுகளோடு இமயமலையன் இங்கு எழுந்தருளச் செய்வானு?

ப்ரஹஸ் :—ததாஸ்து!

பூபதி :---இது நம்பத் தகாதது!

ப்ரஹஸ் :---விஸ்வாஸ காதஹம்! நாளையே ஸ்பஷ்டமாகும்!!

உபஹாதா, ஹோதா :---கஷ்டம் கஷ்டம்!!!

ப்ரஹஸ் :—க்ஷீ.

உபாஹ்ாதா, ஹோதா :—க்ஷமிக்க.

மல்லன் :—அட! இவர்கள் சொல்வதை நாளைக்கே நம் கண் முன் காட்டுவார்களாமே!!

பூபதி :—அப்படியா! சரி நாளை வந்து பார்ப்போம் வாருங்கள் போகலாம்!!

[எனத் திரும்புகிருன்.]

ப்ரஹஸ் :—நீங்கள்......?

மல்லன் :—திராவிட பூபதி—தளபதி—அம்பலம்.

[என இருவரையும் குறிப்பிட்டுவிட்டுத் தனக்குத்தானேயும் கூறிக்கொள்கிருன்.]

ப்ரஹஸ் :—ஹா ! பூபதி ? விஷ்ணுப் பிரதிபதி......

[எனக் கூறிக்கொண்டு பூபதி யின் எதிரில் சென்று தலை வணங்கிப் பணிந்து.]

ஹே! மஹா ராஜாதி ராஜ ராஜமார்த்தாண்ட ராஜ கெம்பீர வீர தீர பராக்ரமத் திராவிட பூபதி!! நீயே விஷ்ணுப் பிரதிபதி!!!

"நாவிஷ்ணு: ப்ருதிவீபதி." விஷ்ணு அல்லாதவன் மஹாராஜன் அல்ல. நீயே விஷ்ணு—அல்லவிஷ்ணுவின் பிரதிநிதியாகிய இந்த்ரன் !

குன்றன் :—என்ன உளறுகிறாய் ?

பூபதி :—தளபதி.........

குன்றன் :—மன்னிக்கவும்.

பூபதி :—ஊம். உன் பெயரென்ன ?

ப்ரஹஸ் :—ப்ரஹஸ்பதி.

பூபதி :—பிர...ஹஸ்...பதி...உம். இப்போது உனக்கு என்ன வேண்டும் ?

ப்ரஹஸ் :—எனக்கா...? இல்லை ; என் தேவனுக்கு இந்த அக்னீ பஹவானுக்கு...

பூபதி :—ஆகாரம் வேண்டுமோ ?

ப்ரஹஸ் :—ததாஸ்து.

பூபதி :—தளபதி ! நம் வேட்டையில் கிடைத்த விலங்கு களையும், பொருட்களையும் இந்த பிர...ஹஸ்... பதியின் நெருப்புக்குழியில் போட்டுவிடு ; புகைந்து எரியட்டும் ! நாம் இன்று போய் நாளை வந்து பார்ப்போம் !!

குன்றன் :— [பூபதியின் கட்டளைப்படி நடக்குமாறு தலையாட்டி சமிக்கை செய்கிறன்.]

வேட்டைவீரர் :— [வேட்டையில் கிடைத்த விலங்குகளையும், பொருள்களையும் யாஹகுண்டத்தில் போட்டுமலை போல் குவிந்து விடுகின்றனர் புகை குபுகுபுவெனக் கிளம்புகிறது.]

ப்ரஹஸ் :—அபக்ஷாரம்; வேண்டாம். மஹாராஜாதிராஜ ராஜ மார்த்தாண்ட ராஜ கெம்பீர வீர தீர பராக்ரமத் திராவிட பூபதியின் ஸன்னிதானத்தில், நாளை சூரியோதயத்தில் இந்தப் பிரஹஸ்பதியின் இதே யாஹகுண்டத்யதிலிருந்து பிரஸன்னமாகம் போகும் இலக்ஷிக்ஷோப லெக்ஷம் ஆரியப் பிரஜைகளை, மேஷ ரிஷப ஸமேதராய் விஜயமாக்குவோம்.

பூபதி :—பார்க்கலாம்.

[எனக் கூறிவிட்டுத் திரும்பிச் செல்கிறன்.]

குன்றன்<br>மல்லன்<br>வேட்டைவீரர் } :—[பூபதியைப் பின்தொடர்ந்து செல்கின்றனர்.]

———

## காட்சி ௫. [காடு]

உறுப்பினர் :—திராவிடபூபதி, பூங்குன்றன், மல்லன். வேட்டைவீரர்கள்.

நிகழ்ச்சி :— [பூபதி தான் செய்த தவறுதலுக்குத் தளபதியிடம் சமாதானம் கூறுகிறன்.]

பூபதி :—தளபதி! நாம் காட்டில் வேட்டையாடிச் சேகரித்த நம் செல்வங்களை எல்லாம், அம் மூன்று அன்னியர்

களின் மூடக் கூற்றை நம்பியே நருப்புக் குழியில் போட்டு விட்டு வந்து விட்டோமே என்று தானே சிந்திக்கிறாய்?

குன்றன் :—இதுவரையில், நாம் நன்றாகச் சிந்தித்த பிறகு தான் எதையும் செய்வது வழக்கம்! இன்று தான், முதன்முதலாகச், செய்துவிட்டுச் சிந்திக்கிறோம்!!

மல்லன் :—செயல் முந்தவும், சிந்தனை பிந்தவுமான பிற் போக்கு அந்த அன்னியர்களால்த்தான் நேர்ந்தது!!!

வேட்டைவீரர் :—அவர்கள் முற்போக்கிற்கு முட்டுக் கட்டைகள்.

பூபதி :—அத்தகைய அவர்கள் எத்தனை பேர்?

வேட்டைவீரர் :—மூன்றே மூன்று பேர்.

பூபதி :—அல்ல; ஆயிரக்கணக்கான பேர்கள்!

மல்லன் :—எங்கே இருக்கிறார்கள்?

பூபதி :—அப்பகைவர்கள் அனைவரையும் நம் கண்ணெதிரில் காண்பதற்காகவேதான், நம் செல்வங்களை எல்லாம் அந் நெருப்புக் குழியில் கொட்டி விட்டு வந்திருக்கிறோம்.

குன்றன் :—ஓ...! நம் தலைவன்.........?

மல்லன்
வேட்டைவீரர் } :—வாழ்க!

குன்றன் :—நம் அறிவு............?

மல்லன்
வேட்டைவீரர் } :—வளர்க!!

குன்றன் :—நம் தலைவன்.........?

மல்லன்
வேட்டைவீரர் } :—வாழ்க!!!

## காட்சி 9. [ஐம்பெருங் குழுமி]

உறுப்பினர்:—பூமகள், மாபாடி, அமைச்சு திராவிட பூபதி, பூங்குன்றன், மாமல்லன், ஆயத்துமல்லி, பூங்கோதை, பிரஹஸ்பதி, உபஹாதா, ஹோதா, ஊர்வஸி,—ஆரியக் கும்பலும்—ஆடுமாடுகளும், திராவிடப் பெருங்குடி மக்கள்.

நிகழ்ச்சி:— [திராவிட பூபதியை மயக்கித் தன் வயப்படுத்திக்கொள்ள ஆரியப் பிரஹஸ்பதி தந்திரோபாயங்களைக் கையாள்கிறான்.]

பூமகள்:—புலவர் பெருமானே! இன்றைய ஆலோசனையில், முதலாவது: ஒற்றன் செய்தியையே எடுத்துக் கொள்ள வேண்டுமாய்க் கோருகிறேன்.

மாபாடி:— [சம்மதித்து தலையசைக்கிறார்.]

பூபதி
குன்றன் } :— [குழுவில் வந்து கலந்து கொள்கின்றனர்.]

மாபாடி:—ஒற்றன் சொன்ன செய்தியைப் பற்றிய ஆலோசனையை நம் அமைச்சு ஆரம்பித்து வைக்கட்டும்.

அமைச்சு:—'நம் நாட்டு எல்லைக்குச் சற்று தூரத்தில் உள்ள சிந்துப் பள்ளத் தாக்கில் ஆடுமாடுகளோடு ஏராளமான அன்னியர்கள் வந்து ஒளிந்துகொண்டிருக்கின்றனர்! அவர்களைச் சேர்ந்த மூவர் மட்டும் தனித்து வந்து, நம் எல்லையில் ஒரு பெரிய குழியைத் தோண்டி அதில் பல பொருள்களையும் பண்டங்களையும் போட்டு எரித்துப் புகைத்துக்கொண்டிருக்கின்றனர்!!' என்பதுதான் நம் ஒற்றனின் செய்தி. இச் செய்தி கிடைத்தவுடனேயே மேலும் பல ஒற்றர்களை அனுப்பி அந்த அன்னியர்களின் நாட்டத்தையும், நடவடிக்கைகளையும் ஆராய்ந்து வருமாறு பணித்திருக்கிறேன்.

பூமகள்:—நம் நாட்டு எல்லையில் நம் அநுமதி இன்றி நுழைந்து குழி தோண்டி நெருப்பு மூட்டிய அன்னியக் குண்டர்களை பிடித்து மக்கள் மன்றத்தில் கொண்டு வந்து நிறுத்தி நியாய விசாரணை நடத்தித் தண்டிக்க வேண்டும்.

பூபதி:—தண்டிக்கப்பட வேண்டிய அம்மூன்று குண்டர்களையும், அவர்களின் யாஹக் குண்டத்தையும் நாங்களும் கண்டோம்.

பூமகள்:—கண்டீர்களா! அப்படியானால், அக்குண்டர்களைக் கட்டித் தூக்கிக் கொண்டு வந்து மக்கள் மன்றத்தில் போட்டிருப்பீர்கள்?

பூபதி:—இல்லை! நாங்கள் வேட்டையாடிச் சேகரித்த பொருள்களையும் அக்குண்டர்களின் யாஹக்குண்டத்திலே போட்டுவிட்டு வந்திருக்கிறோம்!

பூமகள்:—விபரீதம்...?

பூபதி:— வேறு வழியே இல்லை.

பூமகள்:—எதற்கு?

பூபதி:— ஆயிரக் கணக்கான அக்குணடர்கள் எல்லோரையும் ஏககாலத்தில் நம் எதிரில் கொண்டுவந்து நிறுத்துவதற்கு!

பூமகள்:—எப்படி? ஏன்...? எங்.........

கோதை
ஆயத்து மல்லி
அம்பல மல்லன்
மாமல்லன் } :—

[வேல், வில், கட்டாரி, முதலிய ஆயுதங்களைக் கையில் எச்சரிக்கையாய் ஏந்திகொண்டு ஆரியர் மூவரை மட்டும் கொடிய விலங்குகள் போல் பாவித்து அழைத்துக் கொண்டு வருகின்றனர்.]

ப்ரஹஸ்
உபஹாதா
ஹோதா
ஊர்வசி } :—

[ஊர்வசி முன்னும், ப்ரஹஸ்பதி பூரணகுதி, கும்பம் (தோல்கும்பம்) உடையவனாய் நடுவிலும், உபஹாதாவும் ஹோதாவும்பின்னும் புடை சூழ்ந்து வருகின்றனர்.]

ப்ரஹஸ்:—"ப்ராஜாபத்யாம் நிருப்யேஷ்டிம் ஸர்வ வேத ஸதக்ஷிணம் ஆத்மன் யக்னீ, ஸாமா ரோப்ய, ப்ராஹ்மண ப்ரவ்ர ஜேத்கர் ஹாத்"

பூமகள்:—புலவர் பெருமானே! அந்த யாஹக் குண்டன் உளறுவதென்ன?

மாபாடி:—அவன், "தன் பொருளனைத்தும் கொடை கொடுத்து நிறைவேற்றத் தக்க யாஹத்தைச் செய்து, அதன் முடிவான ஓம குண்டத்தில் தன் குடுமியைக்கூடப் போட்டு எரித்துவிட்டு ஒன்று மில்லாதவனாய்ப் பார்ப்பனன் தன் குடும்பத்தைவிட்டு வெளியேறக் கடவன்" என்று கூறுகிறான்.

பூமகள்:— [எள்ளி நகைக்கிருள்.]

ப்ரஹஸ்:—ஹேய், மஹிஷியே! உன்னை ஸ்தோத்திரிக் கிறேன்!! பூர்வ ஜென்மப் பிராப்த்தமே நீ திராவிட பூபதியின் பாரியாளானாய்!!! ஸர்வ மங்கலானி பவந்த்து

பூபதி:— ப்ர...ஹஸ்...பதி!

ப்ரஹஸ்:—மஹா ராஜாதி ராஜ ராஜமார்த்......

பூபதி:— போதும். எங்கே பல்லாயிரக் கணக்கான உன் இனத்தார்?

ப்ரஹஸ்:—இதோ......

[எனப் பூபதி முதலானோர்களை வெளியில் அழைத்துக்கொண்டு போய்க் காட்டுகிறான்.]

ஆரியக் கும்பல்:— [ஆடுமாடுகளோடு அப்பிராணிகள் போல் மிரண்டு நிற்கின்றனர்.]

திராவிடப் பெருங்குடி:— [வில், வேல்கள் ஏந்தி ஆரியக் கும்பலைச் சூழ்ந்துகொண்டு தலைவனின் கட்டளைக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றனர்.]

ப்ரஹஸ்:—பாபம்! மஹாப் பாபம்!! பரிதாபம்...........!!! அநுதாபமே இல்லையா?

பூபதி:— [பூமகளின் முகத்தைப் பரிதாபத்தோடு பார்க்கிருன்.]

பூமகள்:—எங்கள் நாட்டு எல்லையில் குழி தோண்டி நெருப்பு மூட்டிய குண்டர்கள் யார் யார்?

ப்ரஹஸ்<br>உபஹாதா<br>ஹோதா } :— நாங்கள் மட்டுமே.

பூமகள்:—ஆடுமாடுகளோடு நாடோடிகளாய்த் திரியும் அவர்கள் யார்?

உபஹாதா<br>ஹோதா } :— ஹிமாஸல மஹேஸ்வர வரப்ரஸாதப் பூதேவர்கள்!

பூமகள்:—பொய். அமைச்சே! அந்த ஆடுமாடு மேய்க்கும் நாடோடிகள்.........?

அமைச்சு:—சிந்துநதி பள்ளத்தாக்கில் வந்து ஒளிந்து கிடந்தார்களாம்!

ப்ரஹஸ்:—ததாஸ்த்து.

பூமகள்:—என்ன அருத்தம்?

மாபாடி:—'ஒப்புக்கொள்கிறேன்' என்கிருன்.

பூமகள்:—ஊம். சிந்துப் பள்ளத்தாக்கிற்கு வருவதற்கு முன்பு எங்கிருந்தீர்கள்?

உபஹாதா<br>ஹோதா } :—ஹிமாஸல......

ப்ரஹஸ்:— க்ஷீ

உபஹாதா<br>ஹோதா } :— [பயந்து வாய் பொத்தி நிற்கின்றனர்.]

ப்ரஹஸ்:—க்ஷமிக்க. ஹேய், திராவிட பூபதியின் தர்ம பத்னி! அபயம்!! அபயம்!!! அபயம்......

[எனப் பூமகளின் காலடியில் மண்டியிட்டுத் தலை வணங்கு கிறான்.]

பூமகள்:—பயப்படாதே! உண்மையைச் சொல்!!

ப்ரஹஸ்:—மஹிஷி! மத்தியாசியாவிலிருந்து......

பூமகள்:—ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு வட மேற்குக் கணவாய்கள் வழியாய் இந்நாட்டிற்குள் புகுந்து சிந்துப் பள்ளத்தாக்கை வந்தடைந்தீர்கள்?

ப்ரஹஸ்:—ததாஸ்து......

பூமகள்:—ஊம்! சரி. அமைச்சே! அந்த ஆடுமாடு மேய்க்கும் ஆரியக் கும்பலுக்கு யாதொரு தீங்கும் விளைவிக்காமல், அழைத்துக்கொண்டு போய்ச் சிந்துப் பள்ளத்தாக்கிலேயே விட்டுவிடும்படி நம் வீரர்களுக்குக் கட்டளையிட வேண்டும்!! இம்மூன்று யாஹக் குண்டர்களையும் மக்கள் மன்றத்தில் கொண்டு போய் நிறுத்தி, நியாய விசாரணை நடத்தி முடிவில் இவர்களை எச்சரித்து மன்னிப்பளிக்கும்படியாய் மன்றத்தை வேண்டிக்கொள்ள வேண்டும்!!!

பூபதி:—இதில் ஒரு சிறு திருத்தம்: மன்றத் தலைவன் மாமல்லன் இப்போது நம் கூடவே இருப்பதால், இவ்வைம்பெருங் குழுவிலேயே அவ்விசாரணையை நடத்தி விடலாமே?

பூமகள்:— சரி.

[எனக் கூறி எல்லோரையும் உள்ளே அழைத்துச் செல்கிறாள்.]

ப்ரஹஸ்:—ஒரு பிரார்த்தனை!

பூமகள்:—அப்படி என்றால்?

மாபாடி:—'ஒரு வேண்டுகோள்' என்கிறான்.

பூமகள்:—இது ஐம்பெருங் குழு! இதில் உன் வேண்டுகோளைப் பொதுவில் கேட்டுப் பெற வேண்டும்.

ப்ரஹஸ்:—பஞ்ச மஹா ஸபாபதிகளே! 'ஸபா ஸோபிதம் ஸதுர் அலங்கிருதம்!!' நீதி பரிபாலன பரிஷ்கார நிமித்தியம், ஊர்வஸீ நடனம் ஓர் முஹூர்த்த நேரம் ஸம்பவிக்க உத்தரவு ஸமர்ப்பியாமி!!!

மாபாடி:—ப்ரஹஸ்பதி! நான் ஒரு கலைஞன் என்ற முறையில், உன் ஊர்வஸியின் ஆரியக் கூத்தைக் காண விரும்பலாம்! ஆனல், இதுபோன்ற அவை நடுவே ஒரு பெண்ணைத் தனித்துக் கூத்தாடவிட்டு வேடிக்கை பார்க்கும் வழக்கம் எங்களுக்கில்லை.

பூபதி:—புலவர் பெருமானே! கலைக் கண்ணோட்டத்தில் வழக்கத்திற்கு முரண் என்பது ஒரு குற்றமாகாதே?

பூமகள்:—வழக்கத்திற்கு முரண் என்பது மட்டுமல்ல! பெண் இனத்திற்கே அவமானம் என்பதையுங்கூட கூர்ந்து உணர வேண்டும்!!

குன்றன்:—அவமானம் ஆரியப் பெண்ணிற்குத்தானே?

கோதை:—அவள் ஆடப்போவது ஐம்பெருங் குழுவில்! ஆதலால், நம் குழுவிற்குந்தான் அவமானம்!!

குன்றன்:—இது குதர்க்கம்!

கோதை:—இல்லை; தர்க்கம்!!

குன்றன்:—குற்றம் புரிந்த குண்டரின் பெண்டிரை நம் குழு நடுவே கூத்தாடவிட்டு எள்ளி நகைத்துக் காறி உமிழ்வதற்கு இடையூருய் இருக்கிருய்!

கோதை:—குற்றம் புரிந்த யாகக் குண்டரை எச்சரித்து மன்னிப்பதற்காகக் குற்றமே புரியாப் பெண்டிரை தண்டிப்பது நியாயமா?

குன்றன்:—தன் இனத்திற்காகத் தானே வலிய வந்து தண்டனையை ஏற்றுக்கொள்ளும்போது, நீயேன் தடை செய்கிருய்?

கோதை :—இது தண்டனையல்ல ! யாகக் குண்டனின் சூழ்ச்சி !! அந்த ஆரிய இளங் குமரியை நம் ஐம் பெருங் குழு நடுவே கூத்தாடவிட்டுக் காம உணர்ச்சி யைக் கிளப்பிக் குழுவின் அறிவை மயக்கித் தனக்கு ஆவன செய்து கொள்வதற்காக அந்த ஆரியன் செய்யும் முயற்சி !!!

ப்ரஹஸ் :—அபத்தம் ! ஸர்வமும் அபத்தம் !! விநாஸ காலே விபரீத புத்தி !!!

பூபதி :— [பூங்கோதையை நோக்கி]

ஐம்பெருங் குழுவின் அறிவாற்றலைப் பழித்து அவமதித்த குற்றத்திற்கு ஆளாகிவிட்டாய் ! அறி வற்ற பெண்ணே !! போ வெளியே !!!

[பிரஹஸ்பதியை நோக்கி]

ஊம் ; நடக்கட்டும் நாட்டியம்.

ஊர்வஸி :— [நாட்டியமாட ஆரம்பிக் கிருள்.]

பூமகள் :—நிறுத்து ! இந்தக் கூத்து பெண்ணினத் திற்கே அவமானம் !! இதை ஏற்றுக் கொண்டு இக் குழுவில் நான் இருக்க முடியாது !!!

[என எழுந்திருக்கிருள்.]

அமைச்சு :—தலைவி! அந்தக் கூத்து ஆரியக் கலை! அதில் நமக்கேது அவமானம் ?

பூமகள் :—அமைச்சே ! அவை நடுவே ஒரு ஆணும், பெண்ணும் நின்று ஆடினுல், அவமானம் யாருக்கு மில்லை !! ஆனுல், ஒரு பெண்ணை மட்டும் ஆடவிட்டு வேடிக்கை பார்ப்பது ஆரியக் கலை யானுலும், அதை அனுமதிப்பது பெண்ணினத்திற்கு அவமானமே!!!

மல்லி :—ஆம். பெண்ணினத்திற்கு அவமானம் விளைவிக்கும் ஆண்களே ! உங்களுக்கே வெட்கம் வருமளவும் நாங்கள் வெளியவே நிற்கிருேம்!!

[என முழங்கிவிட்டு திராவிடப் பெண்களோடு, குழுவிலிருந்து வெளியேறுகிருள்.]

மாபாடி :—அவையோரே! நம் நாட்டின் தலைவி இங்கு இல்லாததால், இவ்வைம்பெருங்குழு இத்தோடு கலைக்கப்படுகிறது.

[எனக் கூறிவிட்டு வெளியேறுகிருர்.]

ப்ரஹஸ் :—❋"ஸ்த்ரீ சூத்ரௌ நாதீயேதாம்"

ஹேய், ராஜன்! ஸ்த்ரீ ஸ்வதந்திரம் வித்தைக்கு விஞஸம்.

பூபதி :—ஊம். பிரஹஸ்பதி! நடக்கட்டும் நாட்டியம்!! இருப்பவர் இருக்கட்டும்; போகிறவர் போகட்டும்!!!

**அமைச்சு&மல்லன் :—[எழுந்து போய்விடுகிருர்கள்]**

ப்ரஹஸ்:—ஓம்........ஸ-ு க்லாம் பரந்தரம்......!

ஊர்வஸி ஸதுர் ஸமர்ப்பியாமி......!!

ஊர்வஸி :—

[காமரசம் ததும்பிய நடனம் ஆடிக்கொண்டே திராவிட பூபதிக்கும், பூங்குன்றனுக்கும் மல்லனுக்கும் சோமரஸம் பரிமாறுகிருள்.]

பூபதி }
குன்றன் } :—
மல்லன் }

[ஊர்வஸியின் நடனத்தில் சொக்கி சோமரஸத்தைப் பருகி மயங்கி மதி தடுமாறிக் குதூகலித்திருக்கின்றனர்.]

உபஹாதா }
ஹோதா } :—ஜெய்......! ஜெய விஜயீ பவா......!

ப்ரஹஸ் :—ததாஸ்த்து!!!

---

❋கல்வி பயில பெண்களுக்கு அதிகாரமில்லை.

## காட்சி 10. [சாலை]

உறுப்பினர்:—மாபாடி, பூங்குன்றன்.

நிகழ்ச்சி:— [மாபாடி பூங்குன்றனிடம் பூங்கோதையின் தர்க்கத்திலுள்ள நுணுக்கங்களை விளக்கிக் கூறி அறிவுறுத்துகிறார்.]

மாபாடி:—தளபதி! ஆரியக் கூத்து.........

குன்றன்:—முடிந்துவிட்டது.

மாபாடி:—இல்லை; இப்போதுதான் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது!

குன்றன்:—என்ன?

மாபாடி:—ஊம்! சரி; அதிருக்கட்டும். தலைவன் எங்கே?

குன்றன்:—ஊர்வஸி, தன்கூடச் சிந்துப் பள்ளத்தாக்கிற்கு அழைத்துச் சென்றிருக்கிறாள்.

மாபாடி:—யாரை......?

குன்றன்:—நம் தலைவனை.

மாபாடி:—உம். ஆரியக் கூத்து முடிந்துவிட்டதென்றாயே; இதுவா முடிந்ததின் அறிகுறி?

குன்றன்:—இப்படி நேரும் என்று நான் நினைக்கவில்லை.

கோதை:—இளவரசி பூங்கோதை நினைத்தாளே! நினைத்த வண்ணமே உணர்த்தினாளே!! உணர்த்தியதைக்கூட உணரும் உணர்ச்சியற்ற நீ, அவள் வார்த்தையை எதிர்த்தாயே!!! இப்போது யார் நம்தலைவனின் வீழ்ச்சிக்குப் பொறுப்பாளி?

குன்றன்:—புலவர் பெருமானே......?

மாபாடி:—தளபதி! நீ போரில் சிறந்தவனாய் இருக்கலாம் ஆனால், அறிவாற்றலில் உன்னைவிட ஆயிர மடங்கு சிறந்தவள் இளவரசி!!

குன்றன்:—ஆமாம். நான் ஒரு முழுமகன்! ஐம்பெருங்குழுவில் இளவரசிக்கு இழுக்கு உண்டாக்கி விட்டேன்!

மாபாடி:—இழுக்கு உண்டாக்கியவன் நீயல்ல; ஆரிய மாயை! சரி. போ, போய் இளவரசி பூங்கோதையிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள். பிறகு, நடக்க வேண்டியன பற்றி என் பேராயத்தில் ஆலோசிக்கலாம்.

[எனக் கூறிவிட்டுச் செல்கிறார்.]

குன்றன் :— [மிகுந்த துக்கத்தோடு திரும்பிச் செல்கிறான்.]

---

## காட்சி 11. [ஆரியர் கூடாரம்]

உறுப்பினர் :—ப்ருத்வி, அக்னீத்ரன், உபஹோதா; ஹோதா, ப்ரஹஸ்பதி, ஊர்வஸி, திராவிட பூபதி, இரம்பா, திலோர்த்தமா, மேனஹா.

நிகழ்ச்சி :— [ஆரிய மாயையில் மூழ்கிய திராவிட பூபதியைத் தங்களுக்குத் தொண்டு செய்வதற்காக இந்திரனென பட்டாபிஷேகம் செய்து வைக்கிறான் ப்ரஹஸ்பதி.]

ப்ருத்வி :— [தாங்கொண்ணு அவமானத்தால், உள்ளத்துள்ளே வேதனைப்பட்டுக்கொண்டிருக்கிறான்.]

அக்னீத் :—ராஷ்ட்ரபதி! நமது மஹரிஷி பிரஹஸ்பதியின் ஸாமர்த்தியமே ஸாமர்த்தியம்!!

ப்ருத்வி :—க்ஷீ. ஸாமர்த்தியம்! ஸமத்து!! ஸம்பிரதாயம்!!! ஸர்வமும் ஊர்வஸியின் ஸாஹஸம்.

அக்னீத் :—உம். ஊர்வஸியின் ஸாஹஸமும் ப்ரஹஸ்பதியின் ப்ரயத்னமே!

ப்ருத்வி :—ப்ரயத்னம்? திராவிட தஸ்யூவிடம் ஆர்ய ஸ்திரீ ஸோரம்...ப்ரஹஸ்பதியின் ப்ரயத்னம்?? ஆபாஸம்! ரோஷ நாஷம்!!

ப்ரஹஸ்:—○"யத்ஹரிணோ யவமத்தி நபுஷ்டம் பசுமன் யதே; க்ஷுத்ரோ யதர்யாயை ஜாரோ நபோஷ மனு மன்யதே"

ஹேய், ராஷ்ட்ரபதி! "தான்யத் தளிர் பக்ஷணம் கஸ்த்தூரிக்குச் க்ஷேமமே!! க்ஷுத்திர திராவிட பூபதி ஸம்போஹம் ஆர்ய ஸ்திரீக்கு ஸௌபாக்கியமே!!!

ப்ருத்வி:—க்ஷே!

❋"யத்ஹரிணம் யவமத்தி நபுஷ்டம் பசுமன்யதே க்ஷுத்ரா யதர்ய ஜாரா நபோஷாய தனுயதி'

ஹேய், ப்ரஹஸ்பதி! தான்யத் தளிர் பக்ஷணம் கஸ்த்தூரிக்குச் க்ஷேமமே!! ஆர்யன் ஸம்போஹமே க்ஷுத்திர திராவிட ஸ்திரீக்கு ஸௌபாக்கியம்!!!

ப்ரஹஸ்:—ததாஸ்த்து! ஸர்வம் வேத ஸாஸ்த்ர புராண ஸம்மதமே!!

ப்ருத்வி:—ஊம். ப்ரஹஸ்பதி! ஊர்வஸி எங்கே?

ப்ரஹஸ்:—திராவிடபூபதியோடு ஸயனிக்கிருள்.

---

○பயிரை மேயும் மானைப் பார்த்து பயிர்ச் சொந்தக்காரன், மான் சுகம் பெறுமே என்று எண்ணுமல் இம்மான் பயிரைத் தின்றுவிட்டதே என்று வருந்துவதைப்போல், ஆரிய ஸ்திரீயை புணர்ந்த சூத்திரனைப் பார்ந்து ஆரியர்கள் வெறுப்படைகின்றனர்.

❋பயிரை மேயும் மானைப் பார்த்துப் பயிர்ச் சொந்தக்காரன், மான் சுகம் பெறுமே என்று எண்ணுமல், இம்மான் பயிரைத் தின்றுவிட்டதே என்று வருந்துவதைப்போல், ஆரியர்களால் புணர்ச்சி செய்யப்பட்ட தன் மனைவியைப் பார்த்துச் சூத்திரன் துன்புறுகிருன்.

ப்ருத்வி:—மோஷம்; மஹா மோஷம். அந்த ஸ்திரீயை அக்னிகுண்டத்தில்போட்டுப் பஸ்பீஹரிக்கவேண்டும்.

ப்ரஹஸ்:—மஹா மூர்க்கம்! ஹேய், ராஷ்ட்ரபதி! நமது ஸொப்பன ஸோபிதமாகிய ஆர்ய ஸாம்ராஜ்ய ஸ்தாபித ஸேவையில் ஊர்வஸி தன் ஸர்வாங்கமும் அர்ப்பணம் செய்கிருள்.

அக்னி:—ஆஹாஹா! ஊர்வஸி—ஸ்திரீ தேவதை!! பூஜா குமாரி!!!

ப்ருத்வி:—க்ஷீ; ஆரிய ரோஷத்தை நாஷம் செய்த விபக்ஷாரி.

ப்ரஹஸ்:—ராஷ்ட்ரபதி! ஆர்ய ஸாம்ராஜ்யமோ பிரம்மாண்டம்!! ரோஷம்......? அற்பம்.

ப்ருத்வி:—அபத்தம். ரோஷமே பிரம்மாண்ட ஸாஸ்வதம் ஆர்ய ஸாம்ராஜ்யமோ, ஸாஸ்வதமல்ல.

ப்ரஹஸ்:—'எதுவுமே ஸாஸ்வதமல்ல' வேதாந்தம்! இது திராவிட தஸ்யூவுக்கு நமது உபதேஷம். 'எதுவும் ஸாஸ்வதமே' ஸித்தாந்தம்! இது ஆர்யப் பூதேவப் பஞ்ச தந்திரப் பிரயத்தனம்!!--ரோஷமே ஆர்யர்க்கு ஸர்வ நாஷம்!!!

ப்ருத்வி:—க்ஷேக்ஷ்க்ஷே. ரோஷமே ஆர்ய புருஷ லெக்ஷ்ணம்!

பூபதி }
ஊர்வஸி } :— [ஸோமபானமயக்கத்தில்,தள்ளாடிக் கொண்டு வருகின்றனர்.]

ப்ருத்வி:—ஆம். ரோ...ஷ...மே...புருஷ...லெ...க்ஷ்க்ஷணம்

[எனப் பயங்கரமாய்க் கூறிக் கொண்டே, போய் ஊர்வஸியை இழுத்தெறிந்துவிட்டு திராவிட பூபதியைக் கட்டாரியால் குத்திக் கொல்ல கையை ஓங்குகிருன்.]

ப்ரஹஸ்:— [உடனே, அக்னீத்ரன் இடையி லிருந்த கட்டாரியை எடுத்துப் ப்ருத்வியின் முதுகை நோக்கி எறிந்து ப்ருதிவியைக் கொல்கிருன்.]

ப்ருத்வி:—ஆய்! ஆ...ய்......

[என மல்லாந்து விழுந்து மாள்கிருன்.]

ப்ரஹஸ்:—அக்னீத்ரா!

அக்னீ:—குருதேவ்.........

ப்ரஹஸ்:—ஸோமபான ஸுபாவ ஸுஸ்தியாகிய திராவிட பூபதியே இனி நம் ராஷ்ட்ரபதி!

அக்னீ:—ஊங்ஹும்......!—இந்த்ரன்!!

ப்ரஹஸ்:—மெக்ஷினேன்! உன் ராஜதந்திரத்தை. க்ஷிரேஷ்ட க்ஷேஞதிபதி! க்ஷீக்கிரம் இத்திராவிடபூபதியை ஆர்ய ஸிம்ஹாஸனத்தில் ஆரோஹணம் ஸெய்.

அக்னீ:—ஆக்ஞை குருதேவ்.

[எனக் கூறிவிட்டுத், தள்ளாடிக் கொண்டிருக்கும் திராவிடபூபதியைத் தாங்கி அழைத்துக் கொண்டுபோய் உயர்ந்த பீடத்தில் அமர்த்துகிருன்.]

ப்ரஹஸ்:— [ப்ருதிவியின் பிணத்தருகே நின்று ஒரு விஞடி துக்கித்துத் துளி கண்ணீரைச் சிந்திவிட்டு அவன் தலையணியைக் கழற்றிக் கையில் எடுத்துக்கொண்ட பிறகு கையைத் தட்டுகிருன்.]

உபஹோதா }<br>ஹோதா }:— [ஓடிவந்து பணிந்து நிற்கின்றனர்.]

ப்ரஹஸ்:—மஹரிஷிகளே! ஆர்ய ஸாம்ராஜ்ய ஸ்தாபித தேவதை, நமது ரோஷ புருஷனுகிய ராஷ்ட்ரபதியை நரபலி ப்ரஸாதமாய் அங்கீஹரித்துக்கொண்டது!

இப்பிரேதத்தை எடுத்து யாஹக் குண்டத்தில் போட்டுப் பொஸுக்கிவிடுங்கள்!!

உபஹாதா }
ஹோதா } :—ஹா...ங்......!

[எனப் ப்ருத்வியின் பிரேதத்தைக் கண்டு திடுக்கிட்டுவிட்டுப் பிறகு ப்ரஹஸ்பதிக்குப் பயந்து தூக்கிச் செல்கின்றனர்.]

ப்ரஹஸ்:—ஊம். ஊர்வஸி......

ஊர்வஸி:—குருதேவ்.

[என எழுந்து பணிந்து நிற்கிருள்.]

ப்ரஹஸ்:—ரம்பை, மேனகைஹ, த்லோர்த்தமை, ஸோம பான ஸஹிதம் ஸ்ருங்கார ஸதுர் ஸோபித அலங்காரம் ஸமர்ப்பியாமி.

ஊர்வஸி:—ஆக்ஞை குருதேவ்.

[என உள்ளே சென்று, ஸோம பானக் குடுக்கைகளைத் தோளில் சுமக்கும் நடன அலங்காரிகளோடு வந்து நடனம் புரிகின்ருள்.]

உபஹாதா }
ஹோதா } :— [ப்ருதிவின் பிரேதத்தை யாஹக் குண்டத்தில் போட்டுப் பொஸுக்கிவிட்டு வந்து பிரஹஸ்பதியின் பக்கத்தில் கைகட்டி வாய் பொத்தி நிற்கின்றனர்.]

பூபதி:— [ஆரிய அணங்குகளின் ஆடல் பாடலில் மதி மயங்கி ஸோம பான போதையில் திளைத்திருக்கிருன்.]

ப்ரஹஸ்:—"ப்ரதானம் க்ஷத்திரியே கர்ம, ப்ரஜானும் பரிபாலனம்"

[என மந்திர முழக்கம் செய்து ப்ருத்வியின் தலையணியைத் திராவிடப் பூபதியின் தலையில் சூட்டி]

ஹேய் இந்த்ரா! நீ மஹாவிஷ்ணுவின் ப்ரதிநிதி! ஸௌந்தர்யன், ஸம்போஹ ஸிலாக்யன்—ஸஹல ஸௌபாக்கியன், ஆபத்பாந்த்வன்—ஆர்ய ரக்ஷஹன்! இத்யாதி இந்த்ரனின் ராஜகுரு—சாக்ஷாத் ப்ரஹஸ்பதியே!—க்ஷிரேஷ்ட சேனுதிபதி, அக்னீத்ரனே!!

இனி, பிராஹ்மண யாஹக் குண்ட மந்த்ர ஜபமே திராவிட ராஜ்ய சுபிக்ஷம்!!!

உபஹாதா } ஹோதா } :—ஜேய் ஜெய விஜயீ பவா......

ப்ரஹஸ்:— ததாஸ்த்து.

——(0)——

## காட்சி 12. [நதிக்கரை]

உறுப்பினர்:—ப்ரஹஸ்பதி, ஊர்வசி.

நிகழ்ச்சி:— [திராவிடரிடையே தைரியமாய்த் திரிந்து உளவறியவும், பூங்குன்றன்—பூங்கோதை காதல் உறவைப் பிரித்து விடவும் ப்ரஹஸ்பதி ஊர்வசிக்கு ஆலோசனைகள் கூறி அனுப்பி வைக்கிருன்]

ப்ரஹஸ் :—ஊர்வசி!

ஊர்வசி :—குருதேவ்,

ப்ரஹஸ் :—இந்த்ரன் எங்கே?

ஊர்வஸி :—ரம்பை, திலோர்த்தமை, மேனகை ஹமோஹன ஸாஹரத்தில், ஸல்லாப ஸம்போஹ ஸௌபாக்கிய ஸிலாக்கியமாய் இருக்கார்.

ப்ரஹஸ் :—இருக்கார் அல்ல—இருக்கா! அவர் அல்ல—அவா!! இதுவே ப்ராஹ்மண திராவிட பாஷாபிவிர்த்தி!!!

ஊர்வஸி :—ஆக்ஞை குருதேவ்.

ப்ரஹஸ் :—ஊர்வஸி! திராவிட சேனதிபதி - யுவராணி ஸ்நேகத் துவேஷக் கைங்கரியமே திராவிட பிரஜைகளுக்குள் த்துவேஷ வித்தியாஷ ஸாதகம். அதை ஸாதிக்க நீ இப்போதே போ.

ஊர்வஸி :—குருதேவ்! க்ஷமிக்க. மஹா கஷ்ட ஸாத்தியம்! எனக்குப் பிராணபத்துண்டானல், நான் சிஸுஹஸ்த்தி தோஷியாவேன்!!

ப்ரஹஸ் :—சிஸுஹஸ்த்தி.........? ஊர்வஸி! நீ கர்ப்பிணியா?

ஊர்வஸி :—ஆம் குருதேவ்

ப்ரஹஸ் :—கர்ப்பதான கைங்கரியம் யாருடையது?

ஊர்வஸி :—திராவிட பூபதியுடையது.

ப்ரஹஸ் :—திராவிட பூபதி? நமது இந்த்ரன்! ஊர்வஸி!! நீ மஹிஷியாகப் போகிருய்!!!

ஊர்வஸி :—குருதேவ் ஸித்தம்—இத்தாஸியின் பாக்யம்.

ப்ரஹஸ் :—ஸௌபாக்கியவதியே! ஆர்ய ஸாம்ராஜ்ய ஸ்தாபித நிமித்தம் எது ஸம்பவிக்கினும் தோஷமல்ல—ஸந்தோஷமே! க்ஷீக்கிரம் போ!!

ஊர்வஸி:—ஆக்ஞை குருதேவ்.

[எனப் பணிகிருள்.]

ப்ரஹஸ் :—ஸ்திரீ ஸாஹஸமே ஜெயஸ்தம்பம் !!!

[என ஆசீர்வதித்தனுப்புகிருன்.]

——[x]——

## காட்சி 13. [திணைப்பரண் குன்றம்]

உறுப்பினர்:—பூங்கோதை, பூங்குன்றன், ஊர்வஸி.

நிகழ்ச்சி:— [பூங்கோதையிடம் மன்னிப்புக் கேட்கச் சென்ற பூங்குன்றன், ஊர்வஸியின் சாகசத்தால், பூங் கோதையின் கோபத்திற்கு மீண்டும் ஆளாகித் திரும்புகிருன்.]

குன்றன்:— [திணைப்பரண் குன்றத்தின் சாரலை நோக்கிச் செல்கிருன்.]

ஊர்வஸி:— [குன்றனைப் பின் தொடர்ந்து செல்கிருள்.]

கோதை:—சோ.........சோ.........

[எனக் கவண் வீசுகிருள்.]

குன்றன்:—ஆய்.........

[எனக் கவண் கல்லால் அடி பட்டு ரத்தம் ஒழுகும் நெற்றி யைப் பிடித்துக்கொண்டு மயங் கித் தத்தளிக்கிருன்.]

கோதை:—ஆ......?

[எனத் திடுக்கிட்டுப் பூங்குன்றனை நோக்கி ஓடி வர முனைகிருள். ஆனல், அங்கு வரும் ஊர்வஸி யைக் கண்டு சந்தேகமும், வெறுப்புங் கொண்டு அலெட்சிய மாய் நடந்து வருகிருள்.]

ஊர்வஸி:— [பூங்குன்றன் நெற்றியில் ஒழுகும் இரத்தத்தைக் கண்டதும் ஓடிச் சென்று அவனைத் தாங்கிப் பிடித்துப் பாறை மீது படுக்கப் போட்டுப் பச்சிலை பறித்துக் கசக்கி அவன் புண் மீது வைத்துக் கட்டிவிட்டு ஒரு பெரிய இலை பறித்து விசிறி உபசரிக்கிருள்.]

கோதை:—எங்கள் காரியத்தில் தலையிடுவதற்கு நீ யாரடி? உனக்கென்னடி உரிமை இருக்கிறது? போடி அப்பால்......

[எனப் பாய்ந்து ஊர்வஸியைப் பிடித்திழுத்துத் தள்ளுகிருள்.]

ஊர்வஸி:— [தள்ளப்பட்டவுடன், தானே பாறையில் மோதிக்கொண்டு உயிர் வதை செய்யப்பட்டவள் போல் கதறுகிருள்.]

ஹா...ய்...! ஐயோ......ஈஸ்வரா...மஹேஸ்வரா... ஆபத்பாந்தவா....அனுதை ரெக்ஷஹா...ஐ...யோ... ஐயய்யோ...ஹா...ய்......

கோதை:—நீலி.

[என ஊர்வஸியைக் காலால் மிதிக்கிருள்.]

குன்றன்:—கொடுமை.

[எனப் பூங்கோதையின் செயலைக் குறிப்பிடுகிருன்.]

கோதை:—ஆரிய மாய்கைக்கு அடிமைப்பட்ட கண்களுக்குத்தான் என் உரிமைப் போராட்டம் கொடுமையாகத் தோன்றும்.

குன்றன்:—ஆரிய மாய்கையில் வீழ்ந்ததற்கு உன்னிடம் மன்னிப்புக் கேட்கவும், மீள்வதற்கு உறுதி கொள்ளவுந்தானே நான் இங்கு வந்திருக்கிறேன்......

கோதை:—நீ சொல்வது சுத்தப் பொய். இந்த ஆரிய அணங்கோடு நீ இணங்கி இருக்கும் காட்சியை என்னிடம் காட்டுவதற்காகவே இவளை இங்கு அழைத்துக்கொண்டு வந்திருக்கிறாய்!

குன்றன்:—கற்பனை செய்கிறாய்!

கோதை:—இல்லை. கண் முன் காண்கிறேன்.

குன்றன்:—'கண்ணிற் கண்டதுவும் எண்ணிச் சொல்லலே கற்றவர் மரபு!'

கோதை:—கற்றவர் மரபைக் காற்றில் பறக்கவிட்டு, ஐம்பெருங் குழுவில் ஆரிய மாய்கைக்கு அடிமையான நீ......

குன்றன்:—கோதை......?

கோதை:—என் அறிவாற்றலைக் குறை கூற அருகதையற்று விட்டாய்.

குன்றன்:—கோதை......??

[எனக் கதறி அவளிரு கரங்களையும் பற்றுகிறான்.]

கோதை:—இனி, என்பேரை உச்சரிக்கக்கூட உனக்கு உரிமை இல்லை. என் கண் முன் நிற்காதே; எங்கேயும், எவளோடும், எக்கேடு கெட்டும் போ...போ......

[எனப் பொங்கும் ஆத்திரத்தோடு அவன் பிடியிலிருந்து உதறிக்கொண்டு செல்கிறாள்.]

குன்றன்:—அவள் அகம்பாவமும், ஆத்திரமும் என் ஆரம்பத் தவறுக்கு ஆக்கம் அன்றோ அளிக்கிறது?

[எனக் கூறிப் பெருமூச்செறிந்து திரும்பிச் செல்கிறான்.]

ஊர்வஸி:—

[எழுந்து மெதுவாய்ப் பூங்குன்றனைப் பின் தொடர்ந்து செல்கிறாள்.]

——:(o):——

## காட்சி 14. [மலைச்சாரல்]

உறுப்பினர்:—பூங்குன்றன், ஊர்வசி, பூமகள்.

நிகழ்ச்சி:— [பூங்குன்றனைத், தொடர்ந்து வந்து சாகசம் புரியும் ஊர்வசியோடு பூங்குன்றன் தனித்திருப்பதைத் தற்செயலாய்க் காண நேர்ந்த பூமகளும் பூங்குன்றனை வெறுக்கிருள்.]

குன்றன்:— [மிகுந்த துக்கத்தோடு நடந்து கொண்டிருக்கிருன்.]

ஊர்வசி:—ஐய்......யய்......யோ.........

[என, ஒரு காட்டுக் கறும் பூனையைக் கண்டு பயந்து அலறியோடி வந்து பூங்குன்றன் மீது மோதி விழுந்து அவன் காலைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கிடுகிடுக்கிருள்.]

குன்றன்:— [நின்று திரும்பிப் பார்க்கும் போது ஒரு கறும் பூனை ஊர்வசியின் தலைக்குமேல் பாய்ந்தோடுவதைக் கண்டு.]

என்ன......! உம். இந்தக் கறும் பூனையைக் கண்டு தானு இப்படிக் கிடுகிடுத்துவிட்டாய்?

ஊர்வசி:—நேஸா! வர்ணஸார ஸாஸ்திர ரீதியில் கறுப்பு வர்ணமே......ஆபத்து!!

[எனக் கூறிக்கொண்டே எழுந்திருக்கிருள்.]

குன்றன்:—அப்பூனையின் கறுப்பு நிறத்தைக் கண்டு கலங்கி விட்டாயா?

ஊர்வசி:—ஆமாம்.

குன்றன்:—அப்படியானல், நான் என்ன நிறம்?

ஊர்வஸி:—கறு...ப்பு......!

குன்றன்:—நீ...?

ஊர்வஸி:—ஸ்படிகம்!

குன்றன்:—படிக நிறம், பவளம்போல் சிவந்த உதடுகள், தாமரைப் பூக்கள்போல் கைகள், உடுக்கைபோல் இடை, வாழைத் தண்டுகள்போல் தொடைகளையும் உடைய ஆரிய அணங்கே! நீ கலங்கும் கறுப்பு நிறத் திராவிடனுகிய என்னை ஏன் நிழல் போல்த் தொடர்ந்து திரிகிருய்?

ஊர்வஸி:—ப்ராணேஸா...!

குன்றன்:—என்னது......?

ஊர்வஸி:—பிராண நேஸா...!!

குன்றன்:—பிராண நேசன்...? ஓ! உயிர்த் தோழன் என்கிருயா......?

ஊர்வஸி:—ஆமாம்.

குன்றன்:—அல்ல; உன் உயிருக்கு மட்டுமல்ல! உன் இனத்திற்கே நான் எதிரி!! என் முன் நிற்காதே—என்னைத் தொடராதே போய்விடு!!!

ஊர்வஸி:—நீ அபாக்கியன்! என் அபூர்வ ஸம்போஹ ஸிலாக்கியம், உன் திராவிடபூபதிக்கே பாக்கியம்!!

குன்றன்:—திராவிட பூபதி? ஆம். நீ என் தலைவனை மயக்கி இழுத்துச் சென்ற அதே ஆரிய அணங்குதான்! சோமச் சாற்றையும், காமச்சேற்றையும் ஊட்டி எங்கள் மதியை மயக்கிய கள்ளியே! எங்கே என் தலைவன்?

ஊர்வசி:—ஸொல்லவா......?

[எனச் சாகசமாய்க் கெஞ்சிக் குலாவிக்கொண்டே கேட்கிறாள்.]

குன்றன்:—சொல். சொல்லாவிட்டால், உன்னைக் கொன்று விடுவேன்.

[எனக் கோபிக்கிறான்.]

ஊர்வசி:—கொள்ளவா......?

குன்றன்:—கொள்ள மாட்டேன்; கொல்லுவேன்!

ஊர்வசி:—ஸ்திரீ ஹஸ்தி—ஸிஸ்ரு ஹ்ஸ்தி தோஷம்! ஸ்திரீ ஸ்நேகம்—ஸிஸ்ரு உற்பத்தி ஸந்தோஷம்!

குன்றன்:—

[மிகுந்த ஆத்திரத்தோடு ஏதோ கூற வாய்த் திறக்கிறான்.]

ஊர்வசி:—

[மிக்க சாகசத்தோடு வளைந்து குலைந்து நளினமாய் அவன் வாயைத் தன் விரல்களால் மூடிக் கொண்டு]

ஸாந்தி......! ஸொல்லவா.........?

பூமகள்:—

[பூங்கோதையைக் காணத் தினைப் பரண் குன்றை நோக்கி அவ்வழியே செல்லுகையில் ஒரு பாறை மறைவிலே ஊர்வசி பூங்குன்றனோடு தனித்திருந்து குலைவதைத் தற்செயலாய்க் கண்டு வியப்புற்று நிற்கிறாள். பிறகு, வெறுப்புற்றுச் செல்லுகிறாள்.]

குன்றன்:—சொல்லு சீக்கிரம்!

ஊர்வசி:—க்ஷீக்ரமல்ல; ஸாவஹ்ாஸமாய், ஸதுர் அலங்கார ஸோபிதமாய்...ஸொல்லவா......?

குன்றன்:—எப்படியாவது சொல்லி ஒழி.

ஊர்வஸி:— [காம வெறியூட்டும் ஆடல்பாடலோடு, திராவிட பூபதியைக் கூட்டிக் கொண்டுபோய் அவனோடு அவள் அனுபவித்த இன்பத்தை எல்லாம் வருணித்து விட்டு, அவன் இப்போது இந்த்ரனைப் திராவிடர் கோட்டைக்குள் திரும்பி வந்திருக்கிறான் என்று பாடி முடிக்கிறாள்.]

குன்றன்:— [திராவிட பூபதி திராவிடர் கோட்டைக்குள் திரும்பி வந்து விட்டான் என்ற வார்த்தையைக் கேட்டவுடனேயே அங்கிருந்து அதிவேகமாய் சென்று விடுகிறான்.]

ஊர்வஸி:— [ஆட்டம் முடிவில் பூங்குன்றன் அங்கில்லை என்பதறிந்து ஏமாற்றத்தோடு செல்கிறாள்.]

——:(o):——

## காட்சி 15. [எண் பேராயம்]

உறுப்பினர்:—பூமகள், பூங்கோதை, அமைச்சு, ஆயத்து மல்வி, அம்பல மல்லன், மாபாடி, மாமல்லன், பூங்குன்றன், திராவிட பூபதி, ப்ரஹஸ்பதி, அக்னீத்ரன், உபஹோதா, ஹோதா.

நிகழ்ச்சி:— [ப்ரஹஸ்பதி, திராவிடர்களுக்குள் பெரும் பிளவை உண்டாக்கித் தனக்கு இராஜகுரு பதவியையும், அக்னீத்ரனுக்கு தளபதி பதவியையும், கிடைக்கச் செய்கிறான்.]

மல்லன்:—  [திராவிட பூபதி அமர்ந்திருப்பதற்காக அவையில் ஒரு உயரமான ஆசனம் அமைக்கப்பட்டிருப்பதைக் கூர்ந்து நோக்குகிருன்.]

மல்லி:—  [அவையில் உயர்த்தி அமைக்கபட்ட திராவிட பூபதியின் ஆசனத்தைப் பார்வையிட வருகிருள்.]

மல்லன்:—மல்லி...! மல்லி......!! மல்லி.........!!!

மல்லி:—உனக்கு வெட்கமில்லை! நாந்தான் உன்னோடு பேசுவதில்லையே!

மல்லன்:—வெட்கமில்லை மல்லி, துக்கந்தான்!

மல்லி:—நீ துக்கப்பட்டால்த்தான் எனக்கென்ன? வெட்கப் பட்டால்த்தான் எனக்கென்ன?

மல்லன்:—துக்கம் எனக்கு மட்டுமா? நம் எல்லோருக்குமே!

மல்லி:—என்னது...? நம் எல்லோருக்குந் துக்கமா......??

மல்லன்:—  [ஆம் எனத் தலையசைத்துத் துக்கத்தி லாழ்கிருன்.]

மல்லி:—மல்லா...!—மல்லா......!!—மல்லா.........!!!

மல்லன்:—உனக்கு வெட்கமில்லை? நாந்தான் உன்னோடு பேசுவதில்லையே......

மல்லி:—ஓ...! இதுக்குத்தானு இந்த நடிப்பு......?

மல்லன்:—இல்லை. அதோ, அந்த இருக்கையைப் பார்த்தாயா?

மல்லி:—ஊம். பார்த்தேன், சற்று உயர்ந்திருக்கிறது.

மல்லன்:—மற்றவை...?

மல்லி:—தாழ்ந்திருக்கின்றன.

மல்லன்:—சரிசமமாய் இருந்த இவ்விருக்கைக ளிடையே இன்று உயர்வு தாழ்வு ஏற்பட்டுவிட்டதே! இது நம் எல்லோருக்குந் துக்கத்தைத் தரக்கூடிய நிகழ்ச்சி இல்லையா?

மல்லி:—ஆமாம். இதைப்பற்றி ஆலோசிப்பதற்காகத் தான் சற்று முன்னதாகவே நான் இங்கு வந்திருக் கிறேன். இது யாருடைய கட்டளை?

மல்லன்:—இராஜகுரு ப்ரஹஸ்பதியின் கட்டளையாம்!

மல்லி:—இருக்க இடங் கேட்டவன், இருக்கையை உயர்த்தவும், தாழ்த்தவும் கட்டளையிடும் அளவுக்கு வந்துவிட்டானு? ஊம். அந்த உயர்ந்த இருக்கையில் இருக்கப் போகிறவன் யார்?

மல்லன்:—இன்னும் சற்று நேரத்தில் தெரிந்துவிடும்.

உப.ஹோதா
ஹோதா } :—மஹாவிஷ்ணுாப் பிரதிபதி......! மஹா...

மஹா ராஜாதிராஜ ராஜ மார்த்தாண்ட ராஜ கெம் பீர வீர தீர பராக்ரமச் ஸோமபான ப்ரியத் திராவிட பூதேவந்திரன் இந்த்ர ஸபா விஜயம்!! பராக்......!!!

[எனக் கூறிக்கொண்டே வந்து முன்னல் ஆளுக்கொரு பக்கத் தில் நிற்கின்றனர்.]

திராவிடபூபதி:—

[இடது கரத்தில் ஸோமபானக் குடுக்கையோடும், சிங்கத்தின் தோல்களாலும், நகங்களாலும், பற்களாலும், காட்டெருமைக் கொம்புகளாலும் அலங்கரிக்கப் பட்டு மிக்கக் கெம்பீரமாக நடந்து வந்து உயர்ந்த இருக் கையில் அமர்த்தி வைக்கப்படு கிருன்.]

ப்ரஹஸ்:— [திராவிட பூபதிக்கு அகம்பாவத் திமிர் ஏற்படும் வண்ணம் அவன் மனோநிலையைத் தன் நடிப்பினாலும், ஸோமபானத்தினாலும் மாற்றி உயர்ந்த இருக்கையில் அமர்த்திவிட்டு அவனுக்கு அருகில் அமர்ந்திருக்கிறான்.]

பூமகள், அமைச்சு, கோதை, மாபாடி, மாமல்லன், குன்றன், மல்லன், மல்லி:— [வழக்கம்போல் வந்து தத்தம் இருக்கையில் அமர்ந்திருக்கின்றனர்.]

மாபாடி:— [அமைச்சை நோக்கி, பேசுமாறு தலையசைத்துச் சமிக்கை செய்கிறார்.]

அமைச்சு:—அவையீர்! நமது சிந்து பள்ளத்தாக்கிற்கும் நர்மதை ஆற்றிற்கும் இடையிலுள்ள அகண்ட தார் பாலை நிலத்தின் நடுவே நீண்ட பெரிய ஆறும், அவ்வாற்றிலிருந்து பல சிற்றூர்களும், அச்சிற்றூர்களின் நீர்ப் பாய்ந்து நிரம்புவதற்குத் தகுந்த பல பெருங் குளங்களும், அக்குளங்களிலிருந்து பற்பல கால்வாய்களும் தோண்டினால், நீர் வளம் நிறைந்து நிலவளம் மிகுந்து பாலை குறிஞ்சியும், மருதமுமாய் மாறிவிடக் கூடும்.

பூமகள்:—அமைச்சு அருளிய இவ்வாலோசனையை நான் ஏற்கிறேன். இப்போது நம் நாட்டில் புகுந்து நம்மை அண்டிப் பிழைக்க வந்திருக்கும் ஆரியர்கள் தம் ஆடு மாடுகளை மேய்ப்பதைத் தவிர, வேறு உடல் உழைப்பே அறியாத நாடோடிகள். நம்நாடு எவ்வளவு தான் செழிப்புடையதாய் இருந்தாலும், உழைக்கப் மலே உண்டு கொழுக்கும் கும்பலால் பாலை நிலமாக்கா பட்டு விடுமோ என்று ஐயப்படுகிறேன்.

ஆதலால், ஆரியர்களுக்கு உடல் உழைப்புக் கற்றுக் கொடுப்பதற்காக வேண்டியேனும், ஆரியர்களைக் கொண்டு பாலையைக் குறிஞ்சியும் மருதமுமாய்த் திருத்தும் வேலையை நாம் ஆரம்பிக்க வேண்டும் என்று விரும்புகிறேன்.

மாபாடி:—தலைவியின் விருப்பத்தை நான் வரவேற்கிறேன்! ஏனென்றால், "வருந்தாதார் வாழ்க்கை திருந்துத லன்று"

ப்ரஹஸ்:—ஹேய் மஹிஷி! ஆர்யர் மேஷ ரிஷப போஷஹர் மட்டுமல்ல; மஹா தபஸிரேஷ்டர். தபஸ் ஸாமான்ய மல்ல! திரேஹக் கஷ்டம் எதேஷ்டம்!! பத்மாஷனம்—மயூராஷனம்—சிரஸாஷனம்—ஸர்வாங்காஷனம்.........
இதுகளெல்லாம் ஸாமான்யமா? கஷ்டம் கஷ்டம் மஹா கஷ்ட ஸாத்தியம்!!!

அமைச்சு:—தபஸ் என்றால் என்ன?

மாபாடி:—அவரவர் உடலை அவரவரே பலவாறு வருத்தித் துன்புறுத்திக்கொள்வது!

அமைச்சு:—அதன் பலன்?

ப்ரஹஸ்:—ஸர்வ ஸித்தி! ஸர்வ ஸௌக்கியம்!! ஸர்வ ஸாபல்யம்!!!

பூமகள்:—பாலை நிலம் சோலை நிலமாகுமா?

மாமல்லன்:—பாலாறும், தேனாறும் பாயுமா?

கோதை:—விதைக்காமலே விளையுமா?

குன்றன்:—வேலை செய்யாமலே வேண்டியவை பெறலாமா?

மல்லி:—புசிக்கமலே பசிக்காதா?

மல்லன்:—புலனில்லாமலே புரிந்து கொள்ளலாமா?

ப்ரஸ்பதி:—ஸாந்தி...! ஸாந்தி...!!

பூபதி:—ஸாந்தீ......!!!

[எனச் சோமபான போதையில் அலறுகிறான்.]

உபஹாதா }
ஹோதா } :—[அக்னீத்ரன் வருவதறிந்து]

தேவ தேவாதி, தேவ மஹேஸ்வர வரப்ராஸத! பூதேவ ச்ரேஷ்ட அக்னீத்ரக்ஷணுதிபதி விஜயம்......... !! பராக் !!!

அக்னீத்:— [மிகக் கெம்பீரமாய் நடந்து வருகிறுன்]

பூம்கள்:—யாரவன் ?

மாபாடி:—தளபதியாம்?

பூபதி:—ஆம். அவனைத் தளபதியாய் நானே ஏற்படுத்தினேன் !

அமைச்சு:—பூங்குன்றன்.........?

பூபதி:—போக்கு எனக்குப் பிடிக்கவில்லை!

குன்றன்:—என் போக்கில் என்ன தவறேற்பட்டது?

பூபதி:—சிந்துப் பள்ளத்தாக்கிற்கு நான் கடத்திச் செல்லப்பட்டபோது, நீ என்ன செய்து கொண்டிருந்தாய் ?

குன்றன்:— [பதிலளிக்க முடியாமல் தலை குணிகிறுன்.]

கோதை:—கடமையைச் செய்யத் தவறியது குற்றந்தான்! ஆனுல்,அவ்வாறு தவறிழைக்கும்படி சோமச்சாற்றை ஊட்டி மதியை மயக்கிவிட்டுத் தலைவனைக் கடத்தி சென்றவன் குற்றவாளி இல்லையா ? அவனுக்கு மட்டும் இராஜகுரு என்ற புதிய பதவியைக் கொடுத்து ஆதரிப்பதேன்?

பூபதி:—இராஜகுரு ப்ரஹஸ்பதி, எனக்குச் செய்திருக்கிற செயற்கரிய செயலை நீங்கள் அறிந்தால், ஆச்சரியப் படுவீர்கள்!

சிந்துப் பள்ளத்தாக்கில் ஆரியர் கூடாரத்திற்குள் நான் தன்னந்தனியே நிற்கும்போது, அங்கிருந்த ஆரியத் தலைவன் என்னைக் கத்தியால் குத்திக் கொல்ல முயன்ருன்!

அப்போது, அவனைத், தம் தலைவன் என்றுகூடப் பாராமல், கட்டாரியால் குத்திக் கொன்றுவிட்டு, என்னைக் காப்பாற்றிக் கௌரவித்தார்கள் என்றால், இவ்வாரிய குலத் திலகங்களாகிய இராஜகுரு ப்ரஹஸ்பதிக்கும், தளபதி அக்னீத்ரனுக்கும் திராவிடராகிய நம்மீது எவ்வளவு அன்பிருக்கிறது பார்த்தீர்களா!

இதனால்த்தான் இவர்களுக்கு என் நன்றியறிதலாய் இப் பதவிகளை ஈந்துள்ளேன்.

பூமகள்:—நமது பழய தளபதி பூங்குன்றன் போக்கிலும், கடமையிலும் தவறேற்பட்டிருக்கிறது என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன்!

கோதை:—ஆனால், புதிய தளபதி அக்னீத்ரன் தன் ஆற்றலை இவ்வவையோர் அறியும் வண்ணம் காட்டிய பிறகே பதவி ஏற்கவேண்டும்!

ப்ரஹஸ்:—அது அநாவஷ்யம்...........

அமைச்சு:—அல்ல; அவசியம்.

அக்னீத்ரன்:—ஆஹா? என் புஜபல பராக்ரமப் பரிக்ஷார்த்தநிமித்தம் நான் ஆயத்தமே.........

[எனக் கட்டாரியைக் கையில் ஏந்திக்கொண்டு திடீரென்று பூங்குன்றன் மீது, அவன் முதுகிற்குப் [பின்னாலிருந்து பாய்கிறான்.]

மாபாடி :—தளபதி......!

[எனக் கூவிப் பூங்குன்றனை எச்சரிக்கிறார்,]

குன்றன்:—

[மாபாடியினால் எச்சரிக்கப்பட்டு மயிரிழையில் உயிர் தப்பிய பின் அக்னீத்ரனை நேருக்கு நேர் எதிர்த்து நின்று போராடிப் புரட்டிப் புரட்டியடிக்கிறான்.]

கோதை:— [பூங்குன்றனின் போர்த்திறனைக் கண்டு பூரிக்கிருள்.]

ப்ரஹஸ்:—பூதேவேந்த்ரா! உன்னை ரக்ஷித்த அக்னீதரனை ஒருவன் பக்ஷிக்கலாமா.........?

பூபதி:—கூடாது! நன்றி கெட்ட தன்மை!!

[எனச் சோமபானத்தைக் குடித்தபின் குடுக்கையை எறிந்து விட்டுக் கைவேல் ஒன்றை எடுத்துக்கொண்டு பூங்குன்றனைத் தாக்கப் போகிருன்.]

கோதை:— [உடனே தானொரு கைவேலை எடுத்துக்கொண்டு பாய்ந்து சென்று பூபதியின் தாக்குதலை எதிர்த்துத் தடுத்துச் சுழற்றி அவன் கைவேல் கையை விட்டுக் கழன்ருேடுமாறு செய்துவிட்டு, அவன் நெஞ்சுக்கு நேரே தன் கைவேலை நீட்டிக்கொண்டு]

நில். சோமச் சாற்றிலே சொக்கி, ஆரியக் காமச் சேற்றிலே மூழ்கிய அப்பனே! அருமைத் தலைவனே!! அறப்போர் முறை அறியாதவன் ஆர்யன்; திராவிடனல்ல!!! அசையாது நின்று பார்—போர் முடிவில் வெற்றி யாருக்கென்று கூற்.

பூமகள்:— [திராவிடப் பூபதியின் கையிலிருந்து கழன்று தன் தலைக்கு மேல் சுழன்று வந்த கைவேலைத் தன் கையில் பற்றிப் பிடித்துக் கொண்டெழுந்து திகைக்கிருள்.]

ஆ......ங்...?

ப்ரஹஸ்:—இந்த்ரா! ஸ்திரீ ஸஹ்வாஸதோஷமே, புருஷ ரோஷ நாஷம்!!'

பூமகள்:—ச்சீ! 'ஆரியர் தலையீடே அறத்திற்குக் கேடு!!'

[எனப் பிரஹஸ்பதி மீது சீறி விழுகிருள்]

பூபதி:—அந்தோ! அவதூறு! அவதூறு!! எனது குரு தேவிற்கு மகத்தான அவதூறு!!!

மாபாடி:—அவையீரே! அமைதி நிலவ அருள்வீராக!!

[என எழுந்து சென்று படுகாயப் பட்டுத் தோற்றுவிடுந் தருணத் தை அடைந்துள்ள அக்னீத்ர னின் மானத்தைக் காப்பாற்றி போரை நிறுத்திவிட்டுப் பூங்குன் றனைத் தன் அருகில் அழைத்துக் கொண்டு]

இன்று இவ்வவையை இத்துடன் இனிது கலைப்பதற்குமுன் சிலவார்த்தைகள்: நான் "திராவிட மாபாடியம்" எனும் ஒரு மாபெரும் ஏடெழுத நேரிட்டிருக்கிறபடியால், நிம்மதி யான ஒரு இடத்திற்குச் சென்று சில தினங்கள் தங் கப் போகிறேன். எனக்குத் துணைவனாகத் தளபதி பூங்குன்றனையும் அழைத்துச் செல்ல விழைகிறேன். ஆதலால், என் பொறுப்பை இனி இங்கு நமது இராஜகுரு ப்ரஹஸ்பதியே ஏற்றிருப்பார்! புதிய தள பதி அக்னீத்ரனும் அவருக்கு ஏற்ற துணையாக விளங்குவார்!! வணக்கம்!!!

[எனக் கூறிவிட்டுப் பூங்குன்ற னைத் தன்னோடு அழைத்துக் கொண்டு செல்கிறார்,]

உபஹோதா }
ஹோதா } :—

[திராவிடர் எல்லோரும் சோகத் தோடு கலைந்து செல்வதைக் கூர்ந்து கவனித்துவிட்டு, பெரு மூச்சு விட்டு இளைத்துக்கொண்டு கிடக்கும் அக்னீத்ரன் அருகில்ச் சென்று.]

ஜேய்...! ஜெய விஜயீ பவா......!!

ப்ரஹஸ்:—ததாஸ்த்து......!!!

——(0)——

## காட்சி 16. [சாலை]

உறுப்பினர்:—பூங்குன்றன், பூங்கோதை, ஊர்வசி, ப்ரஹஸ்பதி, உபஹாதா, ஹோதா, சில வழிப்போக்கர்கள்.

நிகழ்ச்சி:— [பிரஹஸ்பதி தக்க சமயத்தில் ஊர்வசியையும் கொலை செய்து விட்டு, அப்பழியை பூங்கோதை மீது பொருந்தச் செய்து விடுகிறான்.]

கோதை :— [ஆழ்ந்த சிந்தனையோடு சென்று கொண்டிருக்கிறாள்.]

குன்றன்:— [பூங்கோதையைத் தொடர்ந்து வந்து அவளது புயமிரண்டையும் பற்றித் திருப்பி அவள் முகத்தை மிகவும் உருக்கமாகப் பார்த்து விட்டு]

நான் இன்று உன்னைப் பிரியப் போகிறேன்......

கோதை:—உன் உள்ளம் என்றைக்கோ பிரிந்து போய் விட்டதே.........

குன்றன்:—கோதை! நீ என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவே இல்லை......

கோதை:—ஆமாம். அதனால்த்தான், நான் உன்னை அறி வீனமாய்க் காதலித்துவிட்டேன்!

குன்றன்:—உனக்கு அறிவீனம் ஏற்பட்டு அதிக நாட்க ளாகி விடவில்லையே......?

கோதை:—நீ எப்போது ஆர்யமாய்கைக்கு அடிமைப் பட்டாயோ, அப்போதிருந்து தான் நான் உனக்கு அறிவீனம் உடையவளாய்த் தோன்றுகிறேன்! அப்படித் தானே?

குன்றன்:—இல்லை. நீ எப்போது என் மீது அப்படிச் சந்தேகப்பட ஆரம்பித்தாயோ, அப்போதிருந்து!

கோதை:—சந்தேகமே இல்லை. உறுதியாகக் கூறுகிறேன்! நீ, ஆரிய மாய்கைக்கு மட்டுமல்ல; அந்த ஆர்ய ஆடல் அணங்கிற்கும் அடிமை! அடிமை!! அடிமை..!!!

குன்றன்:—இல்லை இல்லை! இல்லை!! ஒருக்காலுமில்லை !!!

கோதை:—ஆமாம் ஆமாம்! ஆமாம்!! நீ அடிமையேதான்!!!

குன்றன்:—பூங்கோதை! என் வார்த்தையை நம்பு. நான் நம் உண்மைக் காதல் மீது ஆணையிட்டுக்கூறுகிறேன். எனக்கு உன்னைத் தவிர வேறு எவளிடத்திலுமே மோகமில்லை.

கோதை:—பொய் பொய்! முழுப் பொய்!! மூடு வாயை!!! நீ அந்த ஆரியக் காமக் கிழத்தியோடு களியாட்டம் புரிந்ததை என் அன்னையே தன் கண்ணெதிரிலேயே கண்டுவிட்டாளே......இன்னமுமா என்னை ஏமாற்றப் பார்க்கிறாய்?

குன்றன்:—என்ன...? உன் அன்னை, தன் கண்ணெதிரில்...? என்னை-அவளோடா...? எங்கே? எப்போது?

கோதை:—மலைச் சாரலிலே! மாலை நேரத்திலே!!

குன்றன்:—ஓகோ! அதுவா...? உம். அதையாவது இறுதிவரை கண்டறிந்த பிறகு, கூறியிருக்கக் கூடாதா அறிவுக் கண்ணழிந்த உன் அன்னை?

கோதை:—க்போதி! என் அன்னையையா தூற்றுகிறாய்?

[என ஆத்திரத்துடன் பூங்குன்றன் கன்னங்களில் பளீர் பளீர் என அறைகிறாள்.]

குன்றன்:— [சற்று நேரம் அசைவற்று நின்ற பின் துக்கத்தோடு திரும்பிச் செல்கிறான்.]

கோதை:— [தன் முகத்தைத் தனது உள்ளங் கைகளுக்குள் புதைத்துக் கொண்டு பொருமி அழுகிறாள்.]

ஊர்வசி:— [பூங்குன்றனைப் பின் தொடர்ந்து செல்கிறாள்.]

ப்ரஹஸ்:— [ஒரு மரத்தின் மறைவிலிருந்து, ஊர்வசியின் மார்பு மீது அம்பெய்து கொல்கிறான்.]

ஊர்வசி:—ஆ...ய்! ஐ...யோ......

[எனக் கதறி வீழ்கிறாள்.]

கோதை:— [ஊர்வசியின் குரல் கேட்டதும் தன் அழுகையை நிறுத்திக் கொண்டு அவளை ஏறிட்டுப் பார்த்து ஆச்சரியப்பட்டு அருகில் சென்றதும் இரக்கப்பட்டு அவள் மார்பில் பதிந்துள்ள அம்பை உருவி உற்றுப் பார்க்கிறாள்.]

உபஹ்ராதா } ஹோதா }:—ஐயய்யோ...கொலை, கொலை, கொலை...... ஹேய்......! ஆபத் பாந்தவா......ஆர்ய ரெக்ஷஹா... ஊர்வஸீ ஸஹாயா......ஓடிவா ஓடிவா ஊர் ஜனங்களே! கொலை கொலை கொலை......

[எனப் பூங்கோதையை மறித்துக்கொண்டு கூச்சலிடுகின்றனர்.]

ப்ரஹஸ்:— [தன் கையிலுள்ள வில்லையும் அம்புகளையும் வீசி எறிந்துவிட்டு மறைவிடத்தை விட்டுக் கிளம்பி வழிப்போக்கர்களோடு கலந்து கொண்டு தந்திரமாய் அங்கு வருகிறார்.]

வழிப்போக்கர்:— [நாலா பக்கங்களிலிருந்தும் ஓடி வந்து பார்த்து விட்டு]

கொலையா...! யார் செய்தது?

உபஹ்ராதா } ஹோதா }:— [பிரஹஸ்பதியை நோக்கி]

குருதேவ்! ஸ்திரீ ஹஸ்தி......

வழிப் போக்கர்:—ஐயோ! ஆரியப் பெண்ணொருத்தியை யாரோ கொலை செய்து விட்டனரே!!

ப்ரஹஸ்:—ஹா! ஊர்வஸி......!! ஸரீரம், ஸம்பத், பிராணம் ஸர்வத் தியாஹி நீ!!!

ஹேய்...யுவராணி! இந்த ஸ்திரீயைப் பிராண ஸேதம் ஸெய்தது யார்?

கோதை:—நான் அறியேன்.

ப்ரஹஸ்:—எனக்கு ஸ்பஷ்டமாகி விட்டது!

கோதை:—யார்?

ப்ரஹஸ்:—உன் இஷ்ட புருஷன் பூங்குன்றன்......?

கோதை
வழிப்போக்கர் } :—ஆங்......?

ப்ரஹஸ்:—அல்லது .........

கோதை:—பூங்குன்றன்...? திராவிடரின் வீரத் தளபதி! அவன் மீதா, இந்த ஆரியப் பெண்ணைக் கொன்றான் என்ற பழி?

ப்ரஹஸ்:—ஆமாம்!

கோதை:—அடுக்காது.

ப்ரஹஸ்:—ஸ்திரீ ஹஸ்தி ஸெய்துவிட்டு ஓடும் பேடி... பெரிய க்ஷேணுதிபதி?

கோதை:— ['பளீர்' எனப் ப்ரஹஸ்பதியின் கன்னத்தில் அறைந்துவிட்டு, வழிப்போக்கர்களை நோக்கி]

வீரத் திராவிடரே! வெள்ளை உள்ளத் தோழரே! அறப்போரன்றிப் புறப்போரறியா நமது அருமைத் தளபதியை பற்றி, இந்த ஆரியன் கூறியதைக் கேட்டீர்களே!!! உங்கள் இரத்தம் கொதிக்கவில்லையா? இருதயந் துடிக்கவில்லையா?

ஈனப் பழி சுமத்தும் இந்த மானங்கெட்ட மரபினன் இன்னமும் உயிரோடு நிற்கின்ருனே உங்கள் முன்பு?

ப்ரஹஸ்:— [மனங் குழம்பி அச்சம் கொள்கிருன்.]

உபஹாதா
ஹோதா } :— [பூங்கோதையின் கோபத்தைக் கண்டு பயந்து நடுங்கி ஒருவரை யொருவர் கட்டிப் பிடித்துக் கொண்ட வண்ணமே]

ஊர்வஸி...ஊர்வஸி......ஊர்வஸி......ஐயோ........ கந்தர்வ ஸுந்தரியே.........

[என ஒப்பாரி வைத்து அழுகின்றனர்.]

வழிப்போக்கர்:—அப்படியானல், இப்பெண்ணைக் கொன்ற வர் தான் யார்?

கோதை:— [சற்று திகைத்த பின்] யாரோ.........

வழிப்போக்கர்:—ஊ...ங்......?

கோதை:—என்று நான் கூறினல், என் வார்த்தையை நீங்கள் நம்பவேமாட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும்! ஏனென்ருல், இவள் மார்பில் பாய்ந்த அம்பு இதோ என் கையில் இருக்கக் காண்கிறீர்கள்!! நான் இந்த ஆரியச் சிறுக்கி மீது கொண்டிருந்த வெறுப்பைப் பற்றி இப்பிரஹஸ்பதி நன்கறிவான்!!! ஆனல், ஒரு திராவிடன் ஒரு ஆரியப் பெண்ணையேனும் மறைந்திருந்து அம்பெய்து கொன்ருன் என்ற மாபெரும் ஈனப்பழிக் குறிப்பு எந்த ஏட்டிலும், எக்காலத்திலுமே இடம் பெறக்கூடாது என்பதற்காக வேண்டியே, இப்பழியை நானே ஏற்கின்றேன். நாந்தான் இவளைக் கொலை செய்தேனென்று கூறி.

உபஹாதா
ஹோதா } :—கொலைகாரி!

ப்ரஹஸ்:—பஞ்ச மஹாப் பாதகி !!

வழிப்போக்கர்:—நீ கொலைகாரியா?

ப்ரஹஸ்
உபஹாதா
ஹோதா } :—ஆம். கொலைகாரி, கொடுமைக்காரி, கொலைகாரி, கொலைகாரி, கொலைகாரி......

[எனக் கூக்குரல் போட்டுக் கொண்டும், அப்பிணத்தை தூக்கிக் கொண்டும், பூங்கோதையைக் கைதிபோல் நடத்திக் கொண்டும் செல்கின்றனர்.]

—(o)—

## காட்சி 17. [மக்கள் மன்றம்]

உறுப்பினர்:— மாமல்லன், மல்லன், மல்வி, திராவிட பூபதி, பூமகள், பூங்கோதை, திராவிடப் பெருங்குடிமக்கள், ப்ரஹஸ்பதி, உபஹாதா, ஹோதா, அக்னீத்ரன்.

நிகழ்ச்சி:— [மக்கள் மன்றத்திலே மரண தண்டனை விதிக்கப்பட்ட பூங்கோதையைப் பூமகள் பலாத்காரமாய்க் கடத்திக்கொண்டு செல்கிருள்.]

கோதை:— [குற்றவாளிக் கற்கூண்டிற்குக் கொண்டு வரப்படுகிருள்.]

ப்ரஹஸ்பதி
உபஹாதா
ஹோதா } :—கொலைகாரி! இவள் கொலைகாரி!! எங்கள் ஊர்வஸியைப் பிராண ஸேதம் செய்த பஞ்ச மஹாப் பாதகக் கொலைகாரியய்யாக் கொலைகாரி.........

திராவிடப்
பெருங்குடி } :—இல்லை! இருக்காது!! எங்கள் தலைவியின் மகள் மீது தவருன பழி சுமத்துகிறீர்கள்!!! பழி, பழி, வீண்பழி.........

மாமல்லன்:—அமைதி, அமைதி, அமைதி.........பூங்கோதை..........?

கோதை:—மன்றத் தலைவனே! மாபெருங் குடிமக்களே!! நம்மை அண்டிப் பிழைக்க வந்த ஆரியப் பாம்பின் நச்சுப் பல்லிற்கு நான் இறையாகச் சம்மதித்துவிட்டேன்!!! திராவிடச் சிங்கத்தை சிறை பிடிக்க ஆரியச் சிறு நரியைச் சாகடித்துப் போட்டு சூழ்ச்சி வலை விரித்து வைத்திருந்தான் குள்ளநரிக் குணம் படைத்த இப்புல்லன்.

இவன் கள்ளம் ஒழிய, கபடம் அழிய, அறிவுவெள்ளம் பெருகி ஆரியப் பூண்டற்றுப் போகவே நான் கொலைக் குற்றம் ஏற்றுள்ளேன்!

என்னைக், கொலைக்குக் கொலை செய்து குழிதோண்டிப் புதைத்து விடுங்கள்!! ஆனால், அதே சவக்குழியில் ஆரிய மாய்கையையும், அழித்துப் புதைத்திட மறந்திடாதீர் மறத் திராவிடரே...!!!

மாமல்லன்:—பூங்கோதை! நீ கொலைகாரி என்பது உண்மைதானா?

கோதை:— [துக்கத்தோடு தலையைத் தாழ்த்துகிறாள்.]

மல்லன்:—நம் தலைவி மகள் கொலைகாரியா?

மல்லி:—நம்பவே முடியாத நாடகம்?

ப்ரஹஸ்:—இல்லை. ஊர்வசியைப் பிராண ஸேதம் ஸெய்த பஞ்ச மஹாப்பார்தஹி நானே என்று, யுவராணிதானே ஸம்மதிக்கிறாள். நியாய ஸ்தலத்தில் நியாய க்ஷிக்ஷை கைக்ஷயே சமர்ப்பிக்கப் பிரார்த்திக்கிறேன்.

---

மாமல்லன்:—ஆரியரே! இந்நீதி மன்றத்தில் ஓரம் கூறுவோர் திராவிடர் பரம்பரையிலே ஒருவர்கூட இருந்ததில்லை! இருக்கவுமில்லை!! இருக்கவேமாட்டார்கள்!

பூமகள்:—மகளே......!!

[என அலறிக்கொண்டு ஓடி வருகிறாள்]

கோதை:—அம்மா!!!

[எனக் கதறித் தாயைக் கட்டிப் பிடித்துக்கொண்டு கண்ணீரைக் கொட்டுகிறாள்]

மாமல்லன்:—ஊர்வசியைக் கொலை செய்ததாய் ஒப்புக் கொள்ளும் பூங்கோதைக்குக் கொலைத் தண்டனை...

[என்று தளர்ந்த குரலில் தீர்ப்பளிக்கிறான்.]

பூமகள்:—ஆ...ங்......? பூங்கோதை ஊர்வசியைக் கொலை செய்யும்போது பார்த்தவர் யார்?

கோதை:...அம்மா......?

பூமகள்:—நீ சும்மா இரு—யார் தம் கண்களால்ப் பார்த் தனர்?

[என்று முழங்குகிறாள்.]

மாமல்லன்:—யாரும் தம் கண்களால்ப் பார்க்கக்கூடாதபடி ஒருத்தியை மற்றொருத்தி கொலை செய்திருக்க முடியாதா?

பூமகள் கொலையே செய்யாத ஒருத்தி ஒரு கொலைகாரன் மீதுள்ள அளவு கடந்த அன்பினால், அவன் செய்த கொலையைத் தான் செய்ததாய் ஏற்றுக்கொண் டிருக்கக் கூடாதா?

ப்ரஹஸ்:—புருஷனோ, ஸ்திரீயோ! கொலைக்குக் கொலையே க்ஷிக்ஷை க்ஷி!!

கோதை:—அம்மா? ஒரு திராவிட வீரன், மறைந்திருந்து ஒரு பெண்ணைக் கொலை செய்துவிட்டு ஓடியிருப்பான் என்று எண்ணுவதே இழிவம்மா!!!.........

பூமகள்:—அந்த இழிவைத் துடைக்க உனக்கு நீயே இப் பழி ஏற்றுக்கொள்வதை நான் ஒருக்காலும் ஒப்பவே மாட்டேன்!

மல்லன்
மல்லி } :—ஆம். வீண்பழியை ஒப்பவேமாட்டோம்......

[எனக் கிளம்புகின்றனர்.]

மாமல்லன்:—இது நீதிமன்றம்! இங்கு அமைதி தேவை!!

பூமகள்:—இல்லை. எப்போது இம்மன்றத்துள் ஆரியம் புகுந்ததோ, அப்போதிருந்தே இது அநீதி மன்றம்! இனி, இங்கு அமைதி நிலவாது!! சூழ்ச்சி புயலில், சூறுவளி வாதத்தில், சூதுக் கதை கதைத்து வாதுக் கிழுத்து வாக்குத் திறத்தால், பொய்யை மெய்யாக்கி மெய்யைப் பொய்யாக்கும் பேச்சலைகள் கிளம்பிப் பேரிரைச்சல் புரியும் பொய்கையாகுமிது!!!

மல்லன்
மல்லி
மற்றும் சிலர் } :—பொய்ப் பழி சுமத்தும் ஆரியம் ஒழிக! ஆரிய மாய்கை அழிக!! வீழ்க வீண் பழி!!! வெல்கத் தலைவி!!!! வாழ்கப் பூங்கோதை...... பூங்கோதை வாழ்க........

[எனக் கிளர்த்தெழுகின்றனர்.]

மாமல்லன்
மற்றும் சிலர் } :—அமைதி அமைதி அமைதி அமைதி அமைதி அமைதியாய் இருங்கள்........அமைதி .. அமைதி............

ப்ரஹஸ்
உபஹோதா
ஹோதா } :— [பயந்து நடு நடுங்கி மன்றத் தலைவனை அண்டி அடைக்கலம் புகுகின்றனர்.]

மல்லனும்
மல்லியும்
பூமகளும் } :— [பூங்கோதையைத் தூக்கிச் சென்று விடுகின்றனர்.]

——[x]——

## காட்சி 18. [சாலை]

உறுப்பினர்:— ப்ரஹஸ்பதி, உபஹாதா, ஹோதா.

நிகழ்ச்சி:— [சமைத்த சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்வதற்குரிய சூழ்ச்சியைத் தன் சீடர்களிடம் சொல்லியனுப்புகிருன் ப்ரஹஸ்பதி.]

ப்ரஹஸ்
உபஹாதா
ஹோதா } :— [மிரட்சிமிக்கவர்களாய் வெருண்டோடி வருகின்றனர்.]

உபஹாதா
ஹோதா } : கு...ரு...தேவ்......!

ப்ரஹஸ்:—எ...ன்...ன......?

உபஹாதா:—நம்......குயுக்தி......

ஹோதா:—நமக்கே...ஜீவன் முக்தி......

ப்ரஹஸ்:—சே...ய்...! ஷிஷ்யோய்......!

உபஹாதா
ஹோதா } : குருதேவ்......

ப்ரஹஸ்:—உம். தைர்யம் புருஷ லக்ஷணம்?

உபஹாதா:—ஸிக்கிய ஸமயம்?

ஹோதா:—ஸ்திரீ லக்ஷணம்?

ப்ரஹஸ்:—க்ஷீ. ஸர்வமும் ஸந்தர்ப்ப ஸமயோஜித ஸாஹஸ லக்ஷணம்!

உபஹாதா
ஹோதா } :—ஸித்தம் ஸித்தம், குருதேவ் ஸித்தம்.

ப்ரஹஸ்:—ஊம். ஸரி! நீங்கள் க்ஷீக்கிரமே போய் நமது க்ஷிரேஷ்ட க்ஷேஷ்திபதி அக்னீத்ரனுக்கு விஷயத்தைச் ஸவிஸ்த்தாரமாக்கித் திராவிட பூபதியைச்

ஸோமபான ஸாஹரத்தால் ஸ்நானம் செய்வித்துத், திரிலோக ஸுந்த்ரி திலோர்த்தமையின் காமபாத்ன தால் அவன் ஹிருதயத்தை ஆர்ய ஸேவா ஸதன மாக்கி வையுங்கள். போங்கள்.

உபஹோதா }
ஹோதா } ஆக்ஞை குருதேவ்

[எனப்பணிந்துவிட்டுச் செல்லும்போது]

ஜேய்....? ஜெய விஜயீ...!! பவா!!!

ப்ரஹஸ்:— ததாஸ்து.

[என ஆசிர்வதித்துச் செல்கிறான்]

———

## காட்சி 19. [ஐம்பெருங் குழு]

உறுப்பினர்:— திராவிட பூபதி, அக்னீத்ரன், மேனஹை, ரம்பை, திலோர்த்தமை, ப்ரஹஸ்பதி, உபஹோதா, ஹோதா, மாமல்லன், மீளிப்பாகன்.

நிகழ்ச்சி:— [ப்ரஹஸ்பதியின் சூழ்ச்சிகளெல்லாம் பலித்துவிடுகின்றமையால் அமைச்சு மீளிப்பாகனும் அவமதிக்கப்பட்டு விடுகிறான்.]

பூபதி:— [சோமபானம் பருகியவண்ணம் அரியாசனத்தில் வீற்றிருக்கிறான்]

மேனஹை }
ரம்பை }: [திராவிட பூபதிக்கு, இரு பக்கங்களிலும் நின்று மயில் தோகைகளால் விசிறுகின்றனர்]

திலோர்த் :— [கொட்டுங் கொம்பும் இன்னிசை முழங்கக் காமரசம் சொட்டும் நடனம் ஆடுகிறாள்.]

அக்னீத்:— [தனது ஆசனத்தில் அமர்ந்திருக்கிறான்.]

உபஹாதா } :— [காவல்காரர் போல் நிற்கின்றனர்.]
ஹோதா }

ப்ரஹஸ்:—ஹேய், பூதேவேந்திரா...

[எனக் கதறிக்கொண்டு பரபரப்போடு ஓடி வருகிறான்]

பூபதி:—உஸ்.........

[எனச் சமிக்கை செய்துவிட்டுத் திலோர்த்தமையின் நடனத்தில் ஆழ்கிறான்.]

ப்ரஹஸ்:— [அசடு வழியும் முகத்தோடு போய்த் தனது ஆசனத்தில் அமர்கிறான்.]

மாமல்லன்:— [ப்ரஹஸ்பதியைத் தொடர்ந்து வந்து தனது ஆசனத்தில் அமர்கிறான்.]

மீனி:— [நடனம் முடிந்த பிறகு வந்து தனது ஆசனத்தில் அமர்கிறான்.]

ப்ரஹஸ்:—ஹேய், திராவிட பூதேவேந்த்ர நீதி தேவா! உனது தர்ம ராஜ்ஜியத்தில் அதர்மம்...? அதுவும் ப்ராஹ்மண ஸ்திரீ ஹஸ்தி தோஷம் ஸம்பவிக்கலாமா?

பூபதி:—இராஜகுரு! யாரை யார் கொலை செய்தனர்?

ப்ரஹஸ்:—பூதேவேந்த்ரா! உனது அபூர்வ ஸம்போஹ ஸிலாக்கிய உத்தமி ஊர்வஸி அதர்மமாய்ப் பிராண ஸேதம் ஸெய்யப்பட்டாள்...

பூபதி:—ஊர்வஸி கொலை செய்யப்பட்டாளா? அடடா! சம்போகக் கலைக்கு ஒரு மாபெரும் நட்டம்!!

அக்னீ:—ஆஹா! அநுபவ ஸித்தாந்த ஸோஹரஸம் ஸொட்டுகிறது!!

பூபதி:—ஊம்...? கொலையாளி யார்?

ப்ரஹஸ்:—மஹாஜன நியாயஸ்தலத்தில் ப்ரத்தியக்ஷமாய்', 'நானே ஊர்வஸியைப் பிராண ஸேதம் ஸெய்தவள்' என யுவராணி தானே ஸம்மதித்துப் பிரலாபித்தாள்.

பூபதி:—ஆ...ங்? என் மகள் பூங்கோதை......?

மாமல்லன்:—கொலைகாரியேதான் தலைவா!

மீளி:—இல்லை. 'வீண்பழி' என மக்கள் மன்றமே முழங்கிற்றும்!

மாமல்லன்:—அமைச்சே! மன்றத் தலைவன் என்ற முறையில், நான் உண்மையை உணர்த்துகிறேன்!! நம் தலைவி தன் கடமையை மறந்து, மகள் மீது கொண்டுள்ள பற்றினால், மன்றத்தில் ஓரவஞ்சக வார்த்தைகளாடிக், குழப்பம் விளைத்துக் கொலைக் குற்றவாளியைக் கடத்திச் சென்று, காட்டில் ஒளித்து வைத்துக்கொள்ளும்படி நேர்ந்திருக்கிறது!!!

பூபதி:—என்ன......?

ப்ரஹஸ்:—பூதேவேந்த்ரா! மஹாஜன நியாயஸ்தல நியாயாதிபதி பேச்சு ப்ரத்தியக்ஷக்ஷமானது!!

பூபதி:—தளபதி!

அக்னீ:—ஆக்ஞை

[என எழுந்து வணங்கி நிற்கிறான்.]

பூபதி:—உடனே புறப்படு! திராவிடரின் தலைமுறை தலைமுறையாய்த் தவறாத நீதி வழங்கிவந்த மக்கள் மன்றத்திற்கு நீங்காத மாசுண்டாக்கிய நீலிகளைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவா!! அல்லது, உயிரோடு நெருப்பிட்டுக் கொளுத்திய அந்நீலிகளின் உடல்களையேனும் கொண்டுவரச் சற்றும் தயங்காதே!!! செல் சீக்கிரம்.

மீளி:—நில்.—தலைவா!

திலோர்த்:— [சமயமறிந்து திராவிடபூபதியின் முன் தோன்றிப் பசப்புகிறாள்.]

பூபதி:—சொல்வதைச் சீக்கிரம் சொல். தேவ மங்கை திலோர்த்தமை எனக்காகக் காத்துக் கொண்டு நிற்கிருள்!

மீளி:—தீர ஆலோசிக்காமல் இடப்பட்ட ஆணையை நிறைவேற்ற வேண்டாம்.

பூபதி:—உம். யாருக்கு யார் ஆலோசனை கூறுவது? இராஜ குரு!

ப்ரஹஸ்:—பூதேவேந்த்ரா!

பூபதி:—அந்தப் புத்திகெட்ட அமைச்சனிடம் நான் யாரென்பதைச் சற்று சொல்லிவை!

ப்ரஹஸ்:—ஆக்ஞை பூதேவேந்த்ரா.

[என வணங்குகிருன்]

பூபதி:— [அக்னீத்ரனை நோக்கி]

நீயேன் நிற்கிருய்? செல் சீக்கிரம்! அவசியம் ஏற்பட்டால், ஆள் அனுப்பு!! நானே நேரில் வருகிறேன்!!!

[எனக்கூறிக்கொண்டே திலோத்தமையின் அணைப்பில் இலயித்துச் செல்கிருன்.]

அக்னீ:—ஆக்ஞை பூதேவேந்த்ரா!

[என மீண்டும் பணிகிருன்.]

ப்ரஹஸ்:—ஹேய், ஷிஷ்யோய்!

உபஹாதா }
ஹோதா } குருதேவ்......

[என ஓடி வருகின்றனர்]

ப்ரஹஸ்:—ஸ்தூல ஸ்தம்பம் போல் ஸ்தம்பித்து நிற்கும் இந்த மதி மந்திரிக்குப் புரியும்படித், திராவிட பூபதியின் நூதன அவதார மஹோத்சவத்தைச், ஸொல்ப்பமேனும் க்ரஹிக்கச் ஸெய்வீர்களாக!

[எனக் கூறிவிட்டு மன்றத் தலைவன் மாமல்லனைத் தன் கூடவே அழைத்துச் செல்கிருன்.]

உபஹாதா
ஹோதா } :—ஆக்ஞை குருதேவ்!

[எனப் பணிந்து விட்டுத்திரும்பி]

பூதேவாதி தேவப் ப்ராஹ்மண ஸஹாயப் பூதேவேந்த்ரத் திராவிடப் பூபதி! விஷ்ணுப் பிரதிபதி...!!

மீளி:— [மிகுந்த துயரமும், அவமானமும் அடைந்து அங்கிருந்தகல்கிருர்.]

உபஹாதா
ஹோதா } :— [அமைச்சர் அகல்வதைக் கண்டு பரிகசித்துச் சிரித்துவிட்டு]

ஜேய்...! ஜெய விஜயீ...பவா!

ததாஸ்த்து......!!!

---

## காட்சி 20. [காட்டுப்பாதை]

உறுப்பினர்:— புலவர் மாபாடி, மல்லன், மல்லி.

நிகழ்ச்சி:— [நாட்டின் நாடி அறிந்து ஏடு எழுதும் புலவர் மாபாடி, மல்லனையும் மல்லியையும் சந்தித்து அவர்கட்கு அறிவுறுத்துகிருர்.]

மாபாடி:— [ஏடும் எழுத்தாணியும் உடையவராய்த்திரிகிருர்—எழுதுகிருர்—பாடுகிருர்.]

அடா அது ஆரிய ரடுக்குக் நற்றிராவிடம்
படா அது படும் படுதலைப் பட்டபின்னும்
கெடா அது தழைத்திடக் கெதிதமிழ் மொழியாம்
விடா அது காத்திடில் விரிதமிழ் உலகெனும்
வடா அது பனிபடு நெடுவரை வடக்கும்
தெனு அது உருகெழு குமரியின் தெற்கும்
குணு அது கரைபொரு தொடுகடல் குணக்கும்
குடா அது தொன்று முதிர் பௌவத்தின் குடக்கும்

மல்லன் }
மல்லி } :—வணக்கம்.

மாபாடி:—வணக்கம் வணக்கம்—அட!நீங்களா?

மல்லன்:—நாங்கள் தாம். பூங்கோதையைக் காப்பாற்றத் தலைவிக்குத் துணையாய் வந்தோம்!

மாபாடி:—அவர்கள் எங்கே?

மல்லி:—அருவி மலைக்கு அடுத்த குருவிக் குலக் குகைக் குள்.........

மாபாடி:—ஒளிந்திருக்கின்றனரா?

மல்லன்:—ஆமாம்.

மல்லி:—புலவர்...பெருமான்.........?

மாபாடி:—நானும் பூங்குன்றனும் அதே அருவிமலை முகட்டில்த்தான் பரண்குடில் கட்டி வசிக்கிறோம்.

மல்லன்:—அப்படியானால், நாங்களும் இங்கேயே தங்கி விடலாமா?

மாபாடி:—கூடாது.

மல்லி:—ஏன்?

மாபாடி:—கொடுங்கோண்மை மிக்க ஆரியர் குடிபுகுந்த நாட்டைவிடக் கடுங்கோண்மை மிக்க விலங்குகள் வாழும் காட்டையே நன்றெனநீங்கள் கருதலாம்! ஆனால், உழைத்து வாழும் திராவிடரை அண்டிப் பிழைத்து வாழ வந்த ஆரியர், உங்களைப் பிரிந் திருக்க விடுவார்களோ?

மல்லன்:—பிரிவினையை எதிர்க்கும் உரிமை ஆரியர்க் கேது?

மல்லி:—ஒண்டவந்தோர்க்கு உரிமை வேறா?

மாபாடி:—ஒண்டவந்தோர், ஊராளும் தலைவனைத் தம் மோடு ஒட்டவைத்துக் கொண்டால்......?

மல்லன்:—மக்கள் மன்றத்திலே உள்ள குற்றவாளிக் கற்கூண்டிலே நிறுத்திக் கடுந்தண்டனை கொடுப்போம்!

மாபாடி:—யாருக்கு?

மல்லி:—ஒண்ட வந்தோரிடம் நாட்டின் உரிமையை ஒப்படைக்கும் ஊதாரித் தலைவனுக்குத்தான்!

மாபாடி :—அப்போதும் வெற்றி ஆரியத்திற்கே ஆகும் அன்றோ?

மல்லன் }
மல்லி } : எப்படி.........?

மாபாடி:—ஆரியம், மாய்கையாலும் சூழ்ச்சியாலுமே திராவிட மக்களை வெல்ல வந்திருக்கிறது! ஆரிய மாய்கையில் வீழ்ந்தவர்களில், இன்றுவரை மீளமுடியாதபடி ஆழ்ந்து கிடக்கிறான் நம் தலைவன் திராவிட பூபதி!!

அத்திராவிட பூபதியை நாம் மீட்க முயன்றால், ஆரியம் அவனை நம்மிடம் உயிரோடு ஒப்புவிக்காது சூழ்ச்சி செய்யும்! அச் சூழ்ச்சியோ அவனையும் நம் மக்கள் மன்றத்தில் உள்ள குற்றவாளிக் கற்கூண்டிற்குக் கொண்டு வரக்கூடும்!! அப்போது, பூங்கோதையைப் போல் அவன் காப்பாற்றப்படாவிட்டால், பிணமாகத்தானே நம்மிடம் கொடுக்கப்படுவான்? ஒரு வேளை காப்பாற்றப்பட்டாலும், மக்கள் மன்றத்திலே இப்போதேற்பட்டிருக்கும் பிளவு இன்னும் அதிகமாகி ஊறிரண்டுபட்டால், ஆரியக் கூத்தாடிக்குத்தானே கொண்டாட்டம்?

மல்லி:—ஆம். இவற்றை எல்லாம் ஆராயாமல்த்தான் பேசிவிட்டோம்.

மல்லன்:—இதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

மாபாடி:—நன்றாகச் சிந்தனை செய்ய வேண்டும்! நம் நாட்டு மக்களை எதிர்நோக்கி வந்துகொண்டிருக்கும் ஆரிய மாய்கையை அகற்றவும், சூழ்ச்சியைத் தகர்க்கவும்

தக்கது செய்யவேண்டும்!! இதற்காகவே நானும் ஏடு எழுதுகிறேன்—இதன் பெயர்தான் 'திராவிட மாபாடியம்!!'

[எனக் கூறிக்கொண்டே ஆழ்ந்த சிந்தனையோடு அகல்கிறார்.]

மல்லன
மல்லி } : [மாபாடியைப்பின்தொடர்ந்து செல்கின்றனர்.]

---

## காட்சி 21. [திணைப்பரண்குன்றம்]

உறுப்பினர்:—அக்னீத்ரன், ஆரியச் சிறுபடை, ஆலோலர் ப்ரஹஸ்பதி, உபஹாதா, ஹோதா.

நிகழ்ச்சி:— [திராவிடத்தின் உணவுப் பொருட் களஞ்சியமாகிய திணைப்பரண்குன்றத்திலே தீயிட்டுக் கொளுத்திஆரியத்தின் மகத்தான பெரியதோர் அழிவு வேலையை ஆரம்பித்து வைக்கிறான் அக்னீத்ரன்.]

ஆலோலர்:—சோ...சோ...... [எனக் கூவி திணைக்கதிர்களையும், தானியக்களஞ்சியங்களையும் காக்கின்றனர்.]

அக்கினி :— [ஆரியச் சிறுபடையை அழைத்துக்கொண்டு பூங்கோதையையும், பூமகளையும் காட்டில் பல இடங்களிலும் தேடியலைந்துவிட்டுக் கடைசியாய்த் திணைப்பரண்குன்றில் தேடிப் பார்க்கவருகிறான்.]

ப்ரஹஸ்
உபஹோதா } :—
ஹோதா

[ஏற்கனவே அங்கு வந்து நன்றாகத் தேடிப் பார்த்துவிட்டு அக்னீத்ரனைச் சந்திக்கின்றனர்.]

அக்னீ:—குருதேவ்! க்ஷாக்ஷாத் குருதேவுங்கூட.........

ப்ரஹஸ்:—ஹூம்! நான் என்ன.........? ஊர்வசிக்குப் பிராணத் தியாகம் ஸம்பவியாதிருந்தால், அவள் கர்ப்பாஸயத்தில் வஸித்த ஸிஸுவுங்கூட இங்கு பிரஸன்னமாகிப் ப்ராஹ்மணத் துவேஸிகளைத் துவம்ஸம் ஸெய்யுமே!

அக்னீத்:—குருதேவ்! அத்துஷ்டைகளை..........

ப்ரஹஸ்:—ஸ்பஷ்டமாய்க் கண்டுபிடிப்பது கஷ்டமே! அதை அப்பால் யோஷிக்கலாம்!! இப்போது இந்தப் பர்வத நவதான்யக் க்திர்கள் மீதும் களஞ்சியங்கள் மீதும் அக்னியாஸ்திரங்களைப் பிரயோஹித்துத் திராவிட தஸ்யூக்களின் போஜன வஸ்த்துக்களை நாஷமாக்கவேண்டும்!!!

அக்னீ:—அக்னியாஸ்திரமா...............?

ப்ரஹஸ்:—ஆமாம். எதிரிகளைப் பிராணஸேதம் ஸெய்யும் ஸாதாரண அஸ்திரமுனையில், அக்னிப்பந்தம் ஸொருகிவிட்டால், அதுதான் அக்னியாஸ்திரம்!

அக்னீ:—ஓ! ஸித்தம் குருதேவ்!!

[எனப் பணிந்துவிட்டு ஆரியச் சிறுபடையை நோக்கி.]

ஓ...ஓ.........ம்...........!

[எனக் கூவி அழைத்துக் கொண்டு போய் அம்புக்களில் தீப்பந்தங்களைச் சொருக ஏற்பாடு செய்கிறான்.]

உபஹாதா:—குருதேவ்! இந்தப் பர்வத நவதான்யக் கதிர்களையும், களஞ்சியங்களையும் நாம் பஸ்பீஹரித்து விட்டால்.........

ஹோதா:—திராவிடபூபதிக்கு நம்மீது உக்கிராவேஷம் உண்டாகி......

உபஹாதா }
ஹோதா } :—நம்மையே பஸ்பீஹரித்து விடமாட்டானோ......?

ப்ரஹஸ்:—ஷிஷ்யோய்! அதைர்யம் அனுவஷ்யம்!! ஷாமர்த்தியமே ஷமத்து!!!

திராவிடபூபதியை ஆர்ய ராஷ்ட்ரபதியாக ஆக்கியது......?

உபஹாதா }
ஹோதா } :—க்ஷாக்ஷாத் குருதேவின் க்ஷ-க்ஷமமே தான்!

ப்ரஹஸ்:—அதே க்ஷ-க்ஷமமே, திராவிடபூபதியின் உக்கிராவேஷத்தைப் பிராஹ்மணத் துவேஷிகளாகிய அந்த ராக்ஷஷிகள் மீது பிரயோஹிக்க க்ஷ-த்திரமாகும்!

உபஹாதா }
ஹோதா } :—ஜேய்...! ஜெய விஜயீ......! பவா......!!

ப்ரஹஸ்:—ததாஸ்து...!!!!—ஹேய், ஷிஷ்யோய்!

உபஹாதா }
ஹோதா } :—குருதேவ்!

ப்ரஹஸ்:—அக்னியாஸ்திரங்கள் எல்லாம் க்ஷிருஷ்டிக்கப் பட்டு விட்டனவா......?

அக்னீ:—ஆஹா! குருதேவின் ●ஆபீசார பிரயோஹ மந்த்ர உக்ஷாடன நிமித்தம் ஆயத்தமே!!......

[எனக் கூறிக்கொண்டு அக்னியாஸ்திரம் பூட்டிய ஆரிய வில் படையோடு வருகிறுன்.]

● ஆபீசாரம்=மந்திரத்தாற் கொல்லல்.

ப்ரஹஸ்:—மெக்ஷினேன், அக்னீத்ரா..........!

*"ஸுமித்ரிய ந ஆப ஓஷதய: ஸந்து துர்மித்ரியா ஸ்தஸ்மை, ஸந்து யோஸ்மான் த்வேஷ்டியம் சவயம்த்விஷ்ம:"

ஆ. சிறுபடை
அக்னீத்தரன் } ஓ...ஓ...ம்! அக்னியாஸ்திர பிரயோஹம்!!

ஓ...ஓ...ம்! அக்னியாஸ்திர பிரயோஹம்!!

ஓ...ஓ...ம்! அக்னியாஸ்திர பிரயோஹம்!!

[என முழங்கியவண்ணம் திணைப் பரண்குன்றமெங்கும் தீயிட்டுக் கொளுத்துகின்றனர்.]

ஆலோலர்:—ஆ...ய்...ஐயோ.... ஐயய்யோ....அம்மா......
அம்மம்மா....ஐயய்யோ.... ஐயோ...ஆய்......
அப்பா...ஆ...ய்......ஐ...யோ...அப்பா......

[என அலறித் துடித்துப் பலர் நெருப்புக்கு இரையாகுகின்றனர்.]

ப்ரஹஸ்:— [பயங்கரமான பரிகாச வெறிச் சிரிப்புச் சிரித்துவிட்டுத் திடீரெனச் சிரிப்பதை நிறுத்தி]

ஹேய்...! ஷிஷ்யோய்......!!

உபஹோதா
ஹோதா } :—குருதேவ்......!!!

---

*தண்ணீர், தானிய வகைகள், பிராணவாயு முதலிய உயிர் வாழ்க்கைக்குரிய பொருட்கள் யாவும் எங்களுக்கு நன்மையாகவும், எங்களால் வெறுக்கப்படுகிறவர்களுக்குத் தீமையாகவும் ஆகுக! வேதஸ்மிருதிக்கு இணங்காதவர்களுக்கு இவ்வுலகம் விஷமாகக் கடவது!!

ப்ரஹஸ்:—க்ஷீக்கிரமே திராவிடபூபதியின் சந்நதியில் பிரஸன்னமாகி: 'மஹிஷியும், இளவரஷியும் பிரம்மாண்டமான அக்னிப் பிரயோஹம் ஸெய்து பர்வத நவதான்யக் கதிர்களேயும், களஞ்சியங்களேயும் ஷுட்டுப் பொஷுக்கிப் பஸ்பீஹரித்துவிட்டுத் தப்பி ஓடுகின்றனர்' என்று ஸவிஸ்தாரம் ஸெய் போ.

உபஹாதா, ஹோதா:—ஆக்ஞை குருதேவ்.

[எனப் பணிந்துவிட்டு ஓடுகின்றனர்.]

இடைவேளை

## காட்சி 22. [திணைப்பரண்குன்றம்]

உறுப்பினர்:—அக்னீத்ரான், ப்ரஹஸ்பதி, திராவிட பூபதி ஹோதா, உபஹாதா, திலோர்த்தமை.

நிகழ்ச்சி:— [திணைப்பரண் குன்றத்தில் அமைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட் களஞ்சியங்களெல்லாம் தீக்கிரையாக்கப்பட்ட செய்தியறிந்து சீறி எழுந்த திராவிடபூபதியை ஆரிய மாய்கை தொடர்ந்து அடிமை கொள்கிறது.]

அக்னீத், ப்ரஹஸ்:— [திணைப்பரண் குன்றைச் சுடுகாடாக்கிவிட்டு வெட்டியான்கள் போல் நிற்கின்றனர்.]

பூபதி:— [நெருப்பின் மேல்பட்ட புழுப் போல் துடித்தோடிவந்து பார்த்து விட்டுச் சிங்க ஏறுபோல் சீறி எழுந்து.]

ஏ, கோழைத் தளபதியே! ஆண்டு முழுவதற்கும் உதவக்கூடிய, எனது திராவிடப் பொதுமக்களின்

உணவுக் களஞ்சியங்களை இப்படித் தீக்கிரையாக்கி விட்டு ஓடிய நீலிகளைப் பிடித்து நெருப்பிட்டுக் கொளுத்தாத நீயும் ஓர் ஆண் மகனா?—த்தூ!

வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த வீணா ராஜ குருவே! உன் வேதாந்த, சித்தாந்த வித்தைகளெல்லாம் செத்துவிட்டனவா?—ச்சீ!!

ஏமாந்தவனாகிவிட்டேனே நான்! எப்படி விழிப்பேன் என் மக்கள் முகங்களில்? என்ன சொல்வேன் அவர்கள் உழைப்பில் விளைந்த பொதுவுடைமைத் தானியமணிகளைப் பகிர்ந்து கொடு என்று கேட்கும் போது?

ப்ரஹஸ்:—ஹேய், பூதேவேந்த்ரா! அத்துஷ்டைகள் க்ஷாக்ஷாத் உனது மஹிஷியும், இளவரஷியுமாய் இல்லாது மாத்திரம் இருந்தால், பலாட்டியனான நமது க்ஷிரேஷ்ட க்ஷேனாதிபதி அக்னீத்ரன்......

அக்னீ:—ஏஹ அஸ்திரத்தால் துவம்ஸம் ஸெய்திருப்பேன்!!!

பூபதி:—உம். மனைவியாய் இருந்தாலென்ன? மகளா இருந்தாலென்ன? மக்களின் உயிர் நாடியாகிய உணவுப் பொருட்களைத் தீயிட்டுக் கொளுத்திய கொடியர் யாரா இருந்தாலென்ன? அவர்கள் உடல்களைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்திருக்க வேண்டாமா?

ப்ரஹஸ்:—ஸாந்தி! பூதேவேந்த்ரா ஸாந்தி!!

பூபதி:— [ப்ரஹஸ்பதியைக் கொன்று தின்று விடுபவன்போல் சினந்து நோக்குகிறான்.]

திலோர்த்:— [தக்க சமயத்தில், ப்ரஹஸ்பதியின் சீடர்களால் கூட்டிக் கொண்டுவரப்பட்டுப் பூபதியின் முன் ஸோமபானத்தோடு தோன்றி.]

இதோ, தாஹ ஸாந்தி—மோஹ ஸாந்தி!!!

ப்ரஹஸ்:—✽"ப்ராஹ்மண நஹிம் ஸிதவ்ய."

பூபதி:— [திலோர்த்தமையின் இனிய குரல் கேட்டுச் சினந் தணிந்து, அவள் ஈந்த ஸோமபானத்தைப் பருகி விட்டு]

இராஜகுரு! ஓது...! மந்திரம் ஓது!! பொதுமக்களின் உணவுப் பொருட்களை தீயிட்டுக் கொளுத்தியவர் உடல்கள் தாமே தீப்பற்றி எரியும்படி மந்திரம் ஓது!!!

ப்ரஹஸ்:—அதுமாத்திரம் போதுமோ? பூதேவேந்த்ரா!

பூபதி:—போதாதே இராஜகுரு! போதாதே......!!

திலோர்த்:— [மேலும் ஸோமபானம் ஊற்றிக் கொடுத்துப் பூபதியின் மதியை மயக்குகிருள்.]

ப்ரஹஸ்:—ஓமகுண்டம் க்ஷிருஷ்டித்து மஹோன்னத நவ தான்ய யாஹம் செய்ய வேண்டாமோ?

பூபதி:—வேண்டியதுதான்! ஆனல், ராஜகுருவின் ஓமகுண்டத்தில் போட்டு எரிப்பதற்குக்கூட ஒரு குருணித் தானியமணியும் இல்லாமல் கொளுத்தப்பட்டிருக்கிறதே......?

ப்ரஹஸ்:—நவதான்யம் இல்லாவிட்டாலென்ன? புஷ்டியான மேஷ ரிஷபம்......

பூபதி:—என்னது?

ப்ரஹஸ்:—ஆடுமாடுகள்......

---

✽பிராமணன் எத்தகைய குற்றம் புரிந்தாலும் அவனது உடலை வருத்தலாகாது.

பூபதி:—ஓ! நன்ருகக் கொழுத்த ஆடுமாடுகள் இராஜகுரு விடங்கூட ஏராளமாக இருக்கின்றன! அவைகளுக்கு இன்னும் பஞ்சம் வரவில்லை!! எத்தனை வேண்டுமாளு லுஞ் சரி! மந்தை மந்தையாகக் கொண்டுவந்து, துண் டந் துண்டமாக வெட்டி, ஓம குண்டங் குண்டமாய் இறைச்சிகளைப் போட்டு, இரத்தத்தைக் கொட்டி எரித்து நவதான்ய யாஹத்தைச் சிறப்பாகச் செய்து விடுங்கள்!!!

ப்ரஹஸ்:—ததாஸ்து.

பூபதி:—ஊ...ம்...! ராஜகுரு! நீங்கள் நவதான்ய யாஹத் திற்கு வேண்டியவற்றைச் செய்துகொண் டிருங்கள்! நானும், திலோர்த்தமையும் போய்...ஊ...ம்...! அது என்ன யாஹம்......?

ப்ரஹஸ்:—புத்திர காமேஷ்டி......

பூபதி:—ஊம் ஊம்...அந்த யாஹத்தைச் செய்துகொண் டிருக்கிருேம்......

**[எனத் திலோர்த்தமையைக் கட்டி யணைந்துகொண்டு செல்கிருன்.]**

ப்ரஹஸ்:—ததாஸ்து.

உபஹாதா, ஹோதா } குருதேவ்! நம் மேஷ ரிஷப ஆஸ்திக்குமா நாஸ்தி?

ப்ரஹஸ்:—க்ஷேய்! அது திராவிடபூதியின் ஸொப்பனம்!!— உம் ஹேய், க்ஷிரேஷ்ட க்ஷேனதிபதி!

அக்னீ:—ஆக்ஞை குருதேவ்.

ப்ரஹஸ்:—அக்னியாஸ்திரச் க்ஷேனேயோடு க்ஷீக்கிரம் க்ஷெல்!! திராவிட தஸ்யூக்களின் புஷ்டியான மேஷ ரிஷபம் ஸர்வமும் சூரியோதயத்திற்குள் நமது மஹோன்னத நவதான்ய யாஹ ஸ்தலத்தில் ஸமர்ப் பிக்கப்பட வேண்டும்!!!

அக்னி:—ஸித்தம் குருதேவ்.

[எனப் பணிந்து செல்கிருன்.]

உபஹாதா }
ஹோதா } :—ஜேய்...! ஜெய விஜயீ......!! பவா!!!

ப்ரஹஸ்:—ததாஸ்து!!!!

——[x]——

## காட்சி 23. [காட்டுப்பாதை]

உறுப்பினர்:—தீப்புண்பட்ட ஆலோலர், மல்லி, மங்கை மேய்ப்பர், மல்லன் உபஹாதா, ஹோதா.

நிகழ்ச்சி:— [ஆரியரின் அட்டூழியங்களை எல்லாம் மல்லனும், மல்லியும் கேள்விப்படுகின்றனர்.]

மல்லி:— [சிறு புலிக்குட்டிகளைக் கரங்களில் வைத்து விளையாடிக் கொண்டு வருகிருள்.]

ஆலோலர்:— ஐயய்யோ...ஐயய்யோ......ஆ...ய்.....பற்றி எரியுதே, காந்துதே...பூ...ஊ...பூ...

மல்லி:— அட நீங்களா......! ஏன் திணைப்பரண்குன்றை விட்டு வந்து விட்டீர்கள்......?

ஆலோலர் (1) :— மல்லி! அங்கு என்ன இருக்கிறது.........? ஐயய்யோ......எரியுதே...பூ...பூ...

மல்லி:— அடடா! இதென்ன! உடம்பெல்லாம் ஒரேயடியாய் வெந்து போய் இருக்கிறதே?

ஆலோலர் (2) :— எல்லாவற்றையுந்தாம் தீயை வைத்துக்கொளுத்திவிட்டார்களே.....ஐயோ.....காந்துதே......பூ...பூ...

மல்லி:— யார்...?

ஆலோலர் (3) :— யாரா? உம். ஊர்ப்பேரில்லாத அந்த ஆரிய நாடோடிக் கும்பலைத் தவிர, வேறுயாருக்

கேனும் இப்படிச் செய்ய மனம் வருமா...?ஆ...ய்... பூ...பூ...பூ...

மல்லி:— என்ன...?

மேய்ப்பர் (1) :— ஐயய்யோ நம் ஆட்டு மந்தைகளை எல்லாம் ஆரியத் தீவட்டித் தடியர்கள் வந்து ஓட்டிக் கொண்டு போகின்றனரே!

மேய்ப்பர் (2) :— மாட்டு மந்தைகளையுந்தாம் விட்டு வைக்கவில்லையே!

மேய்ப்பர் (3) :—உம். பசுக்களில் பால்கூடக் கறக்கவில்லை? அதற்குள் அவைகளையும் கட்டவிழ்த்து ஓட்டிக் கொண்டு போய்விட்டனரே!!

ஆலோலர்:— ஆடு மாடுகளுக்கும் அழிவு வந்து விட்டதா?

மேய்ப்பர் (2) :— 'ஏனடா?' என்று கேட்டால், எல்லாம் 'தலைவன் கட்டளை' என்கிறான்! ஒன்றுமே புரியவில்லையே....

மல்லி:— புரியவில்லையா? புரிவதுதான் எப்போ? எப்படி?

உபஹோதா }
ஹோதா } :— [யாக குண்டர்களிடமிருந்து தப்பியோடிய ஒரு ஆட்டுக் கடாயைத் தேடிக் கண்டுபிடித்து ஒருவன் முன்னாலிழுக்க, மற்றொருவன் பின்னாலிருந்து தள்ளிக் கொண்டு வருகின்றான்.]

மல்லன்:— இப்படி உதைக்குமேல் உதை கொடுத்தால், எல்லாந் தாமாய் புரிந்துவிடும்......[என்க் கூறிக் கொண்டே வந்து அக்கடாயைப் பின்னாலிருந்து தள்ளுபவனின் பிட்டத்தில் உதைக்கின்றான்]

உபஹாதா }
ஹோதா } :—

[தங்களைத் தாக்க வந்த மல்லன் தோளில் கிடக்கும் வேட்டையாடப்பட்ட வேங்கையைக் கண்டு பயந்து அலறிக்கொண்டு ஓடுகின்றனர்.]

மல்லி:—

[உபஹாதாவையும் ஹோதாவையும் எதிர்த்து நிற்கிருள்.]

உபஹாதா }
ஹோதா } :—

[மல்லியின் கரங்களில் உள்ள புலிக்குட்டிகளைக் கண்டு மீண்டும் பயந்து அலறிக்கொண்டு திரும்பி ஓடிவருகின்றனர். பிறகு இரு பக்கங்களிலும் ஓட வழியின்றித் திண்டாடித்தவித்து நிற்கின்றனர்.]

மல்லன்:—ஊம். உண்மையைச் சொல்லிவிடுங்கள்! இந்த ஆட்டுக்கடாயை எங்கே திருடுனீர்கள்....?

உபஹாதா }
ஹோதா } : அபஹரித்தோமா......? அபக்ஷக்ஷாரம்! அபக்ஷக்ஷாரம்!! அபக்ஷக்ஷாரம்!!!

மல்லன்:— வேறெப்படிக் கிடைத்தது இந்தக் கடா?

உபஹாதர }
ஹோதா } :— பூதேவாதி தேவப் பிராஹ்மண ஸஹாயப் பூதேவேந்த்ர திராவிடப் பூபதியின்......

உபஹாதா :—அநுக்ரஹ மஹோன்னத நவதான்ய யாஹஸ்தலத்தில்

ஹோதா:— இம்மேஷம் ஸ்வயமே பிரஷ்டமாகிக் கொண்டது......

மல்லன்:—ஊங்நும்...! யாக குண்டத்திலிருந்து தப்பி ஓடிவந்த கடாயைத் தேடிப் பிடித்துக் கொண்டு போகிறீர்களோ......?

ஹோதா }
உமஹாதா } :—ததாஸ்து

மல்லன்:— த்தூக்! கயவர்கள்!! யாக குண்டத்தில் வெட்டிப் போடுவதற்குச் சிந்துப் பள்ளத்தாக்கில் மேய்ந்து கொண்டிருக்கும் உங்கள் ஆடு மாடுகளை ஓட்டிக் கொண்டு வந்திருக்கக் கூடாதோ...?

உபஹாதா }
ஹோதா } :— அபக்ஷ......

மல்லன்:— ச்சீ......

[எனப் பாய்ந்து இருவர் கன்னங் களிலும் 'பளீர் பளீ'ரென அறைந்து துரத்துகிறுன்.]

உபஹாதா }
ஹோதா } :— ஆய்...ஐயோ....குருதேவ்...ராஜகுரு...... ஐயோ ஆ......ய்.........

[எனக் கதறி ஓடுகின்றனர்.]

மல்லி:— மல்லா! 'எய்பவனிருக்க, அம்பைமட்டும் ஒடித் தெறிந்துவிட்டால், போதுமா?

மற்றவர்:— அதெப்படிப் போதும்?

மல்லி:— சரி நீங்களெல்லோரும் இப்போதே புறப்பட்டுப் போய் நம் தலைவனைச் சந்தித்து அவன் சிந்தையைத் தெரிந்துகொள்ளுங்கள்! நானும், மல்லனும் சென்று நமது புலவர் பெருமான் மாபாடியைக் கண்டு பேசி விட்டு உங்களிடம் வருகிறோம்.

மல்லன்:— ஆம். இனித் திராவிட—ராரியர் போர்முரசு கொட்ட வேண்டியதுதான்! முழங்குக வெற்றி முழக்கம்!! ஆரியம்...?

மற்றவர்:— ஒழிக!

மல்லி:— திராவிடம்...?

மற்றவர்:— வாழ்க! ஆரியம்...ஒழிக. திராவிடம்...வாழ்க! ஆரியம்...ஒழிக! திராவிடம்...வாழ்க!! ஆரியம்... ஒழிக!!! திராவிடம் வாழ்க!!!

[என வெற்றிமுழக்கம் முழங்கிய வண்ணமே செல்கின்றனர்.]

## காட்சி 24. [குகையும்-முகடும்]

உறுப்பினர்:—பூங்கோதை, பூங்குன்றன், மாபாடி, மல்லன், மல்லி.

நிகழ்ச்சி:— [இளங் காதலர்கள் ஒருவரை யொருவர் நினைந்துருகுகின்றனர். மல்லனும், மல்லியும் ஓடி வந்து மாபாடியை அழைத்துச் செல்கின்றனர்.]

கோதை:— [மலைமுகட்டிலிருந்து கொட்டும் அருவியை உடைய குகைக்குள் இருந்துகொண்டு பூங்குன்றனை நினைந்து உருகுகிறாள்.]

குன்றன்:— [நீரருவியை உடைய மலைமுகட்டில் நின்றவண்ணம் பூங்கோதையை நினைந்துருகுகிறான்.]

[தொகையரு]

கோதை :— வீழ்ச்சியுறுந் திராவிடத்தை பார்க்கவொணுது
விரைந்தோடி செங்கதிரோன் மறைகின்றானோ?
சூழ்ச்சியினால் வாழுகின்ற ஆரியத்தை
சாய்த்திடுக இவ்வாறென் றறைகின்றானோ

[பாட்டு]

குன்றன் :— வீழ்ந்ததே இன்பத்திராவிடம் வீழ்ந்ததே
வானுயர் மாமரம் வீழ்வதுபோலே
வஞ்சக ஆரியர் சூழ்ச்சியினாலே (வீழ்)

கோதை :— வீர மரபினர் வாழ்ந்த திராவிடம்
வீணரின் பாசறையானதே
ஆரிய மெனும் அறியாமைச் சேற்றிலே
அறிவும் திறனும் ஆழ்ந்ததே

குன்றன் :— வீழ்ந்ததே இன்பத் திராவிடம் வீழ்ந்ததே......

கோதை :— ஆடவர் பெண்டிர் சரிநிகர் சமமாய்
அன்புடன் இன்புறும் நாட்டிலே
கேடுறும் ஆரியம் வந்ததினாலே
பீடுறுங் கொள்கை மாய்ந்ததே (வீழ்)

குன்றன் :— ஓங்கிய மாமலை உள்ளம் உருகியே
ஒழுகுதல் போல்வரும் தண்புனலே
பூங்கோதை தனை இழந்து நெஞ்சம்
புழுவென அந்தோ இடர் படுதே (வீழ்)

கோதை :— என் மனங் கவர்ந்த பூங்குன்றனின்
இணை பிரிந்ததினால் தென்றலும்
வெண்ணிலவும் தழலாக வாட்டுதே
வேதனை எங்கும் சூழ்ந்ததே (வீழ்ந்ததே)

மாபாடி:— [மலைமுகட்டின் மீது அமைக்கப் பட்டுள்ள பரண் மீது அமர்ந்து ஏடெழுதிக் கொண்டேயிருந்தவர் திடீரென்று எழுந்து தன் மனத் தோடு தானே கிளத்துகிறார்.]

உம். ஏடெழுதலென்றால் என்ன, எளிதா? நாடெல் லாம் சுற்றிப் பயிலவேண்டாமா? வீடெல்லாம் நுழைந்து நுழைந்து குடும்பம் குடும்பமாய்ப் பழகி ஆராய்ந்து அறிதல் வேண்டாமா? அவையெல்லாம் விட்டு இப்படி மலைமுகட்டிற்கு வந்து பரண் மீது ஏறி உட்கார்ந்து கொண்டால், எதைப்பற்றி எழுதுவது?

விண்ணையும், விண் மீன்களையும், குளிர் நிலவையுங் குறித்து விரிவாக வருணிக்கவா நான் இங்கு வந் திருக்கிறேன்? அல்லது, ஆரியக் கயவர் கதைத் துள்ள கற்பனைக் கதைகளுக்கு உரை எழுத வந்திருக் கிறேனா?

நான் மக்கள் புலவனல்லவா! மக்களுக்காகத் தானே இத்திராவிட மாபாடியத்தை எழுதுகிறேன்!! இதை எழுதி முடிக்க வேண்டுமானால், நான் மக்க ளோடல்லவா வாழ வேண்டும்!!!

ஆரிய மாய்கையில் சிக்கிய தலைவன், தானே திருந்தட்டும் என்று சற்று விலகி இருந்ததின் பலன்: ஐம்பெருங்குழுவினர் காடேகவும், திராவிடம், பரதேசிப் பார்ப்பனரின் வேட்டைக் காடாகவும் நேர்ந்து விட்டதே!

இனிமேலும், இவற்றை எல்லாம் பார்த்துச் சகித்துக் கொண்டு, பொறுமையாக இங்கிருந்து ஏடெழுதிக் கொண்டிருக்க என்றால் எப்படி முடியும்?

[எனத் தன் கையிலிருந்த ஏட்டுச் சுவடிகளைப் பரண் மீது எறிந்துவிட்டுப் புறப்படுகிறார்.]

மல்லன்
மல்லி } :—புலவர் பெருமானே! அந்த ஆரியக் கயவர்கள்......

[எனக் கூறிக்கொண்டே ஓடி வருகின்றனர்.]

மாபாடி:—எல்லாம் எனக்குந் தெரியும்! புறப்படுங்கள் போகலாம்!!

[எனக் கூறிவிட்டுக் கிளம்புகிறார்.]

---

## காட்சி 25. [சாலை]

உறுப்பினர்:—ஆலோலர், மங்கைமேய்ப்பர், மாபாடி, மல்லன், மல்லி.

நிகழ்ச்சி:— [திராவிடபூபதியிடம் முறையிடச் சென்று முழு ஏமாற்றத்தோடு திரும்பியவர் கூறியதைக் கேட்டுக் கடுஞ் சினங் கொள்கிறார் புலவர் மாபாடி.]

ஆலோலர்
மேய்பர் } [மிகுந்த ஏமாற்றகரமான துக்கத்தோடு வருகின்றனர்.]

மல்லன்:—உங்களுக்கு என்ன நிகழ்ந்தது? தலைவனைக் கண்டு முறையிட்டீர்களா?

ஆலோலர் (1):—எங்களுக்கு நிகழ்ந்தது அவமானமே! எங்களால் நம் தலைவனை ஏறிட்டுப் பார்க்கக்கூட முடியவில்லை!!

மல்லி:—ஏன்?

மேய்ப்பர் (1):— ஆரியர்க்குக் குற்றேவல் புரியும் சிற்ருளைப் போல் யாகக் குண்டத்தைக் காவல் காத்துக் கொண்டு நிற்கும் ஒருவனைப் பார்த்து, அவனே தான் நம் தலைவன் என்று எங்களுக்குக் காட்டப்பட்டதும், நாங்கள் வெட்கித் தலைகுனிந்த வண்ணமே திரும்பி வந்துவிட்டோம்.

மாபாடி:—உம். உங்களில் ஒருவனேனும் தன் குமுறும் உள்ளக் கூக்குரலை எழுப்பி அந்த ஆரிய அடிமையின் அறிவு உறக்கத்தைக் கலைக்க முயன்றிருக்கக் கூடாதா?

ஆலோலர் (2):—புலவர் பெருமானே! நம் தலைவனின் அறிவு உறங்கிக் கிடக்கவில்லை. மிகுந்த விழிப்புணர்ச்சியோடுதான் மாற்ருனுக்கு மண்டியிட்டுக் கிடக்கிறது.

மேய்ப்பர் (2):— நமது தலைவனின் தலைமையின் கீழ் நம்முடைய பதினுயிரக் கணக்கான ஆடுமாடுகளின் தலைகள் வெட்டுண்டு, அவைகளின் உடல்கள் யாகக் குண்டத்திலே கிடந்து வெந்துகொண்டிருக்கக் கண்டோம்!

ஆலோலர் (3):—ஏற்கனவே, ஆரியத் தீவட்டித் தடியர்கள் நம் தானியக் களஞ்சியங்களை எல்லாம் தீயிட்டுக் கொளுத்திவிட்டனர்!

மேய்ப்பர் (3):— இனி, நம் நாட்டு மக்கள். உண்ணும் உணவின்றிப் பட்டினி கிடந்து மடிய வேண்டியது தானு?

மாபாடி:--நினைக்கும்போதே நெஞ்சு வெடிக்கும் கேள்வியை வெகு நிதானமாய்க் கேட்கின்றீர்கள், நீங்கள் இது வரையில் பட்டினியின் வேதனையை ஒரு சிறிதும் அநுபவித்து அறியாத காரணத்தால்!

சாக்காடு சகிக்கக்கூடியதே! அதைத் தவிர்க்க முடியாததால்! ஆனால், வறுமை நோக்காடு வந்தால், சகிக்கக்கூடாது—சகிக்கவும் முடியாது!! ஏனெனில், போக்கிடம் அற்ற ஆரியப் பொறுக்கித் தின்னிகள் புரியும் நயவஞ்சக யாகக் குண்டங்களாலேயே நாட்டில் உணவுப் பொருட்களுக்குப் பஞ்சம் உண்டாகும், பட்டினிச் சாவும் உண்டாகும்!!!

எனவே, அத்தகைய யாகங்களையும், யாக குண்டர்களையும் எதிர்த்து அழித்துவிட்டால், உணவுப் பொருட்களைத் தீயிட்டுக் கொளுத்தும் ஊதாரித்தனமும் ஒழியும், வறுமை நோக்காடும் நம்மை அண்டாது.

ஆலோலர்:—ஆமாம் ஆமாம். அதுதான் சிறந்த வழி.

மாபாடி:—அப்படியானால், கிளர்த்தெழுந்து கிளம்புங்கள்! நம் மக்களின் வலிமையைத் திரட்டி வல்லமையைக் காட்டி ஆரியப் பொறுக்கித் தின்னிகளை நம் நாட்டை விட்டே விரட்டி விடுவோம்!!

[என முழங்கி முன்னேறுகிறார்.]

மல்லன், மல்லி:—ஆரியம்......?

மற்றவர்கள்:—ஒழிக......!

மல்லன், மல்லி:—திராவிடம்......?

மற்றவர்கள்:—வாழ்க......!

மல்லன், மல்லி:—ஆரியம்......?

மற்றவர்கள்:—ஒழிக......!!

மல்லன், மல்லி:—திராவிடம்......?

மற்றவர்கள்:—வாழ்க......!!

[என முழங்கிக்கொண்டே செல்கின்றனர்.]

——[x]——

## காட்சி 26. [யாககுண்டம்]

உறுப்பினர்:—திராவிடபூபதி, ப்ரஹஸ்பதி, உபஹாதா, ஹோதா. அக்னீத்ரன், மாபாடி, மல்லி, திலோர்த்தமை.

நிகழ்ச்சி:— [ஆரிய எதிர்ப்பும் போர் முரசு கொட்டிய புலவர் மாபாடி, இராச த்துரோகக் குற்றம் சுமத்தப் பட்டுத் திராவிடபூபதி முன் கொண்டுவரப்படுகிறார். ப்ரஹஸ் பதி புலவர்க்கும் கண்ணீ வைத்து விடுகிறான்.]

பூபதி:— [நாயைப்போல், எலும்புத் துண்டு ஒன்றில் ஒட்டியுள்ள இறைச் சியைச் சுவைத்துக்கொண்டு. யாகக் குண்டத்தைக் காவல் புரிந்து நிற்கிறான்.]

ப்ரஹஸ்:—○"யஜ்ஞார்த்தம் பகவ ஸ்ருஷ்ட; ஸ்வய மேவ ஸ்வ யம்புவா; யஜ்ஞஸ்ய பூத்யை ஸர்வஸ்ய தஸ்மாத் யஜ்ஞே வதோவத"

❋"ஹ்ருதயம், ஜிஹ்வா, வக்ஷா, யக்ரித் வ்ருக்வயள ஸ்வயம்......

---

○உயிர்களுடைய நன்மைக்கு ஏதுவாகிய யாகத்தின் பொருட்டு பிரம்மன் மிருகங்களை படைத்தான். அதனால், யாகத்தில் செய்யும் கொலை பாவமாகாது.

❋"ஈரல், நாக்கு, மார்பு, 'யக்ருத்' எனும் இரண்டு பக்கங்களிலும் உருண்டை வடிவாயிருக்கிற சதை, இடதுகை, இடது விலாப் பக்கம், வலது துடையின் மேற்பக்கம், புட்டத்தின் மூன்றி லொரு பங்கு இவ்வளவும் தேவர்களுக்காகவும்; வலது கை இடது துடையின் மேற்புறம், புட்டத்தின் மூன்றிலொரு பங்கு இவைகள் ஸ்விஷ்டக்ருத் ஹோமத்தின் பொருட்டும், யக்ருத் தைப் போன்றதும் திலகம் என்ற பெயருள்ளதுமான இறைச்சி, நுரையீரல், சிறு குடல், மடிகொழுப்பு, வால் இவைகளும் எடுக்க வேண்டும்."

உபஹாதா & ஹோதா:—ஸ்வயம்......

ப்ரஹஸ்:—தோருபே பார்சுவே ஸ்ரோணிர் குதத்ரி தீய மிதி தைவ்தானி;

உபஹாதா & ஹோதா:—த்தவதானி......

ப்ரஹஸ்:—தக்ஷிணம் தோஸ் ஸவ்யா ஸ்ரோணிர் குதத்ரி தீயமிதி—ஸௌவிஷ்ட க்ருதானி.

உபஹாதா & ஹோதா:—க்ருதானி......

ப்ரஹஸ்:—க்லோமானம் ப்லீஹாததம் தனீஷ்டு மத்யூத் னீம் புரீனம்......

உபஹாதா & ஹோதா:—புரீனம்......

ப்ரஹஸ்:—மேதோ ஜாகனீ மித்யுத்தரதி:

உபஹாதா & ஹோதா:—யுத்தரதி.

[என ஓதிக்கொண்டே இறைச்சித் துண்டங்களைப் பிரித்தெடுத்து எரியும் யாகக் குண்டத்துள் போடுகின்றனர்.]

மாபாடி:—

[கரங்களை முதுகிற்குப் பின்னல் மடக்கிக் கட்டப்பட்டுத் தளபதி அக்னீத்ரனல், திராவிடபூபதியின் முன் கொண்டுவந்து அவன் காலடியில் வீழ்த்தப்படுகிறுன்.]

அக்னீ:—ஹேய், பூதேவேந்த்ரா! ராஜப்பிரஷ்டனை இந்த ராஜத்துவேஷி பிரஜைகளிடம் த்துவேஷப்பிரஷங்கம் செய்கிருன்! இவனைச் க்ஷமிக்கிருயா? க்ஷிக்ஷக்ஷிக்கிருயா?

பூபதி:—யாரிவன்......?

[எனக் கேட்டுக்கொண்டே புலவர் மாபாடியின் தலைமயிரைப் பிடித்துத் தூக்கி நிறுத்தி முகத்தைப் பார்த்ததும் திடுக்கிட்டுத் திகைத்து......]

புலவர்...பெருமான்......?

மாபாடி:— ஆம். தக்கது எது, தகாதது எது எனும் தகவு உரைக்கும் தமிழ்ப் புலவனே நான்! நீயோ, தலைவன்!! தக்கதைக் காக்கவும், தகாததைப் போக்கவும் உரிய செயல் புரிபவன்!!! செய்தாயா உன் கடமையை?

திலோர்த்:— [சந்தர்ப்பம் அறிந்து ஸோம பானமும், இறைச்சியுடைய எலும்பும் எடுத்துக்கொண்டு காம பானம் எய்தவண்ணம் திராவிட பூபதியை அடைகிருள்.]

பூபதி:— இதோ, செய்து கொண்டுதானே இருக்கிறேன்..

[எனக் கூறிக்கொண்டே திலோர்த் தமை தரும் ஸோமபானத்தைப் பருகிவிட்டு, எலும்பைக் கடித் துக்கொண்டிருக்கிருன்.]

மாபாடி:— எதை......?

பூபதி:— எதை நீ பார்க்கிருயோ, அதை!

மாபாடி:—தக்கதைப் போக்கிவிட்டாய், தகாததைக் காக் கிருய்?

பூபதி:— மக்களிடம் என்னைப்பற்றி நீ அப்படி எல்லாம் தூற்றி இருக்கிருய்......?

மாபாடி:—ஆமாம். தூற்றினேன்! நன்ருகத் தூற்றினேன்! நம் தலைவன் தன் கடமையை மறந்தான்; மடமையை வளர்க்கும் ஆரியர்க்கு அடிமையாஞன்; அறிவிழந் தான்; திராவிடரின் பொதுவுடமைகளைத் தீக்கிரை யாக்கும் ஆரியரின் யாக குண்டத்தைக் காக்கிருன் என்றெல்லாம் உன்மீது கடுமையான குற்றச்சாட்டு களைக் காட்டியே தூற்றினேன்!!!

பூபதி:— போதும்! நிறுத்து உன் பேச்சை!

மாபாடி:— முடியாது! இத்தகைய உன்னை ஒழித்துவிட்டு வேருெரு சிறந்த தலைவனைத் தேர்ந்தெடுக்கும் வரை என் பேச்சை நிறுத்தவே முடியாது !!

பூபதி:— ['பளீர் பளீ'ரென்று மாபாடியின் வாயில் அறைந்து இரத்தம் ஒழுகச் செய்து விட்டு]

கற்றவனே! நேற்றுவரை என்னைப் போற்றிய உன் வாய், இன்று தூற்றியதன் பயனைப் பார்! இரத்தம் ஒழுகுகிறது!! இத்தோடேனும் நீ திருந்தாவிட்டால், உன் உடலிலிருந்து உயிரே ஒழுகிவிடும்!!!

மாபாடி:--நான் சாகப் போகிறவனே தான்! நீயோ, திராவிடரைப் பொறுத்தமட்டில், நேற்றே செத்துவிட்டவன்!!

பூபதி:— என்ன சொன்னாய்......

[என மாபாடியைத் தன் கட்டாரியால் குத்திக் கொல்ல முனைகிறான்]

மல்லி:— [மாபாடியைத் தேடிக்கொண்டு அங்கு வந்து மறைவிலிருந்து பார்த்து மனங் கலங்குகிறாள்]

ப்ரஹஸ்:— பூதேவேந்த்ரா!

[என யாக குண்டத்திலிருந்து எழுந்து வருகிறான்]

திலோர்த்:— [திராவிடபூபதியின் கையைப் பிடித்திழுத்துத் தடுக்கிறாள்]

ப்ரஹஸ்:—பண்டித ஸிஹாமணியைப் பிராணஸேதம் ஸெய்வது மஹாப் பாபம்!!

பூபதி:—ஆகா......! புத்திகெட்ட புலவனே! ஆரியத்தின் அருமையை அறியாமல் புலம்பினாயே, பார்த்தாயா இராஜ குருவின் தயாள குணத்தை......?

மாபாடி:— அறிவிலியே! ஆரியப்புலி பதுங்குகிறது...... பாய்வதற்கு!

பூபதி:— ஆ......ங்......?

[என மீண்டும் கட்டாரியை ஓங்குகிறான்]

ப்ரஹஸ்:— ஊ...ங்...ஹ-ூ...ம்

[எனத் தடுத்து மாபாடியை நோக்கி]

"மஹா மூர்க்கஸ்ய யாஹோயம் மேஷரிஷபீசத தக்ஷிண; மமாப்யர்த்தம் தவாப்யர்த்தம் விக்நம் மாகுரு பண்டித ஸ்வாஹா"

---

மாபாடி:— உம்.— "இந்த யாகம் செய்வோன் அறிவிலிகளுக்குத் தலைவனுவன். இதற்கு அநேகம் ஆடுமாடுகள் நன்கொடையாய் வழங்கப்படும். அவைகள் உனக்குப் பாதியும், எனக்குப் பாதியும். ஆகையால், ஓ புலவனே! இடையூற்றை உண்டாக்கிக் கெடுத்துவிடவேண்டாம்"-கேட்டாயா கேடுகெட்ட தலைவனே?

பூபதி:— ஆங்...? [என ஏறிட்டுப் பார்க்கிறுன்]

அக்னீ:— ஹே.......ய் ராஜத் துவேஷி?

[என மாபாடியின் மண்டையில் வேல்கம்பால் அடிக்கிறுன்.]

மாபாடி:— ஆ.....ய்......

[எனக் கீழே சாய்கிறுர்.]

---

## காட்சி 27. [சாலை]

உறுப்பினர்:—திராவிடபூபதி, ப்ரஹஸ்பதி, அக்னீத்ரன், மாபாடி.

நிகழ்ச்சி:— [திராவிடரில் மூவகைச் சாதிப் பிரிவினைகள் ஏற்படுத்தி, நான்காவதாய் மூவர்க்கும் உயர்ந்த சாதியாக ஆரியர் புகுந்து ஆகம ஆதிக்கம் ஏற்படுத்த முனைவதை கடுமையாய் எதிர்க்கும் புலவர் மாபாடியைக் கொன்றுவிடத் தீர்மானிக்கின்றனர்.]

பூபதி:—ராஜகுரு! அப்புலவனுக்குப் பொதுமக்களிடம் கொஞ்சம் செல்வாக்கு உண்டு...!!

ப்ரஹஸ்:—ஊம். அதனுலேயே, பிரஜா சக்தியைச் சிதைத்து, மஹாராஜா தனது ராஜரீகத்தைப் பிரஹ்மதேவ வேத ஸாஸ்த்திர ரீதியாய் ஸ்வீஹரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஸம்பவித்து விட்டது!

பூபதி:—எப்படி எப்படி?

ப்ரஹஸ்:—திராவிட பிரஜைஜயை க்ஷத்ரியா, வைஸியா, க்ஷூத்ரா எனும் மூன்று ஜாதிகளாய்ச் சிதைத்தும், ஆர்ய பிரஜைஜயைப் பிராஹ்மணு—க்ஷத்ரியா எனும் இரண்டே ஜாதிகளாய் மாத்திரம் விஸ்தரித்தும் ஸங்கமம் ஸெய்ய வேண்டும்!

பூபதி:—ஒகோ! திராவிடரையும், ஆரியரையும், அவ்வாறு ஒன்றுபடுத்தி விடவேண்டும்!! ஆகா...நல்ல ஆலோசனே!!!

ப்ரஹஸ்:—ஆலோசனே அல்ல; மஹாவிஷ்ணுவின் ஆக்ஞை! பிரஹ்மதேவனின் வேதஸாஸ்த்திரப் பிராப்த்தம்!! பூதேவேந்த்ர திராவிடபூபதியின் ராஜநீத பரிபாலன விதி!!!

[எனக் கூறிக்கொண்டே தனது இடுப்பில் சொருகி இருந்த சுவடிக் கட்டை எடுத்துப் பிரித்துப் படிக்கிருன்.]

"தபஸ்தப்த்வாஸ்ருஜத்......"

பூபதி:—ஐயய்யோ......!

ப்ரஹஸ்:—என்ன......?

பூபதி:—ஒன்றுமே புரியவில்லையே!

ப்ரஹஸ்:—ஊம்...!—ஹேய், அக்னீத்ரா......!

அக்னீ:—நமஸ்தே குருதேவ்......

[என ஓடிவந்து பணிகிருன்.]

ப்ரஹஸ்:—அப்பண்டித ஸிஹாமணியை......

பூபதி—:—ஆ...ம்...! கொண்டுவா இங்கே.

அக்னி:—ஆக்ஞை.

[எனப் போய் புலவர் மாபாடியைக் கொண்டு வந்து நிறுத்துகிறுன்.]

பூபதி:—உம். திராவிடர்--ஆரியர் என்று வீணே பிரித்துப் பேசி வேதனைப்படும் புலவரே! அப்பிரிவினையை அறவே ஒழித்து இருவரையும் ஈரறக் கலக்கச் செய்யும் ஈடில்லா ஏட்டுத் திட்டத்தை இராஜகுரு நமக்கு வழங்குகிறுர்! அவற்றை விளங்கி, விளக்கும்!

ப்ரஹஸ்:—"தபஸ்தப்த்வாஸ்ருஜத் ப்ரஹ்மா ப்ராஹ்மணோ கோசஸ்யே தகுப்தயே தருபத்யர்த்தம் பித்ருதேவானும் தர்ம ஸம்ரக்ஷணயச ஸார்வஸ்ய ப்ரபவோ விப்ரா: ஸ்ருதாத்யயனசீலின:"

மாபாடி:—"வானவரையும், மூதாதையரையும் மகிழ்விக்கவும், அறத்தைக் காக்கவும் எண்ணிய பிரம்மா, கடுந் தவம் புரிந்து பார்ப்பனரைப் படைத்தான். இப்பார்ப்பனர் வேதம் படித்தலே ஒழுக்கமாகவுடையவர்களும், இவ்வுலகிற்கெல்லாம் தலைவர்களுமாவர்!"

பூபதி:—அதாவது: வேதம் ஓதுகிற பார்ப்பனர் முதலாவது ஜாதி! ஊம். சரி; அப்புறம்?

ப்ரஹஸ்:—"ப்ரதானம் க்ஷத்ரியே கர்ம, ப்ரஜானும் பரிபாலனம்:—"நாத: பரதரம் தர்மோ ந்ருபாணும் யத்ரணர்ஜிதம்—விப்ரேப் யோதீயதே த்ரவ்யம்"

மாபாடி:—"மன்னருக்கு முக்கிய கடமை மக்களை ஆளுவதும், போரில் பகைவர்களைக் கொன்று பொருட்களைக் கைப்பற்றிப் பார்ப்பனருக்குக் கொடுப்பதுமாகும்"

பூபதி:—நாட்டை ஆளும் தலைவனும், போர் புரிகிற வீரர்களும் இரண்டாவது ஜாதி!!

மாபாடி:—அட! இரண்டாஞ் சாதியே.....

ப்ரஹஸ்:—உஸ்......!

பூபதி:—குறுக்கே பேசாதே.

ப்ரஹஸ்:—"பசூனும் ரக்ஷணம் தானமிஜ்யாத்யயனமேவச;
வணிக்பதம் குஸீதஞ்ச வைஸ்ய ஸ்ய க்ருஷீ மேவசு"

மாபாடி:—"யாகம் செய்தல், கற்றல், கொடை வழங்கல் இம்மூன்ருேடு, வட்டிக்குப் பொருள் கொடுத்தல், பசுக்களைக் காத்தல், பயிரிடுதல், வாணிபம் செய்த லும், மூன்ரும் சாதிக்கு உரியது."

பூபதி:—ஊம். சரி; அப்புறம்?

ப்ரஹஸ்:—"ஏகமேவது சூத்ரஸ்ய ப்ரபு: கர்மஸமாதிசத் ஏதேஷாமேவவர்ணனும் சுஸ்ரூஷாமனஸூயயா"

மாபாடி:—"பொருமையின்றி மூன்று சாதியாருக்கும் பணி விடை செய்தலே நாலாஞ் சாதிக்குரிய தொழில்."

பூபதி:—ஆமாம். ஆகமொத்தம் நான்கு சாதிப் பிரிவினை களுக்குள் ஆரியரும், திராவிடரும் ஒன்ருய்க் கலந்து விடுவர்!

ப்ரஹஸ்:—அல்ல!

"பிராஹ்மண: க்ஷத்ரியே வைஸ்த: த்ரயோவர்ணு
த்விஜாதய: சதுர்த்த ஏகஜாதிஸ்து க்ஷூத்ரோ,
நாஸ்திது பஞ்சம:"

மாபாடி:—"பார்ப்பனன், சத்திரியன், வைசியன் என்ற மூவரும் 'இரு பிறவியர்களாகலாம்! நான்காவது சாதி யாளுகிய சூத்திரன் தனிச் சாதியே!! ஐந்தாவது சாதி கிடையாது!!!"

பார்த்தாயா, இரண்டாஞ் சாதியாகப் போகும் திரா விட......னே!

பூபதி:—உஸ்......! குறுக்கிடாதே. 'இரு பிறவியர்' என் ருல் என்ன?

மாபாடி:—உனக்கும், ஆரிய மங்கையாகிய திலோர்த் தமைக்கும் பிறக்கும் பிள்ளைகளைத் தாம் 'துவிஜர' அல்லது 'இரு பிறவியர்' என்று ஆரியம் கூறு கிறது.

பூபதி:—அப்படியானால், ஆரியரும் திராவிடரும் இரத்தக் கலப்புடைய ஒரே இனமாகிவிடப் போகிறோம்!

மாபாடி:—இல்லை. உன்போன்ற நிலைமையில் உள்ள ஒரு சில திராவிட இனத் துரோகிகளை மதுவினாலும், மங் கையராலும் மயக்கிச் சத்திரிய, வைசியப் பட்டியலில் இடம்பெறச் செய்வதின் மூலம் உங்களையே கருவி களாய்ப் பயன்படுத்திக்கொண்டு, கோடிக் கணக்கான திராவிடப் பெருங்குடி மக்களைச் சூத்திரர்கள் என்று தாழ்த்திக் கொடுமைப்படுத்தக் கச்சை கட்டிக்கொண் டிருக்கிறான், இங்கு பிச்சைக்காரனாய்வந்த இப்பிர ஹஸ்பதி!

பூபதி:—சேச்சே.........

அக்னீ:—அபக்ஷாரம்!

ப்ரஹஸ்:—க்ஷமிக்கிறோம். ஊம்......!

"அனார்யமார்ய கர்மாணம் ஆர்யம் சானார்யகர் மிணம் ஸம்ப்ரதார்யாப் ரவீத் தாதா. நஸமௌ நாஸ மாவிதி"

மாபாடி:—"ஆரியன் தொழிலைச் செய்கிற ஆரியனல்லாத வன் ஆரியனாகவும் ஆகமாட்டான்; ஆரியனல்லாத வன் தொழிலைச் செய்கிற ஆரியன் ஆரியனல்லாத வனாகவும் ஆகமாட்டான்."

ஏய்...! இருபிறவியின் தலைவனாகப் போகிறவனே! இதன் பொருளென்ன?

எக்காரணத்தாலும், ஆரியன் திராவிடனாகமாட் டான், திராவிடன் ஆரியனாகமாட்டான் என்பது தானே......?

பூபதி:— [விடையளிக்க முடியாமல் திகைக்கிறான்.]

ப்ரஹ்ஸ்:—"ஜாதி மாத்ரோ பஜீவீவா காமம் ஸ்யாத் ப்ராஹ்மணப்ருவ: தர்மப்ரவகதா, ந்ருபதேர் நது க்ஷுத்ர: கதாசன"

மாபாடி:—"பிறவியினுலேனும் பார்ப்பன சாதியில் பிறந்து விட்ட ஒருவனை மந்திரியாக மன்னன் தேர்ந்தெடுத்துக்கொள்ளலாம்! அறிவில் மிகுந்தவனுயினும், சூத்திரன் ஒருபோதும் அரச சபைக்கு உரியவனுகவே மாட்டான்."

அடடா! என்ன கொடுமையான திட்டமிது......?

அக்னி:—உஸ்.........

[என மாபாடியின் வாயைப் பொத்துகிருன்.]

ப்ரஹஸ்:—"யஸ்ய சூத்ரஸ்து குருதே ராஜ்யே தர்ம விவேசனம் தஸ்ய ஸீததிதத் ராஷ்ட்ரம் பங்கே கௌரிவ பஸ்யத......"

மாபாடி:—"எந்த நாட்டில் சூத்திரன் மந்திரியாக இருக்கிருனே, அந்த நாடு சேற்றில் முழுகின பசுவைப் போலப் பார்த்துக் கொண்டிருக்கும்போதே அழிந்து போய்விடும்!"

பூபதி:— ஒகோ! அதனுல்தான் சூத்திரனுக்கு அந்தக் கதியா?

மாபாடி:— எதனுல்த்தான்?

பூபதி:— எதனுலா......? ஒரு சூத்திரன் எனக்கு மந்திரியாக இருந்ததினுல்தானே நமது களஞ்சியங்களும், ஆடுமாடுகளும் நெருப்புக்கிரையாகி நாடே சுடுகாடாகி விட்டது?

மாபாடி:— அட அறிவிலியே! ஒரு ஆரியன் உனக்கு இராஜ குருவாய் வந்ததினுலல்லவோ...........

பூபதி:— உஸ் சரி; போதும்! குறுக்கிடாதே.

ப்ரஹஸ்:— சக்தேனு பிஹி க்ஷத்ரேண நகார் யோதன ஸஞ்சய, க்ஷத்ரேண தனமாஸாத்ய ப்ராஹ் மணுனேவ பாததே."

மாபாடி:— "பொருளீட்டத் திறமை இருந்தாலும் சூத்திரன் அங்ஙனம் செய்யலாகாது. சூத்திரனுக் குப் பொருள் சேர்ந்தால்,பார்ப்பனன் துன்புறுவான்."
அட, நயவஞ்சக நச்சுப் பாம்பே........

அக்னீத்:— உஸ்.....!

[என மாபாடியின் வாயைப் பொத்துகிறுன்]

ப்ரஹஸ்:—"மஹோக்ஷம் லா மாஹாஜம் வாஸ் ரோத்ரியா யோப கல்பயேத் ஸத்க்ரியா ஸேவனம் ஸ்வாது போஜனம் ஸுன்ருதம் வச்."

மாபாடி:—"ஒரு பெரிய எருதையேனும், அல்லது கொழுத்த வெள்ளாட்டையேனும் கொன்று, வேதம் அறிந்த பார்ப்பனனுக்கு விருந்து செய்யவேண்டும். இனிமையான சொற்களால் அவனை மகிழ்விக்க வேண்டும்."

பூபதி:— ஆகா! இதுவன்ரு திராவிடரின் விருந்தோம் பும் பண்பாட்டிற்கு ஒரு எடுத்துக்காட்டாய் எதிர் காலத்தில் திகழும்!

மாபாடி:— உம். வெட்கக்கேடான வேதனைக் கூற்று!

அக்னீத்:— உஸ்........

ப்ரஹஸ்:— "உச்சிஷ்ட மன்னன் தாதவ்யம் ஜீர்ணனி வஸ ஞனிச; புலறகாஸ் சைவதான்யானும் ஜீர்ணஸ் சைவ பரிச்சதா,"

மாபாடி:—"சூத்திரனுக்கு எச்சலும், கிழிந்துபோன பழைய உடையும், நல்ல தானியங்களை எடுத்துக் கொண்டு பதரும், வைக்கோலும் கொடுக்கவேண்டும்."
உம். என்ன துணிச்சல்! எவ்வளவு கடுமையான கொடுங்கோண்மை!! அட, அக்னிக்குண்டப் பார்ப் பனச்சோம்பேறியே...!!! கனவு காண்கிருயா......?

பூபதி
அக்னீத் } :—உஸ்....உஸ்....உஸ்......உ......ஸ்............

மாபாடி:— காடு வெட்டி நாடாக்கிக், கழனி கட்டிப் பரம் படித்து, மாடு பூட்டி ஏருழுது, மடைதிறந்து நீர் பாய்ச்சிப் பாடுபட்டுப் பயிர் செய்யும் பாட்டாளிக்குப் பதரும் வைக்கோலும்! கேடு கெட்டுக் காடு சுற்றி கிடைப்ப வற்றை பொறுக்கித் தின்று, ஆடு மேய்க்கும் அறிவு கெட்ட ஆரியச் சோம்பேறிப் பார்ப்பானுக்கு மாடு வெட்டிக் கறிசமைத்து மாவிருந்து வைக்கவேண்டுமாம்!! கூடுவிட்டு ஆவி தான் போமளவும், திராவிடப் பெருங்குடி மக்களே, நாடுவிட்டு ஆரியரைத் துரத்தி விடும் நற்பணியை மறவாதீர் மறவாதீர்........ மறவாதீர்...!!!

அக்னீத்:— உஸ்......ஸ......

[என மாபாடியின் மண்டையிலடித்து வாயை மூடுகிருன்]

ப்ரஹஸ்:—"ஸ்ருதி ஸ்துவேதோ விஜ்ஞேயோ தர்கசஸ்த்ரம்து வைஸ்ம்ருதி தேஸர் வாமத்தேஷ்வ மீமாம் ஸ்யே தாப்யாம் தர்மோவினிச்சித; யோவமன்யேததே மூலே ஹேது சாஸ்த்ராஸ்ரயாங்நர; ஸஸாது பிர்பஹிஸ்கார்யோ நாஸ்திகோ வேத நிந்தக."

மாபாடி:— "வேதங்களும் சாத்திரங்களும் தருமத்திற்கு இருப்பிடங்களாதலால், அவைகளைப் பகுத்தறிவு மூலமாக எவனுவது கண்டிக்க முயன்ருல், அத்தகைய வேதப் பழிகாரனை நாத்திகனை நாட்டைவிட்டுத் துரத்திவிடவேண்டும்".

கேட்டாயா? பகுத்தறிவுக் கனலை மூட்டினுல், இவனுடைய வேத சாத்திரங்களெல்லாம் கொளுத்தப்படும் குப்பை கூளங்களாகிவிடும் என்பதை இவனே ஒப்புக்கொள்கிருன்.

ப்ரஹஸ்:— உஸ். "நக்ஷுத்ராய மதிம் தத்யாத்".

மாபாடி:—ஊம். பார்த்தாயா? "சூத்திரனுக்குப் பகுத் தறிவு உண்டாகும்படி எதுவும் செய்யலாகாதாம்"

பூபதி:— அப்படியானால், பகுத்தறிவிலும் வேத மொழியிலும் தேர்ச்சி பெற்றுள்ள இச் சூத்திரப் புலவனை என்ன செய்வது?

ப்ரஹஸ்:— "வேதாச்சாரனே ஜிஹ்வாச்சே தோதாரணே சரீரபேத"

மாபாடி:— ஆ...ங் ? "வேதத்தைச் சொல்லுகிற சூத்திரனின் நாக்கை அறுத்தெறிய வேண்டும்! பொருளை உணர்ந்து வைத்திருக்கிற சூத்திரனின் நெஞ்சைப் பிளக்கவேண்டும்!!"

பூபதி:— வேதவாக்கா? இது? அப்படியானால், இதை யாரால் தடுக்கமுடியும் ? ஊம். நடக்கட்டும்.

அக்னீத்:— ஆக்ஞை......

[எனப் பணிந்துவிட்டு மாபாடியின் கழுத்தைப் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகிறான்]

——[x]——

## காட்சி 28. [நீர் வீழ்ச்சி]

உறுப்பினர்:— பூமகள், பூங்கோதை, பூங்குன்றன்.

நிகழ்ச்சி:— [நாட்டிற்கு நேர்ந்துள்ள நெருக்கடியான நேரத்திலே, பிரிந்த காதலர் மீண்டும் கூடுவதற்கு ஒரு வாய்ப்பைப் பெறுகின்றனர்]

பூமகள்
கோதை }:— [ஏற்ற இசையில் பாடுகின்றனர்]

கோலந்தான் இயற்கையின் எழில் மிகுந்து
குலாவுங் காட்சியை என்ன சொல்வோம்!
ஆலத்தி மருதை தேக் கரசு வானில்
அளவளாவும் பல்வகைப் பூங்கா-ஆதி
காலத்திலே திராவிடர்தம் கண் குளிர் காட்சியாம்
கான் ஆறும் நீர்வீழ்ச்சியும் மலர்க் குளங்களும்
ஞாலத்தின்று வாழ்விழந்த வனிதை போலே
ஞேய மிழந்ததேன் குளிர் மதியே.........?

கோதை:— அம்மா! அதோ பார்! ஒரு பெரிய வேங்கை...! புதரில் பதுங்குகிறது!

[என அங்கோர் புதரில் பதுங்கப் போகும் ஒரு பெரிய வேங்கையைக் காட்டுகிருள்]

பூமகள்:— [கோதை சுட்டிக்காட்டிய வேங்கையைப் பார்த்தபின்]

இதோ, இங்கே வந்துபார்! ஒரு பெண் யானை தண்ணீர் குடிக்க வருகிறது!

[எனக் கூப்பிட்டுக் காட்டுகிருள்]

கோதை }
பூமகள் } :— [தண்ணீர் குடிக்கவந்த அப்பெண் யானை மீது, அப்புதரில் பதுங்கிய வேங்கை பாய்ந்ததால் நிகழும் பெரும் போராட்டத்தைக் கண்டு இரசித்துக் கொண்டிருக்கின்றனர். அப்போது, அங்கு அலறும் அப் பெண் யானையின் குரல் கேட்டு ஓடிவரும் அதன் ஆண் யானை தங்கள் முதுகுப் பக்கத்தில் மிகவும் நெருங்கிவிட்டதைக்கூடக் கவனிக்காமல் நிற்கின்றனர்]

குன்றன்:— [தற்செயலாய் அப்பக்கம் வந்து கொண்டு இருக்கும்போது, பூங்கோதைக்கும் பூமகளுக்கும் நேர இருக்கும் அபாயத்தை அறிந்ததும் துணிந்து அந்த ஆண் யானைக்கு முன்னுல் ஓடி அதன் வழியில் குறுக்கே நின்றிருந்த அவர்களைப் பிடித்திழுத்துக் கொண்டு பக்கத்திலுள்ள ஒரு சிறு மலைச் சாரலில் பாய்ந்து உயிர் தப்புவிக்கின்றுன்.]

——[x]——

## காட்சி 29.

[மலைச் சாரல்]

உறுப்பினர்:— பூமகள், பூங்கோதை, பூங்குன்றன், மல்லன், மல்லி.

நிகழ்ச்சி:— [புலவர் மாபாடிக்கு விதிக்கப்பட்டிருக்கும் கோர தண்டனையைப் பற்றி மல்லனும், மல்லியும் சென்று தலைவியிடம் முறையிடுகின்றனர், தலைவி பொங்கி எழுகிருள் போருக்கு]

பூமகள்:— நீ......யார ?

குன்றன்:— நான் தக்க சமயத்தில் பார்த்திராவிட்டால், நீங்கள் இந்நேரம் அந்த யானையின் கொம்புகளுக்கு இடையே சிக்கி அதன் கால்களால் நசுக்கப்பட்டிருப்பீர்களே...........?

பூமகள்:— ஆம், நல்ல வேளை! தப்பினேம்!! நீ இங்கே எப்படி வந்தாய்?

குன்றன்:— நானும், நம் புலவரும் இம்மலை முகட்டில்த்தானே வசிக்கிறேம் !

பூமகள்:— அப்படியா ! நம் புலவர், "திராவிட மாபாடியம்" எழுதி முடித்துவிட்டாரா.........?

குன்றன்:— ஏதோ, இத்தனை நாட்களாய் எழுதிக்கொண்டேதான் இருந்தார்! இரண்டு தினங்களுக்கு முன் திடீரென்று தனக்குத்தானே ஏதேதோ முணங்கிக்கொண்டு, இவ்வேட்டுச் சுவடியைத் தூக்கிப் பரண் மீது வீசிவிட்டு வேகமாய்ச் சென்றவர், இன்னும் திரும்பி வரவே இல்லை.

[எனக் கூறிக்கொண்டே தன் மடியிலிருந்த சுவடியை எடுத்துத் தலைவியிடம் கொடுக்கிருன்]

பூமகள் }
கோதை } :— ஆ! "திராவிட மாபாடியம்!!"

[எனப் புதை பொருளைக் கண்டெடுத்தவர் போல் வியந்து வாங்கிப் படித்து மகிழ்கின்றனர்]

கோதை:— "அகில முயிர் பொருட்களெல் லாம்
தெகிள தெளித்த கதிர்".

குன்றன்:— கருத்தென்ன ?

பூமகள்:— 'பூமியும், பூமியில் தோன்றிய உயிரினங்களும், பொருளினங்களும் ஆகிய எல்லாம் சூரிய ஒளியினாலேயே உற்பத்தி ஆயின!'

குன்றன்:—உண்மை. ஆனால், ஆரிய வேதத்தில் மகாவிட்ணுவும், பிரம்மாவுங்கூடப் படைத்ததாக அன்றோ எழுதியிருக்கிறதாம்!

கோதை:— அதைத் தீயிலிட்டுக் கொளுத்தவேண்டும்! ஊம்...—"பிறப்பினா லொக்கும் பெருங்குடி தொழிற்
சிறப்பினால் பேதமுறுஞ் சீர்,"

பூமகள்:— "திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவரும் பிறப்பினால் சரிசமமானவர்களே! தொழிற் சிறப்பினால் மட்டுமே வாழ்வில் உயர்வு தாழ்வு அடைவர்!!"

குன்றன்:—இவ்வுயர்ந்த பண்பாட்டிற்கு இடையூறாய்ப் பிறப்பினாலேயே நான்கு பெருஞ் சாதிப் பேதத்தைத் திணிப்பதற்கு ஆரியப் பிரஹஸ்பதி தீவிரமான திட்டந் தீட்டிக் கொண்டிருக்கிறான் என்று ஒற்றன் ஒருவன் வந்து எனக்கு உரைத்தான்!

கோதை }
பூமகள் } :—ஆ...ங்......! அப்படியா.........?

கோதை:—அம்மா! இதோ, நம் தொழிலைப் பற்றிய ஒரு பா!

பூமகள்:—படி......!

கோதை:—“வாழ்வி லுயர்வு உழுதுண்ணல்! வண்களமர்
தாழ்வி லயரு முலகு.”

பூமகள்:—ஆகா! எவ்வளவு அருமையான கருத்து!!

குன்றன்:—என்ன......?

பூமகள்:—‘உழவுத் தொழிலாலேயே உலக வாழ்வு உயர்வடையும்! உழவர் தாழ்ந்தால், உலகமே பிற்போக்கு அடைந்து விடும்!’

மல்லன்
மல்லி } :— அம்மா......!

[என அலறியோடி வருகின்றனர்.]

பூமகள்:—யாரது...... நீங்களா?

மல்லன்:—ஆமாம். அதை இன்னொரு முறை சொல்லுங்கள்!

பூமகள்:—எதை?

மல்லி:—இங்கு சற்று முன் சொல்லிக் கொண்டிருந்தீர்களே அதை!

பூமகள்:—அதுவா......! ‘உழவுத் தொழிலாலேயே உலக வாழ்வு உயர்வடையும்! உழவர் தாழ்ந்தால், உலகமே பிற்போக்கு அடைந்து விடும்!!’

மல்லன்:—இந்த உண்மையை எடுத்துரைத்து, ஆரியத்தை எதிர்த்ததற்காகத்தானம்மா, நம் புலவர் மாபாடியை நாளைக் கற்களால் அடித்துக் கொல்லப் போகிறார்களாம்!

பூமகள்
கோதை } :— என்ன சொல்கிறாய்......?

மல்லி:—உண்மைதானம்மா! நாளை, பட்டப் பகலிலே நாற்சந்தியிலே அக்கோரக் காட்சி நடைபெறும் என்று பறை அறிவித்திருக்கின்றனர்!!

குன்றன்:— பார்த்தீர்களா?

பூமகள்:—பார்ப்பதென்ன—கேட்பதென்ன? புறப்படுங்கள் மீட்ப்பதற்கு......

[என முன் செல்கிருள்.]

குன்றன்:—புலவர் மாபாடி......?

மற்றெல்லோரும்:—வாழ்க........

[என முழங்கிக்கொண்டே செல்கின்றனர்.]

---

## காட்சி 30. [நாற்சந்தி]

உறுப்பினர்:—புலவர் மாபாடி, திராவிடபூபதி, ப்ரஹஸ்பதி அக்னீத்ரான், உபஹோதா, ஹோதா, திராவிடப் பெருங்குடி மக்கள், மாமல்லன், அமைச்சு, மீளிப்பாகன், ப்ரதிஹர்த்தா, மல்லன், பூங்குன்றன்.

நிகழ்ச்சி:— [ஆரியத்தின் வைரியாகிய புலவர் மாபாடியைக் கற்களால் அடித்துக் கொன்றதால் நாடு கொந்தளித்து, 'ஆரிய எதிர்ப்பு—ஆரிய ஆதரிப்பு' என இரு கூருய்ப் பிளவுறுகிறது.]

மாபாடி:— [திராவிடப் பெருங்குடி மக்கள் முன்னிலையில், நாற்சந்திப் பாறை மீது, வாயும் கைகளும் கட்டப்பட்டவண்ணம் குற்றுயிராய் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிருர்.]

பூபதி:—திராவிடப் பெருங்குடி மக்களே! நேற்று வரையில் நமது புலவர் பெருமான் என்று போற்றிப் புகழப்பட்ட இம்மாபாடிக்கு மமதையும், செருக்கும் அளவு கடந்து விட்டபடியால், தலைவனுகிய என் கட்டளைக்குக் கீழ்படிய வேண்டும் என்ற அறநெறியைக்கூட மறந்து என்னையே எதிர்க்கவும் துணிந்துவிட்டான்!

அறவாழியந்தனன் அருள் பெறுவதற்காக ஆடு மாடுகளை வெட்டி ஓமகுண்டத்தில் போட்டு யாகம் செய்வதின் மூலம் செந்தன்மை பூண்டொழுகும் பிரஹஸ்பதியாகிய நமது இராஜகுருவிற்கு பிரம்ம தேவன் தந்திருக்கும் தரும சாத்திரப்படிப் பிறப்பினால் நால்வகை ஜாதி பேதங்களை ஏற்படுத்தி ஆரிய திராவிட ஒற்றுமையை நிலைநாட்டப் போகிறோம் என்றால், அதையும் எதிர்த்து இந்த அகம்பாவம் பிடித்த புலவன் குதர்க்கம் புரிந்தால், எம்மால் எப்படி சகிக்க முடியும்?

இனிமேல், நமது திராவிடத்தில் தோன்றும் எந்தத் தமிழ்ப் புலவனுக்கும், அவனுடைய ஏழேழு தலைமுறை தலைமுறையாய் வரப்போகும் சந்ததிகளுக்கும் இது ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும்! ஆரியரையோ, ஆரிய வேத புராண இதிகாச சாத்திரங்களையோ ஆதரித்தேனும், மொழி பெயர்த்தேனும், ஏடெழுதலாமே ஒழிய, எதிர்த்துப் பேசவோ, எழுதவோ வேண்டுமென்ற எண்ணங்கூட ஏற்படக் கூடாது என்பதற்காகத்தான், இத்தமிழ்ப் புலவனின் வாயைக் கட்டிப் பலபேர் அறியக் கற்களால் அடித்து வதைத்து, இவன் உடலை அணு அணுவாய்ச் சிதைத்துக் கொன்று விடும்படிக் கட்டளை இட்டிருக்கிறோம்! ஊம். எறியுங்கள் கற்களால்!!!

பெருங்குடி மக்கள்:— [துக்கித்து மௌனம் சாதிக்கின்றனர்.]

பூபதி:—அட! ஏன் சும்மா நிற்கிறீர்கள்? இந்த வேத நிந்தகன் மீது---பிராமணத் துவேசி மீது எறியுங்கள் கற்களை!! ஊம். எறியுங்கள், எறியுங்கள்!!!

உம். சரி; இராஜகுரு! நீர்தான் இக்கல்லெறி படலத்தைத் தொடங்கி வைக்கத் தகுந்தவர்! அநேக ஆயிரம் உயிரினங்களைத் துண்டந் துண்டமாய் வெட்டி ஓமகுண்டங்களில் தூக்கிபோட்டு எரித்து யாகங்கள் பல செய்து செந்தன்மை பூண்டொழுகும் உமது கொலைக் கரங்களாலேயே இத்திருப்பணியையும் துவக்கி வைப்பீராக!!

ப்ரஹஸ்:—ஹேய், பூதேவேந்த்ரா! நானே பிராஹ்மணேத் தமன்! ஹோமத்தில் என் கரங்களால் பிராண ஸேதமாகும் ஜீவன்களெல்லாம் ஸ்வர்க்கம் புகுவது போல், இச் க்ஷுத்ரப் புலவனும் ஸ்வர்க்கம் புக ஹேதுவாகுமே என்று ஸஞ்சலப்படுகிறேன்!

பூபதி:—சுவர்க்கமா......? இத்தமிழ்ப் புலவனுக்கா? ஊஹும்......கூடவே கூடாது!! இவனை நரகத்திற்குத் தான் அனுப்ப வேண்டும்!!!

ப்ரஹஸ்:—அப்படியானால், மஹாஜன நியாய ஸ்தல நியாயாதிபதியே இச் க்ஷிக்ஷையை ஆரோபணம் செய்யலாமே!

பூபதி:—ஆம். அமைச்சு மீளிப்பாகனுக்கு, வயது முதிர்ச்சியினால் மூளைக் குழப்பம் ஏற்பட்டுவிட்டபடியால், நாளை முதல் நமக்கு மந்திரியாகப் போகும் மன்றத் தலைவன் மாமல்லனே இத்தண்டனையை நிறைவேற்றுவதின் மூலம் தன் திறமையைக் காட்டட்டும்!

மாமல்லன்:— [புலவர் மீது கல்லெறிந்தால் என்னாகுமோ எனத் தத்தளிக்கிறான்.]

ஹோதா, உபஹோதா:— [ஆளுக்கொரு கல்லை எடுத்து மாமல்லனின் கரங்களில் வைத்து புலவர் மீது விட்டெறியும்படி தூண்டி அவன் கரங்களைக் கருவியாகப் பயன்படுத்திக்கொண்டு தாங்களே எறிய முயற்சிக்கின்றனர்]

மீளி:—நிறுத்துங்கள்---! பெருங்குடி மக்களே! நமது தலைவன் கூறியதுபோல், எனக்கு வயது முதிர்ந்துதான் விட்டது! ஆனல், இன்னும் மூளைக் குழப்பம் முழுதும் ஏற்பட்டுவிடவில்லை! ஏனெனில், சற்று முன்பிருந்துதான் என் மூளை குழம்ப ஆரம்பித்திருக்கிறது! எனினும், இப்போது இத்தமிழ்ப் புலவன்

மீது கல்லெறியத் துணிப்வனே நாளை முதல் என் பதவியை வகிக்கட்டும்! ஆனல்............

மாமல்லன்:—நான் நமது தலைவனின் கட்டளைக்குக் கீழ் படிய முனைந்தேனே யன்றி, அமைச்சுப் பதவிக்கு ஆசைப்பட்டு, நமது புலவர் பெருமான் மீது கல் லெறிய முன் வந்தேனில்லை.

மீளி:—ஊம்......ஆனல், மரண தண்டனை விதிக்கப்பட் டிருக்கும் நமது புலவர் பெருமான் தனது கடைசி வார்த்தையைக்கூட நம்மிடம் கூற முடியாதபடி, அவ ருடைய வாய் ஏன் கட்டப்பட்டிருக்கிறது என்பது நமக்குத் தெரிய வேண்டும்!

பெருங்குடி மக்கள்:—ஆம். தெரிய வேண்டும்! வாய் ஏன் கட்டப்பட்டிருக்கிறது? அவிழ்த்து விடுங்கள்! புல வரின் வாயை அவிழ்த்து விடுங்கள்!! அவிழ்த்து விடுங்கள்.........

பூபதி:—முடியாது! முடியவே முடியாது!! கட்டப்பட்டது; கட்டப்பட்டதேதான்!!! ஊம். எறியுங்கள் கற்களை! ஏ, வருங்கால மந்திரியே! இவ்வேத நிந்தகன் மீது விட்டெறி கற்களை.........

உபஹாதா<br>ஹோதா }:— ஆம். போடுங்கள், போடுங்கள், போடுங் கள் கற்களை. ஊம் போடு...போடு......

[எனக் கூவிக்கொண்டே, மீண் டும் முயன்று மாமல்லனைக் கொண்டு முதல் கல்லொன்றை எறியச் செய்துவிட்டுப் பிறகு தாங்களே பல கற்களை எறிகின் றனர்.]

பெருங்குடி மக்கள்:—கூடாது கூடாது; புலவர் பெருமான் மீது கல்லெறியக் கூடாது; கூடவே கூடாது; நிறுத் துங்கள் நிறுத்தங்கள்......

[என முழங்கித் தடுக்கின்றனர்.]

மாபாடி:— [கல்லெறிபட்டதும் சுருண்டு விழுந்து உயிர் விடுகிறார்.]

ப்ரதிஹர்த்தா:—ஹேய் குருதேவ்...! அபயம்......அபயம்......அபயம்.........

[எனத் தீப்புண்ணோடு அலறித் துடித்து ஓடி வருகிறான்.]

ப்ரஹஸ்:—என்ன......?

ப்ரதிஹர்த்தா:—குருதேவ்...! நமது கூடாரங்களெல்லாம் ஸ்திரீ தஸ்யூக்களின் அக்னியாஸ்த்திரங்களால் பஸ்பீஹரிக்கப்பட்டன! நமது மேஷ ரிஷபங்களும் அத்தஸ்யூக்களாலேயே அபஹரிக்கப்பட்டு விட்டனவே குருதேவ்.........

ப்ரஹஸ்:—ஹா...ங்? ❋"பிராஹ்மணுய மகாதக!"

[என முழங்கிக்கொண்டு ஓடுகிறான்.]

[எனக் கூடவே ஓடுகிறான்.]

பூபதி:—இராஜ குரு......!

அக்னீத்ரன், மாமல்லன், உபஹாதா, ஹோதா, ப்ரதிஹர்த்தா, சிலர் }:— பூதேவேந்த்ரா...........! தலைவா...! குருதேவ்...!!

[என முறையே கூக்குரல் போட்டுக் கொண்டு பின் தொடர்ந்து ஓடுகின்றனர்.]

குன்றன், மல்லன் }:—எங்கே புலவர் பெருமான்.........?

[எனப் பாய்ந்தோடி வந்து மாபாடியைத் தேடி, அவர் உடலைக் கண்டெடுத்து மடி மீது போட்டுக் கொண்டு கண்ணீர் கொட்டுகின்றனர்.]

---

❋'உயிரை வதைக்கிறவனே பார்ப்பனன்!'

பெருங்குடி மக்கள்:—அச்சோ....அச்சச்சோ.....ச்சச்ச்......
[என வருந்திக் கண்ணீர் வடிக்கின்றனர்.]

மீளி:—தளபதி......!

குன்றன்:—அமைச்சே......! நமதரும் புலவரை இழந்து விட்டோமே.

[எனப் பொங்குகிருன்.]

மீளி:—காலங் கடந்து வந்தாய்! கண்ணீர் கொட்டிப் பய னில்லை!! புலவரின் வாய்க்கட்டை அவிழ்த்துவிடு!!!

மல்லன்:—இப்படி யார் கட்டியது?

[எனப் புலவரின் வாய்க் கட்டை அவிழ்த்து விடுகிருன்.]

குன்றன்:—ஆ...ங்......?—அமைச்சே......!

மீளி:—என்ன......?

குன்றன்:—புலவரின் நாக்கைக் காணேமே......!

மல்லன்:—ஆம். அறுத்தெடுக்கப்பட்டிருக்கிறது!!

பெருங்குடி மக்கள்:—என்ன...? நம் புலவரின் நாக்கு அறுக்கப்பட்டிருக்கிறதா...? அறுத்தவன் யார்? யார்...அறுத்தவன்......?

மீளி:—எவன், தன்னுடைய வேதத்தின் பொருளை உணர்ந்து வைத்துக்கொண்டிருக்கிற சூத்திரனின் நெஞ்சைப் பிளக்கவும், நாக்கை அறுக்கவும் வேண்டு மென்று எழுதிவைத்துக்கொண்டிருக்கிருனே, அந்த ஆரியனைத் தவிர வேறு யாராய் இருக்கக்கூடும்?

பெருங்குடி மக்கள்:—ஆரியன்...! ஆரியனு நம் தமிழ்ப் புல வனின் நாக்கை அறுத்தான்......?

குன்றன்:—ஆம். அறுத்திருக்கிருன்! நம் புலவனின் நாக் கை மட்டுமல்ல; நம் மூக்கை—மானத்தை! மூளையை—மூதறிவை!! முதுகெலும்பை—முழு வலிமையை!!!

அறுத்தெறிந்துவிட்டான், ஆடுமாடு மேய்க்க வந்த அற்பனுகிய ஆரியன்.

இரும்பு போன்ற அறப்போர் வீரர் மலிந்துள்ள மறத் திராவிடத்திலே! அநுபவ அறிஞர் நிறைந்துள்ள அறிவுத் திராவிடத்திலே!! அறியாமையின் உருவங்களாகிய ஆரிய நச்சு மரங்களால் இத்தகைய காரியங்களை எப்படிச் சாதிக்க முடிந்தன?

ஆரியர் திராவிடத்திலே வந்து புகுந்தவுடன், திராவிடர்களாகிய நாம் வீரம் குன்றிக் கோழைகளாகி விட்டோமா? அறிவு மங்கி அறிவிலிகளாகி விட்டோமா?

திராவிடப் பெருங்குடி }:— இல்லை! இல்லை!! தளபதி!—நம் வீரம் குன்றவில்லை; நாம் கோழைகளாகி விடவில்லை. அறிவாற்றல் மிக்க மறவர்கள்! போர்களம் புகத் துடிக்கிறோம்!! கொட்டு போர் முரசை—காட்டு எதிரிகளின் படை வரிசையை!!!

பூங்குன்றன்:— அமைச்சே! இவர்கள் இப்போது காட்டும் எழுச்சியை நமது உயிரினும் இனிய, இப்புலவர் பெருமானைக் கற்களால் அடித்துக் கொள்ளும்போது எங்கே கொண்டுபோய்ப் புதைத்து வைத்திருந்தனரோ?

'ஒரு மயிரை இழக்கின் உயிர் வாழாக் கவரிமானைப் போல், தன்மானம் இழக்காமல் வாழடா திராவிடா!' என்று கற்றுக் கொடுத்த திராவிட மாபாடியின் உயிரை, ஆரியன் கவரும்போது திராவிடப் பெருங்குடி மக்கள் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனரென்றால், இதைவிட மானக்கேடான கோழைத்தனம் வேறென்ன இருக்கிறது? இரும்பை மரம் வென்றுவிட்டதே என்றால், ஆச்சரியமில்லையா அமைச்சே...?

மீளி:—ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது தளபதி?

குன்றன்
மல்லன் } :— என்ன......?

மீளி:— சற்று அமைதியாய்க் கேளுங்கள்! மரம் தனித்து நின்று இரும்பை எதிர்த்திருந்தால், வென்றிருக்க முடியாதுதான்! இரும்புபோன்ற அறப்போர் வீரர்கள் என்றுயே, அவர்களின் தலைவனுகிய திராவிடபூபதி எனும் இரும்புக் கூடத்திற்குள்ளே,பிரஹஸ்பதி எனும் மரக்கைபிடிக் காம்பு நுழைந்து கொண்டால், மன்றத் தலைவன் மாமல்லன் போன்ற மந்திரிப் பதவி மோகங்கொண்ட சிற்றுளிகளால். திராவிடப் பெருங்குடி மக்கள் எனும் இரும்புப் பாறையைக் கூடச் சுக்கு நூருக்கி விடலாமல்லவா?

குன்றன்
மல்லன் } :— உண்மையே......!

குன்றன்:—உண்மைதான் அமைச்சே!! முதலில் ஒழிக்கப்பட வேண்டியவன் திராவிடபூபதியேதான்!!!

திராவிடப் பெருங்குடி மக்களே! ஆரிய மாய்கையில் வீழ்ந்து, ஆரியத்திற்கே அடிமையாகிவிட்ட நமது தலைவனென்ற திராவிடபூபதியின் துரோகத்திஞல், நாக்கறுபட்டு, நெஞ்சு பிளக்கப்பட்டு நஞ்சினும் கொடிய நயவஞ்சக சூழ்ச்சியிஞல் இந் நாற்சந்தியிலே கொண்டுவந்து நிறுத்திக் கற்களாலும் எறியப்பட்டுப் பிணமான, பெறற்கரிய புலவன் திராவிட மாபாடியின் பிணத்தின் மீது ஆணையிட்டுக் கூறுங்கள்:

"ஆரியனுக்கு உறுதுணையாக இருக்கும் திராவிடபூபதியை எதிர்த்து ஒழிப்போம்! திராவிடரின் வஞ்சக வைரியாகிய ஆரியரைத் திராவிடத்தை விட்டே துரததியடிப்போம்!! அதற்கிடையில் தூங்கவும் மாட்டோம்!!!"

என்று இவ்வாறே ஆணையிடுங்கள்! இதோ, திராவிடத்தைக் கணமும் மறந்தறியா நமது திராவிட மாபாடியின் பிணம்!!.........

[என்று கூறிப் புலவரின் பிரே தத்தைத் தன் தோளின் மீது தூக்கிப் போட்டுக்கொள்கிருன்]

மல்லன்:— புலவர் பிணத்தின் மீது ஆணை! அவர் புலம்பிய புலப்பத்தின் மீது ஆணை!! அவர் எழுதிய ஏட்டின் மீது ஆணை!!! "கூடு விட்டு ஆவி தான் போமளவும். திராவிடப் பெருங்குடி மக்களே! நாடு விட்டு ஆரியரைத் துரத்திவிடும் நற்பணியை மறவாதீர், மறவாதீர், மறவாதீர்" என்று முழக்கிய முழக்கத்தின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன்:

மல்லனும் மற்றெல்லோரும்:— 'ஆரியத்தை அழிப்போம்! அதன் ஆதரவாளரை எதிர்த்தொழிப்போம்!! ஆரியரை நம் நாட்டைவிட்டே துரத்திடுவோம்!!!

குன்றன்:— ஆரியம்......?

எல்லோரும்:— ஒழிக!

குன்றன்:— திராவிடம்........?

எல்லோரும் :— வாழ்க!

[என முழங்கிக்கொண்டே செல்கின்றனர்]

---

## காட்சி 31. [சாலை]

உறுப்பினர்:— பூமகள், பூங்கோதை, மல்லி, பூங்குன்றன் மல்லன்.

நிகழ்ச்சி:— [மாபாடியின் மரணச் செய்தி பூமகளை, திராவிட பூபதியை எதிர்த்தொழிக்கும் போர் வீரர்களுக்குத் தலைவியாக்கிவிடுகிறது]

பூமகள் கோதை மல்லி:— வெல்க திராவிடம்! வீழ்க ஆரியம்!!

[என முழங்கிக்கொண்டு தீவட்டிகளைக் கரங்களில் ஏந்திய வண்ணம் செல்கின்றனர்.]

குன்றன்:— [மாபாடியின் பிணத்தைத் தோளில் சுமந்து செல்கிறான்.]

மல்லன்:— [பூங்குன்றனுக்கு முன்னால் செல்கிறான்.]

மல்லி:— மல்லா! கொளுத்திவிட்டோம் ஆரியர் கூடாரங்களை!

கோதை:—அக்கயவரின் ஆடு மாடுகளையும் ஓட்டிக் கொண்டு வந்து விட்டோம்!!

பூமகள்:— தளபதி! புலவர் பெருமான்......?

குன்றன்:— பிணமாக்கப்பட்டு விட்டார்!

கோதை }
மல்லி } :— என்ன......?

பூமகள்:— நீ அங்கு போவதற்குப் பிந்திவிட்டாய்.....?

மல்லன்:—முந்தி இருந்தாலும் பயனில்லை!

கோதை }
மல்லி } :— ஏன்?

குன்றன்:— ஏற்கனவே நம் புலவவரின் நாக்கை அறுத்து நெஞ்சைப் பிளந்து சித்திரவதை செய்து குற்றுயிராக்கிய பிறகே, அவர் வாயைக் கட்டி நாற்சந்தியில் நிறுத்தி ஒன்றிரண்டு கற்கள் எறியப்படவும் சுருண்டு விழுந்து பிணமாகும்படி செய்திருக்கின்றனர்!

கோதை }
மல்லி } :— ஆ...ங்......?

பூமகள்:— யார்......?

மல்லன்:— வேறு யாரால் முடியும் ?

பூமகள்:— திராவிட பூபதியா?

குன்றன்:— ஆம்.

பூமகள்:— துரோகி! ஆரியத்துக்கு ஆணி வேராகி விட்டான்!! அவனை எதிர்த் தொழிக்கவேண்டியது என் முதல் கடமை!!!

குன்றன்:— தலைவி......?

பூமகள்:— மூடு வாயை! என் முடிவை யாராலும் தடுக்க முடியாது!! கொடு பிணத்தை!!!

[எனப் புலவர் பிணத்தைப் பறித்துத் தன் தோள் மீது சுமந்து கொண்டு]

இப்பிணம் ஒன்றே போதும்! அத்துரோகியைப் பிணமாக்கி, அவன் பிணத்தின் மீதே ஆரியர் அனைவரையும் பிணங்களாக்கிக் குவிப்பதற்கு.

நீங்கள் இப்போதே புறப்படுங்கள் போர் முனைக்கு. பூங்கோதை! திராவிட மாபாடியப் புலவர் பெருமானின் மீது ஆணை: நீயே உன் அப்பனெனும் திராவிடத் துரோகியைப் பிணமாக்கி, திராவிட வீராங்கனை எனும் பேர் பெறவேண்டும். தளபதி! திராவிடப் பெருங்குடி மறவர் முன் சென்று இப்பிணத்தைக் காட்டிப் போர்முரசு கொட்டி பெரும்படை திரட்டி உன் பின்னே அனுப்புவேன்! நீ முன்னேறு!! எங்கெங்கே எவனெவனை, ஆரியனெனக் காண்கிறுயோ, அங்கங்கே அவனவன் தலைகளை எல்லாம் வெட்டி வீழ்த்திக்கொண்டே முன்னேறிச் செல்!!! ஊம். செல்லுங்கள்--ஆரியரைக் கொல்லுங்கள்.........

கோதை:— நம் திராவிடத் தந்தையாகிய புலவர் பெருமான் பிணத்தின் மீது ஆணையாய்: திராவிடத் துரோகியாகிய என் அப்பனை நானே கொல்லுவேன்! அல்லது, அவனுல்க் கொல்லப்படுவேன்!! இரண்டில் ஒன்று ஏற்படுகிறவரையில் நான் ஏந்திய ஈட்டியைக் கீழே போடவேமாட்டேன்!!!

பூமகள்:— [பூரித்துப் பொங்கி எழுந்து செல்கிருள்]

குன்றன்.— ஊம். புறப்படுங்கள்............
போர் முனேக்குச்செல்வோம்!

மற்றவர்கள்:—ஆரியரைக் கொல்வோம்............

[என்று முழங்கிக்கொண்டே செல்கின்றனர்]

பூமகள்:— [பயங்கரமான போர் வெறிச் சிரிப்புச் சிரித்தவண்ணம் திரும்பிச்செல்கிருள்.]

——[x]——

**காட்சி 32-அ.** [மக்கள் மன்றம்]

உறுப்பினர்:—மீளிப்பாகன், திராவிடப் பெருங்குடி மக்கள்' மாமல்லன், திராவிடபூபதி, பூமகள்.

நிகழ்ச்சி:— [ஆரிய எதிர்ப்பு—ஆரிய ஆதரிப்பு எனப் பிளவுண்ட திராவிடத்தில் திராவிடர்களுக்கு உள்ளேயே ஒருவரை யொருவர் எதிர்த்துப் போர்முரசு கொட்டிக் கொள்கின்றனர்.]

திராவிடப் பெருங்குடி :— [மன்றம் நிறையக் குழுமி இருந்து, அமைச்சு, மீளிப்பாகன் ஆற்றும் பேருரையைக் கூர்ந்து கவனிக்கின்றனர் ]

மீளி:—......திராவிடப்பூபதி என்பவன் யார்? அவன் திராவிடனே என்ருலும், இன்றவன் நம் தலேவனுய் விளங்கவில்லே! விளங்குவதற்கு உரிமை உடையவனுயுமில்லே!!

இன்று, பூதேவர்கள் என்று தம்மைத் தாமே சொல்லிக் கொள்ளும் ஆரியரின் தலேவனுய்—பூதேவேந்திரனுயன்ருே திராவிடபூபதி விளங்குகிருன்...?

பூதேவர்—பிராமணர் என்றெல்லாம் தம்மைத் தாமே பறை சாற்றிக்கொள்ளும் அந்த ஆரியர் யார்? எங்கிருந்து இங்கு வந்தனர்? என்பனவெல்லாம் நாம் அறியாததல்ல:

மத்திய ஆசியாவிலிருந்து புறப்பட்டு, ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டு, வடமேற்குக் கணவாய்களின் வழியாய் நம் திராவிடத்திற்குள் புகுந்து, நம்மை அண்டிப் பிழைக்க வந்த அந்நாடோடிப் பொறுக்கித் தின்னிகளாகிய அதே ஆரியச் சோம்பேறிக் கும்பலே, இன்று தம்மைத் தாமே உயர்வாய் மதித்துக்கொண்டு பிராமணர் என்றும் பூதேவர் என்றும் பொய்க்கதை பேசுகின்றனர்.

அப்பொய்யரின் குருவாகிய பிரஹஸ்பதி என்போன் செய்த பற்பல விதமான சூழ்ச்சிகளாலும், கயவாளித் தன்மைகளாலும் கருத்திழந்த திராவிடபூபதி தன் பரம்பரைப் பண்பாட்டை மறந்து, அவ்வாரியக் கயவர்களின் வேதாகமப் பகட்டு வார்த்தைகளில் மயங்கிக் கிடக்கிறான்.

இத்தகைய இழிவெய்தி விட்ட திராவிடபூபதியைத் தம் தலைவனெனும் இந்திரனை ஏற்றுப் போற்றி செய்துகொண்டிருக்கும் நயவஞ்சகக் கயவராகிய ஆரியர், அவனைக் கொண்டே திராவிடராகிய நம்மிடையே சாதிக்க விரும்பும் சதித் திட்டங்களை எல்லாம் நிறைவேற்றிக்கொள்ள முனைந்து நிற்கின்றனர்.

திராவிடப் பெருங்குடி மக்களே! இப்போது நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? அம்முனை முகத்து எதிர்த்து நிற்கப் போகிறீர்களா? அல்லது, ஏமாந்து நிற்கப் போகிறீர்களா?

திராவிடப் பெருங்குடி :— ஏமாறமாட்டோம்! எதிர்த்தேநிற்போம்!!

## காட்சி 32-ஆ.

திராவிடப் பெருங்குடி } :—

[மன்றத் தலைவன் மாமல்லன் ஆற்றும் பேருரையைக் கவனிக்கின்றனர்.]

மாமல்லன்:— நம்மோடு ஒத்துழைத்து வாழ்வதற்காகவே நம் நாட்டில் வந்து குடி புகுந்து, நமது நண்பர்களாகவும் ஆகிவிட்ட ஆரியர்கள், நமது ஒப்பற்ற தலைவனுகிய திராவிடபூபதியையே தங்களுக்கும் தலைவனுக ஏற்றுப் போற்றிப் புகழ்ந்து வருகின்றனர்!

இத்தகைய அவர்களின் சிறந்த நோக்கத்திற்கு ஆரம்பத்தில் இடையூருய் இருந்த அவர்களின் சொந்தத் தலைவனேக்கூடத், தம் தலைவன் என்றும் பாராமல் கத்தியால் குத்திக் கொன்றுவிட்டு, நம் தலைவன் திராவிடபூபதியின் உயிரைக் காப்பாற்றியும் இருக்கிருர்கள்!!

இவற்றிற்கெல்லாம் நேர்மாருய்—நன்றிகெட்டதனமாய் பூங்கோதை எனும், நம் தலைவியின் மகள், ஊர்வஸி எனும் ஆரிய ஆடல் அணங்கைக் கொலை செய்துவிட்டு, நீதிநெறிக்குக்கூடக் கட்டுப்படாமல், தன் தாயாரின் உதவியால் தப்பி ஓடிக் காட்டில் ஒளிந்துகொள்ள விட்டிருக்கிறபடியால், நம் திராவிடர் பரம்பரைக்கே 'நீதிமன்றத்தில் ஓரம் நிகழவிட்ட' நீங்காப் பழி ஏற்பட்டிருக்கிறது!!!

அப்படி இருந்தும், ஆரியர்கள் அவற்றை எல்லாம் மறந்து, நமது திராவிடபூபதிக்குப் 'பூதேவேந்திரன்' என்று அவர்களுடைய வேதாகமப்படிப் புத்தப் புதுப் பட்டமுஞ் சூட்டி இன்னும் அதிகப் பெருமைப்படுத்துகிருர்கள் என்ருல், ஆரியர்க்குத் திராவிடர் மீதேற்பட்டிருக்கும் ஒற்றுமை உணர்ச்சிக்கும், அன்பிற்கும் ஓர் அளவுண்டோ? இப்பேர்ப்பட்ட ஆரியரின் தரும சாத்திர விதிமுறைகள் மீது நாம் கிஞ்சிற்றேனும் சந்தேகம் கொள்ளலாமா......?

திராவிடப் பெருங்குடி } :— கூடாது கூடாது! கூடவே கூடாது!!

## காட்சி 32-இ.

திராவிடப் பெருங்குடி }:— [அமைச்சு மீளிப்பாகன் ஆற்றும் போர் முழக்கம் கேட்கின்றனர்.]

மீளி:—......ஆரிய அக்கினிக் குண்டர்கள் நம் திராவிடத்தை மிதிப்பதற்கு முன்பு, நாம் எவ்வளவு உயர்ந்த நிலைமையில் செழிப்புற்றிருந்தோம்! இப்போது நம் நிலைமை எவ்வளவுக்குத் தாழ்த்தப்பட்டும் பழிக்கப்பட்டும் இருக்கின்றது பார்த்தீர்களா?

வளமார் நமது திராவிடத்தில் ஆரியர் வருவதற்கு முன், வறுமை வந்ததுண்டா? வற்றாத நம் தானியக் களஞ்சியங்களும் ஆடுமாடுகளும் அறவே அற்றுப் போகுமாறு தீயிலிட்டுக் கொளுத்தப்பட்டதுண்டா?

இவ்வளவும் யாகங்களின் பேரால் ஆரிய ஓம குண்டர்கள் செய்யும் ஒரு திட்டப் பூர்வமான அழிவு வேலைகளே அல்லாமல் வேறென்ன?

திராவிடரின் பொதுவுடைமை ஆக்கத்தை அழிக்கவும்—சமத்துவ ஊக்கத்தை ஒழிக்கவும்—உற்பத்தியைப் பெருக்கும் உழைப்பின் பலனை உறிஞ்சிக் கொழுக்கவும் எண்ணி, ஆரியப் பிரஹஸ்பதி தீட்டிய சதித் திட்டங்களே ஓம குண்டங்களாகவும், நான் மறைகளாகவும், நால்வகைச் சாதி பேதங்களாகவும், அவற்றை எல்லாம் ஆதரித்துப் பாதுகாக்கும் சர்வாதிகாரக் கொடுங்கோண்மை முடியாட்சியாகவும் தோன்றி இருக்கின்றன.

திராவிடபூபதி நம்முடைய சாதாரணத் தலைவனாய் இருக்கும்போது நம்மோடு சரிசமமாய் வாழ்ந்தான்! நம்மிடையே 'உயர்வும்—தாழ்வும்' இல்லாதிருந்தது!! திராவிடப் பெருங்குடி மக்கள் அனைவருமே பொதுவாக ஒரு குறையுமின்றி இன்புற்று இனிது வாழ்ந்தோம்!!!

இன்று அவ்வாரிய அக்கினிக் குண்டர்கள், திராவிடபூபதியைச் சாதாரணநிலைமையிலிருந்து உயர்த்தி 'பூதேவேந்திரன்' என்று போற்றிப் புகழ்ந்து கொண்டாடி வருவதாகக் கூறப்படுகிறது! இதனால், அத்திராவிடபூபதிக்கு மட்டுமேதான் இன்பத்திற்குக் குறைவில்லாமலும், பெருமையாகவும் இருக்கலாம்!! ஆனால், ஏனைய கோடானு கோடி திராவிடர்களின் கதி என்னவது?

**"இன்பத் திராவிடம் என்பதல்லோ எங்கள் நாடு—இதில் இருக்குந் திருவிடம் என்பதெல்லாம் எங்கள் வீடு......"**

என்று நமது புலவர் பெருமான் நாக்கறுக்கப்பட்டு நாற்சந்தியிலே கல்லாலடித்துக் கொல்லப்படுவதற்கு முன்பு புகழ்ந்து பாடிய நம் நாட்டிலே, இன்று நான் ஒரு வீட்டைப் பார்க்க நேர்ந்தது: 'அவ்வீட்டின் சுவர்களெல்லாம் பழுதுற்றுப் பாழடைந்துவிட்டன! தூண்களும் உளுத்துச் செல்லரிக்கப் பட்டுப் போயின!! அடுப்பங்கரையில் நிறைந்துள்ள புழுதியில் காளான்களே பூத்திருக்கின்றன!!!

அவற்றையெல்லாம்விடக் கேவலமாய் அவ்வீட்டுக்குரியவள் பலநாள் பசியால் வருந்தி வாடி வதங்கி உருக்குலைந்து மெலிந்து ஒடுங்கிய உடலினை உடையவளாய்க் குப்பை மேட்டிலே குறுகி வளர்ந்திருந்த கீரையைப் பறித்து வேக வைத்துக்கொண்டு அதில் போடும் உப்பிற்கும் தட்டுப்பாடு உடையவளாய் இருந்தாள்.

அவ்வுப்பில்லாக் கீரையைப் பகிர்ந்து உண்ண வந்த அவள் சுற்றமோ பெரிது! அதனினும் பெரிதல்லவோ அவள் தன்மானம்? அதனாலேயே, அவ்வாறான கீரை உணவு உண்பதை வேறு யாரேனும் பார்த்தால், இகழ்வாரே என்றெண்ணி வெட்கி வாயல் கதவடைக்க வந்த அவளைக் கண்ட என் கண்கள் இரண்டுமே புண்களாகிவிட்டன!!!

இத்தகைய கொடும் பஞ்சத்தை உண்டாக்கி இந்நாட்டு மக்கள் அனைவரையும் ஆரியத்திற்கு அடிமை

களாக்கிவிட முனைந்து நிற்கும் நயவஞ்சக ஆரிய அக்கினிக் குண்டர்கள், தன் தலைவனொருவனையும், ஆடல் அணங்கொருத்தியையும் பலியிட்டு இராஜ குரு பதவியை அடைந்து ஒரு திராவிடபூபதியை மட்டும் உயர்த்திவிட்டால் போதுமா?

ஒரு திராவிடன் ஒழுங்கீனமாய் இன்புறுவதற்காக வேண்டி, கோடான கோடித் திராவிடர்கள் துன்புற வேண்டுமா? ஒரு திராவிடன் முறைகேடான பெருமை அடைவதற்காக வேண்டி, கோடான கோடித் திராவிடர்கள் சிறுமை அடைய வேண்டுமா? ஒரு திராவிடன் சத்திரியன் ஆவதற்காக வேண்டிக் கோடான கோடித் திராவிடர்கள் சூத்திரர்கள் ஆக வேண்டுமா......?

திராவிடப் பெருங்குடி :— வேண்டாம், வேண்டாம், வேண்டவே வேண்டாம்......

மீளி:—வேண்டாமென்றால், ஆரியத்திற்கு எதிராய் வீரிட்டெழுந்து கொட்டுங்கள் போர்முரசை! திரட்டுங்கள், திராவிடபூபதியையும் எதிர்க்கும் பெரும்படையை!! விரட்டுங்கள் ஆரியரைத் திராவிட நாட்டை விட்டே ஓடி ஒழியும்படி!!!

திராவிடப் பெருங்குடி :— வீரமுரசு கொட்டுவோம்...ஆரியரை விரட்டுவோம்.........

——[x]——

## காட்சி 32-ஈ.

திராவிடப் பெருங்குடி :— [தலைவன் திராவிடபூபதி ஆற்றும் பயங்கர உரையைக் கேட்டுப் பயப்படுகின்றனர்.]

பூபதி......என்னை எதிர்க்க எவரால் முடியும்? நானென்ன முன்போல் வெறுந் தலைவனா? அல்லது, மனுநீதி மன்னன் மட்டுமா? மகாவிட்ணுவின் மற்றோர் தோற்றமல்லவா?

மகாவிட்ணுவென்றால் யார்? அவனே அறவாழி யந்தனன்! அவனாலேயே அண்ட சராசரங்களும் படைக்கப்பட்டுள்ளன!! அவனின்றேல், ஆகாயமு மில்லை, சூரியனுமில்லை, நிலாவுமில்லை, வெள்ளிகளு மில்லை, இந்த உலகமுமில்லை, இதிலுள்ள கடல், மலை, காடு, வனுந்தரமுமில்லை, நீங்களுமில்லை, நானுமில்லை, எந்த உயிர்களும்—பொருட்களுமே இல்லை!!!

இவ்வளவையும் படைத்த அந்த அறவாழியந் தனன் இவை யாவையும் யாக குண்டர்களாய்ச் செந் தன்மை பூண்டொழுகும் அந்தணருக்கேச் சொந்த மாய் ஈந்துவிட்டான்! எனவே, இது அந்தணராகிய பிராமணரின் உலகமேயாகும்!!

❋"'சகல பிராணிகளுக்கும் தலைவனாயும், வேத மாகிய களஞ்சியத்தின் காவலனாயும், பிராமணன் படைக்கப்பட்டிருப்பதால், இப்பூமியிலுள்ள ஒவ் வொரு பொருளுக்கும் பிராமணனே உரிமை உள்ள வனாவான். பிராமணன், பிச்சை எடுத்துண்பவ னாயினும், உண்பதும்—உடுப்பதும்—கொடுப்பதும் அவன் பொருளேயாகும்!!"

இத்தகைய பிராமணோத்தமனாகிய இராஜ குருவை கேவலம், ஒரு தமிழ்ப் புலவன் எதிர்த்துப் பேச லாமா? அப்படிப் பேசியதின் பலனே அவன் நாக்கு அறுக்கப்பட்டு, நெஞ்சு பிளக்கப்பட்டு, நாற்சந்தியிலே உங்கள் கண் முன்னாலேயே கற்களால் அடித்துக் கொல்லப்பட்டான். பிராமணர்களை எதிர்க்கும் திரா விடர்களுக்குக் கிடைக்கப்போகும் சித்திரவதைகளு க்கு இது ஓர் எடுத்துக்காட்டு,— எச்சரிக்கை யுங்கூட........!!!

---

❋"(1) ப்ராஹ்மணோ ஜாயமானோ ஹிப்ருதில்யாம் அபியாஜதே: ஈஸ்வர ஸர்வ பூதானும் ப்ரஹ்ம கோசஸ் யகுப்தயே. (2) ஸர்வ ஸ்வம் ப்ராஹ்மண ஸ்யேதம், யத்கிஞ் சிஜ்ஜகதீகதம்; ஸ்ரைஷ் டைனு பிஜனேனேதம் ஸர்வம் வைப் பிராஹ்மணோர்ஹதி. (3) ஸ்வமே ப்ராஹ்மணோ புங்க் தேஸ்வம் ததாதிச; ஆன்ரு மிம் ஸ்யாத் ப்ராஹ்மணஸ்ய புஞ்ஸதே ஹீத ரேஜனு."

ஆரியர் கட்டளைக்குக் கீழ்படியாத திராவிடர்களைக் கண்டு பிடித்துத் தண்டித்துப் பிரம்மதேவனின் வேதாகமப் பூதேவேந்திரத் திராவிடப் பூபதியாகிய என்னுடைய ராஜ நீத பரிப்பாலன வருணச்சார விதிப் படி அடிமைப்படுத்தியே தீருவேன்!

குகைகளிலும், வனாந்திரங்களிலும், பதுங்கிக் கிடக்கும் அப்பேதைப் பெண்களைக் கீறிப் பிளந்து அரிந்து சித்திரவதை செய்வேன்!! அவ்வனாந்தரங்களிலிருந்து அவர்கள் மீளாமல் அங்கேயே கிடந்து மாளட்டும். இன்றேல், என்னுடைய பயங்கரமான பலத்தால் அவர்களையும் அடக்கி ஒடுக்கி ஆரியர்களுக்கே அடிமைப்படுத்தி விடுவேன்!!!

இருண்ட காடுகளில் மறைந்து கிடக்கும் அவர்களுக்கு நீங்கள் ஒரு உதவியும் செய்யக்கூடாது. மீறி செய்வீர்களேயானால், இந்திரனாகிய எனக்கு மகா விட்டுணுவினால் ஓம குண்டத்தின் மூலம் உதவப்பட்டுள்ள ஒரு பிரம்மாண்டமான வலை இருக்கிறது! அது மாபெரும் வலிமையுடையது!! ஆயிரக் கணக்கானவர்களைச் சிக்கவைக்கும் ஆற்றலுடையது, ஒன்று, பத்து, நூறு ஆயிரமாய்ப் பெருகும் சக்தியும் உடையது!!!

அத்தகைய வலைக்குள் உங்களைச் சிக்கவைத்து நூற்றுக் கணக்காய், ஆயிரக் கணக்காய், இலட்சக் கணக்காய்க் கொன்று குவித்துவிடுவேன்! எச்சரிக்கையாய் நடந்து தப்பிப் பிழைத்துக் கொள்ளுங்கள்!!

திராவிடப் பெருங்குடி }:— [அச்சமுற்று அசைவற்று இருக்கின்றனர்]

——[x]——

## காட்சி —32உ.

திராவிடப் பெருங்குடி }:— [சிலர் கரங்களில் கத்திகளும், வாள்களும், ஈட்டிகளும், வில்களும், வேல்களும் ஏந்திக்கொண்டு தலைவி பூமகளைச் சூழ்ந்து பாதுகாத்து நிற்கின்றனர், பலர் அவள் ஆற்றும் வீர உரை கேட்டு உள்ளக் கிளர்ச்சி உறுகின்றனர்.]

பூமகள்:— [மா பாடியின் பிரேதத்தைத் தன் தோளில் சுமந்தவண்ணமே எரிமலை போல் குமுறுகிருள்.]

............திராவிடரே.........! திராவிடத்தில் திராவிடப் புலவர் பெருமான் வாழ ஏன் இடமில்லை? ஆரியப் பிரகஸ்பதி மட்டும் வாழ்கிருனே இன்னும்? இதோ தொங்குகிறதே திராவிட மாபாடியின் பிணம் என் தோளில்? இந்நிலை எப்படி ஏற்பட்டது இங்கு?

ஆரியப் பிரகஸ்பதி செய்த அருமைதானென்ன? திராவிடமாபாடி செய்துவிட்ட தீமைதானென்ன? தெரிய வேண்டாமா நமக்கு?

நால்வகைச் சாதிப் பேதங்கள் கூறும் வருணச்சார தருமம் வேண்டுமென்ருனே, ஆரியப் பிரகஸ்பதி... அவன் இன்னுந்தானே உயிரோடு வாழ்கிருன் இங்கு?

ஒன்றே குலமென்று கூறும் சமதருமந்தான் வேண்டுமென்ருனே நமது புலவர் பெருமான் இதோ, செத்த பிணமாகத் தொங்குகிருனே என் தோளில்!

அந் நால்வகைச் சாதியிலும் ஆரியனே யாவர்க்கும் மேலான உயர்ந்த சாதி என்ருன் ஆரியப்பிரகஸ்பதி, அவனையும் ஐம்பெருங் குழுவில் சேர்த்து இராஜகுரு எனக் கனமாக்கி இருக்கிருனே திராவிட பூபதி!!

அட, ஆடு மாடு மேய்க்கவந்த அநாகரிக ஆரியனே! உழவுத் தொழிலாலேயே உலக மக்களின் பொது வாழ்வு உயர்வடைய வேண்டி இருப்பதால், உழவர்களாகிய திராவிட பெருங்குடி மக்களையே உயர்வாகக் கருதிக் கண்ணியமாய் நடத்த வேண்டும் என்றான் நமது புலவர் பெருமான் திராவிட மாபாடி! இவனைத்தானே நாற்சந்தியிலே நிறுத்திப் பிணமாக்கி இருக்கிறான் திராவிடபூபதி!!!

திராவிட பெருங்குடி மக்களெல்லாம் நாயினும் இழிந்த நாலாஞ் சாதியாய் நலியவேண்டும் என்றான் நயவஞ்சகச் சாதித் திமிர் வாதத் தருமச் சாத்திரம் எழுதி வைத்திருக்கும் ஆரியப் பிரகஸ்பதி--அவனையன்றோ அறவாழியந்தனன் அருள் பெற்றுச் செந்தன்மை பூண்டொழுகும் பூதேவன் என்று போற்றுகிறான் நம்மினத் துரோகி திராவிடபூபதி?

உலகை உய்விக்கும் உழவுத் தொழில் புரியும் உழவர்களாகிய திராவிட பெருங்குடி மக்கள் தாழ்த்தப்பட்டால், உலகமே முன்னேற்றம் அற்றுப் பிற்போக்கில் மூழ்கிமடமையில் ஆழ்ந்துவிடும் என்றான் பரந்த பொருளெல்லாம் பாரறிய பகுத்தறிந்து வைத்திருக்கும் சிறந்த நம் புலவர் பெருமான் திராவிடமாபாடி— இவனையன்றோ நாக்கறுத்து, நெஞ்சு பிளந்து, நாற்சந்தியில் நிறுத்திக் கற்களால் அடித்துப் பிணமாக்கிய பின்னும் தூற்றுகிறான், தூற்றுகிறான், தூற்றிக்கொண்டே இருக்கிறான் தூர்த்தனாகிய திராவிடபூபதி......!

அறவாழியந்தனன் என்போன் அகில உலகத்தையும் படைத்து அப்படியே தூக்கி ஆரிய அந்தணனிடம் கொடுத்துவிட்டான் என்று உளறுகிறான் உளுத்துப்போன திராவிடபூபதி!!

யாரந்த அறவாழியந்தனனென்றால், மகாவிட்ணு என்கிறான்! அண்ட சராசரங்களையும் படைத்ததாய்க் கூறப்படும் அந்த மகாவிட்ணுவைப் படைத்து நமக்கு அறிமுகப்படுத்த முனைபவன் யார்?

ஆரியன் வருவதற்கு முன்பு நாம் கேள்விப்பட்டதாவது உண்டா; அறவாழியந்தன னென்ருல், மகாவிட்ணு என்று? ஆடுமாடுகளை மேய்த்துக்கொண்டும் ஆங்காங்கு கிடைப்பவற்றைப் பொறுக்கித் தின்றுகொண்டும் திரிந்தலைந்த ஆரிய நாடோடிக் கும்பல் கூறுகிறது; மகாவிட்ணு என்று ஒருவன் இருக்கிருன்! அவனுடையதுதான் இந்த உலகம்!! நாங்களோ அவனுடைய அம்சம்!!! ஆதலால், இத்திராவிடமும் இதிலுள்ள ஒவ்வொரு பொருளும் எங்களுக்குத்தான் சொந்தம் என்று.

இவற்றை நம்புகிறீர்களா? திராவிட பெருங்குடி மக்களே! மறவர்களே!! உழவர்களே!!! உங்கள் உடல் உழைப்பால் உருவான திராவிடத்தை உருக்குலைத்துவிட்டு! உங்கள் வேர்வையால் விளைந்த தானியக் களஞ்சியங்களைத் தீயிட்டுக் கொளுத்திவிட்டு!! உங்கள் ஆற்றலால் அடைந்த அரும்பெரும் செல்வங்களாகிய ஆடுமாடுகளை எல்லாம் துண்டந் துண்டமாக வெட்டி ஓம குண்டத்திலே போட்டு எரித்துச் சாம்பலாக்கிவிட்டுச் சொல்கிருன், சொந்தக்காரன் நான் என்று, ஆரியன்!!!

என்ன துணிச்சல் அவனுக்கு.........? எவ்வளவு கோழைத்தனம், இவற்றைச் சகித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கு......?

திராவிடப் பெருங்குடி } :— இல்லை. நாங்களல்ல கோழைகள்! நாங்கள் வீரக்காளைகள்...!! இதோ புறப்படுகிருேம் போர்க் களம்!!! வாழ்கப் பூமகள்—வீழ்கத் திராவிட பூபதி.

[எனப் பேரிடி போல் முழங்குகின்றனர்.]

—:O:—

## காட்சி 33. [சாலே]

உறுப்பினர்:—உபஹாதா, ஹோதா, ப்ரஸ்தோதா, ப்ரதிஹர்த்தா, இரம்பா, திலோர்த்தமா, மேனஹா, அக்னீத்ரா, ப்ரஹஸ்பதி. பூங்குன்றன். பூங்கோதை, மல்லன், மல்லி, திராவிட மறவர்.

நிகழ்ச்சி:— [திராவிட மறவர்கள் கிளர்த்தெழுந்து ஆரியர்களை எங்கு கண்டாலும் வெட்டி வீழ்த்து வதை எண்ணிக் கதிகலங்குகிறன் ப்ரஹஸ்பதி.]

திராவிட மறவர் குரல் & :— ஆரியரைக் கொல்லுங்கள்! ஆரியத்தை வெல்லுங்கள்!! விடாதே ஆரியனே!!! விரட்டு விரட்டு—வெட்டு, குத்து, கொல்லு-கொல்லு விடாதே-விடாதே.........

ஆரியர்கள் குரல் :— ஆ......ஆய்.........மஹாவிஷ்ணூ........! மஹேஸ்வரா......!! ஹய்யய்யோ... இந்த்ரா இந்த்ரா... ரெக்ஷக்ஷீ—ரெக்ஷக்ஷீ... ஆ......ய்......

[என அலறி தலைதெறிக்க ஓடுகின்றனர்.]

திராவிட மறவர் குரல் :— விடாதே......? விரட்டு — வெட்டு — குத்து கொல்லு—கொல்லு விடாதே- விடாதே

[என ஆரியரைத் துரத்தித் துரத்தி வெட்டி வீழ்த்துகின்றனர்.]

உபஹாதா ஹோதா — ஹய்யய்யோ.........! இந்த்ரா.........இந்த்ரா ரெக்ஷக்ஷி ரெக்ஷக்ஷீ... இந்த்ரா.........ரெக்ஷக்ஷீ......

[என அலறித் துடித்து ஓடித் தப்பித்துக் கொள்கின்றனர்.]

மல்லன்
மல்லி } :—விடாதே......! விரட்டு விரட்டு—வெட்டு குத்து—கொல்லு—கொல்லு விடாதே, விடாதே விரட்டு

[என முழங்கிச்சிதைத்துத் துரத்தி விடுகின்றனர்.]

ப்ரஹஸ்
அக்னீத் } :— ஹேய் மஹாவிஷ்ணூ...........! மஹேஸ்வரா ஹய்யே?......ஹய்யய்யோ.........!!!

[எனத் தீவட்டிகளை ஏந்திக் கொண்டு விரண்டோடி வந்து மூச்சுத் திணரிச் சற்றுகளைப் பாற நிணக்கின்றனர்.]

உபஹாதா
ஹோதா } :—ஹே...ய்...குருதேவ்... ஹ்ஹ்ஹ்ஹ்ஹூம்..

[என அலறி எழுந்து ப்ரஹஸ்பதியின் காவில் விழுந்து கதறியழுகின்றனர்.]

ப்ரஹஸ்பதி
அக்னீத்ரன் } :—ஹா...ங்......?

[என முதலில் பயந்து ஓட முயன்று—பிறகு விவரமறிந்து சுதாரித்து நிற்கின்றனர்.]

ப்ரஹஸ்:—ஹேய், ஞானஸ்வரூபியான அக்னீத்ரனே! உன் ஜ்வாலைக் கரங்களால் திராவிட தஸ்யூக்களை பஸ்பீஹரிப்பாயாக!!

அக்னீ:—ததாஸ்த்து......!

ப்ரஹஸ்:—பிரதி தினமும் பெருகிவரும் அத்திராவிட ராக்ஷக்ஷஷக் கோஷ்டம் நஷியட்டும்! ஸ்திரீகளும், சிஸுக்களும் சாகட்டும்!! அத்தஸ்யூக்களின் ஸந்ததிகளைப் பூமாதேவி பிளந்து ஸ்வாஹாப் பண்ணட்டும்!!!

அக்னீத்ரன்
உபஹாதா
ஹோதா } :—ததாஸ்து......!!

ப்ரஹஸ்:—ஹேய், மஹாவிஷ்ணு! கஹன மண்டலத்திலிருந்து லக்ஷ்கோப லக்ஷக்ஷம் அக்னியாஸ்திரங்களை வர்ஷித்து, ப்ராஹ்மணத் துவேஷிகளான திராவிட தஸ்யூக்களை பஸ்பீஹரிப்பாயாக........

அக்னீத்
உபஹாதா } :—ததாஸ்தூ........!!!
ஹோதா

ப்ரஹஸ்:—ஹேய், திராவிட தஸ்யூக்களையும், ராக்ஷக்ஷஷர்களையும் நிக்ரஹம் செய்ய வந்த அக்னீத்ரனே! உன் புஜபல பராக்ரமத்தைப் பார்த்து நாங்கள் சந்தோஷிக்கும்படி திவ்ய திருஷ்டி உடைய உன் ஜ்வாலைக் கரங்களை விஸ்தரித்து, பலாட்டியனுன பூதேவேந்திரத் திராவிடபூபதியின் உதவியால் நீ யுத்தத்தில் ஜெயித்து, அபஜெயமடைந்த திராவிட தஸ்யூக்களைச் சூத்திரர்களாக்கி ப்ராஹ்மண உத்தமர்களாகிய எங்கள் பாதங்களில் அப்பாவிகள் ஸதா காலமும் பாப ஸங்கிர்த்தனம் செய்துகொண்டு கிடக்கச் செய்வாயாக.

அக்னீ:— ததாஸ்து!

உபஹார்தா
ஹோதா } :—ஜெய்...ஜெய விஜயீ......பவா......!!!
ப்ரஹஸ்பதி

[என முழங்கி எழுந்து ஓடுகின்றனர்.]

---

## காட்சி 34. [போர்க்களம்]

உறுப்பினர்:—திராவிடபூபதி, திலோர்த்தமை, இரம்பை, மேனகை, மாமல்லன், ப்ரஹஸ்பதி, அக்னீத்ரன், உபஹாதா, ஹோதா, ஆரியர் சார்புப் படை, மீளிப்பாகன், பூங்குன்றன், பூங்கோதை, மல்லன், மல்லி, திராவிட மறவர்கள்.

நிகழ்ச்சி:— [திராவிடர்—ஆரியர் போரின் இறுதியில், திராவிட மறவர் யாவு

ரும் தன் மகள் பூங்கோதையோடு மடிந்து கிடக்கக் கண்டு கண் கலங்கிய திராவிடபூபதியின் மனம், மாற்றம் அடைவதை உணர்ந்த பிரஹஸ்பதி, உடனே திராவிடபூபதியையும் எரியுங் கூடாரத்திற்குள்ளே தள்ளி விட்டு ஓடுகிருன்.]

பூபதி:— [ஆரியப் பாசறைக்குள் சிக்கி ஆரிய மாய்கையில் மூழ்கிக் கிடக்கிருன்.]

திலோர்த்
இரம்பை
மேனகை } :— [திராவிடபூபதிக்குச் சோம லாகிரியும், காம லாகிரியும் புகட்டி, வெறியூட்டிக்கொண்டே கீழ்க் கண்ட ஸ்லோகங்களை ஏற்ற இசையில் பாடி ஆடுகின்றனர்.]

❋ பீத்வா பீத்வா புன: பீத்வா யாவதபததி பூதலே;
உத்தாயச புன: பீத்வா புனர் ஜன்ம நவித்யதே — (பீத்)

● ஊர்த்வ மேனமுச் ச்ரயதாத் கிரௌபாரம் ஹரன்னிவ;
அதாஸ்ய மத்ய மேஜது கீதே வாதே புனன்னிவ— (பீத்)

○ யத்ஹரிணோ யவமத்தி நபுஷ்டம் பகுமன்யதே;
சூத்ரோ யதர்யாயை ஜாரோ நபோஷ மனுமன்யதே

* வதீர்ஹி தஸ்யும் தனினம் கனேன் இந்திர— (பீத்)

---

❋ மதுவைக் குடித்துக் குடித்து மெய்மறந்து தரையில் விழுமளவும் குடிக்க வேண்டும்; தெளிந்த பின் எழுந்து மறுபடியும் குடிக்க வேண்டும். அப்படிச் செய்தால், அவனுக்கு மறுபடி பிறவி இல்லை.

● மலைக்குமேல் சுமையை ஏற்றுவதுபோலவும், குளிர்ந்த காற்று வீசும்போது தானியத்தின் பதர் தூற்றுவது போலவும் இவனை உயரத் தூக்கிப் பிடியுங்கள்; இவனுடைய இடை அகலமாக ஆகட்டும்.

○ பயிரை மேயும் மானைப் பார்த்து பயிர்ச் சொந்தக்காரன் மான் சுகத்தை அடையுமே என்று எண்ணுமல், இம்மான் பயிரைத் தின்று விட்டதே என்று வருத்தப்படுவதைப்

ப்ரஹஸ், அக்னீத், உபஹாதா, ஹோதா } :—இந்த்ரா......! அபயம்.........!! இரக்ஷக்ஷி......!!!

[என அலறிக்கொண்டு ஓடி வருகின்றனர்.]

பூபதி:—ராஜகுரு......! என்ன நேர்ந்தது.........?

[எனக் கேட்டுக் கொண்டே வெளியே வருகிறான்.]

ப்ரஹஸ்:—ஹேய், ஸோமபானப் பிரிய பூதேவேந்த்ரா! நீ, தன்னந் தனியனாகவே உன் வஜ்ஜிராயுதத்தினால், லெக்ஷ்க்ஷோப லக்ஷக்ஷம் க்ஷத்திரர்களைத் துவம்ஸம் செய்யும் ஸக்தி உடையவன்!! மஹா மஹா பலாட்டியன்!!!

அதிதிகளின் ஸாபத்தை ஸம்பாதித்துச் சாம்பலாகப் போகும் பாபிகளே, ப்ராஹ்மணர்களைப் பஹிஸ்கரிக்கின்றனர்! ராஜத் துவேஷிகளே, வருணாச்சார தர்ம ஸாஸ்திரத்தைப் பரிஹஷிக்கின்றனர்!! விஸ்வாஸ காதஹர்களே, பஹிரங்கமாய் துஷ்டர்களாகி, நிஷ்ட்டூரமான யுத்த கோஷ்டம் கோஷிக்கின்றனர்!!!

திராவிட மறவர் } :—ஆரியரைக் கொல்லுங்கள்! ஆரியத்தை வெல்லுங்கள்!! விடாதே......விரட்டு—விரட்டு...... வெட்டு...வெட்டு...குத்து...கொல்லு—கொல்லு... விடாதே.........

[என முழங்கிக் கொண்டு ஓடி வந்து திராவிடபூபதியின் எதிரில் அணி அணியாய் நிற்கின்றனர்.]

ப்ரஹஸ் உபஹாதா ஹோதா } :—ஹா...ங்...? ஹய்யய்யோ...இந்த்ரா...!

---

போல், சூத்ரர்களால் புணர்ச்சி செய்யப்பட்ட தன் மனைவியைப் பார்த்து ஆரியன் துன்புறுகிறான்.

* இந்திரா! நீ ஒருவனாகவே, வச்சிராயுதத்தினால், தஸ்யு (திராவிட)க் கூட்டத்தைக் கொன்று எங்கள் துன்பத்தை ஒழித்தாயே!

பூபதி:—ஊ...ம்......? தளபதி...!

அக்னீத் } :—பூதேவேந்த்ரா......!
குன்றன் }  தலைவா......!

[என இருவரும் முன் வந்து நிற்கின்றனர்.]

பூபதி:— [இருவரையும் ஒருமுறை ஏற இறங்கப் பார்த்துவிட்டுப் பூங்குன்றனை நோக்கி]

நீ இன்னும் உயிரோடுதான் இருக்கிறாயா?

குன்றன்:—ஆம். உனக்கு நேரப்போகும் துர்வாய்ப்பினாலேயேதான், நான் இன்னும் உயிரோடு இருக்கிறேன்!

பூபதி:—உனக்கு உன் உயிரின் மீது ஆசை இல்லை......?

குன்றன்:—இதோ என் உயிர்.........

[எனப் பூங்கோதையை இழுத்து அவன் முன் நிறுத்துகிறான்]

பூபதி:—என் மகள்—இல்லை; கொலைகாரி!

குன்றன்:—இல்லை! உன் உயிருக்கே உலைகாரி!!

கோதை:—ஆம். தன்னினத் துரோகி, திராவிடருக்குத் தலைவனாகவோ—எனக்குத் தகப்பனாகவோ வாழத் தகுதியற்றவன்.........

[என ஈட்டியால் குத்துகிறாள்.]

அக்னீத்:— [பிரஹஸ்பதியால் தக்க சமயத்தில் தூண்டப்பட்டுத் திராவிட பூபதியின் உயிரைக் காப்பாற்றி விட்டுப் பூங்கோதையை எதிர்த்துத் தாக்குகிறான்]

குன்றன்:— [அக்னீத்ரன் தாக்குதலை எதிர்க்கும் பொறுப்பைத் தான் ஏற்றுக் கொண்டு அவனோடு கடுமையாகப் போராடுகிறான்.]

பூபதி:— [உடனேபோர்ப்பறை முழக்கும் சங்கை ஊதுகிறான்]

மாமல்லன்:— [ஆரியர் சார்புப் படையோடு தோன்றித் திராவிட மறவர்களை எதிர்த்துப் போர் புரியச் செய்து விட்டு, திராவிட பூபதியையே மீண்டுங் குத்திக்கொல்ல முனைந்த பூங்கோதையை எதிர்த்துப் போர் புரிகிருன்.]

திராவிட மறவர்
ஆ. சார்புப் படை } :— [ஒருவரை யொருவர் கடுமை யாக எதிர்த்துக் கோரப் போர் புரிகின்றனர்.]

மல்லன்
மல்லி } : — [மிகமிகத் தீரமாகவும் நுணுக்க மாகவும் போர்புரிந்து ஏராள மான எதிரிகளை மிக எளிதாய்க் கொன்று குவித்துக் கொண்டிருக் கின்றனர்]

கோதை
மாமல்லன் } : — [ஒருவரையொருவர் எதிர்த்துக் கடும் போர் புரிகின்றனர்]

மாமல்லன்:— நீ ஒரு கொலைகாரி! தண்டனைக்குத் தப்பி ஓடியவள்!! உனக்குரிய தண்டனையைப் பெறவே மீண்டும் நீ என்னிடம் வந்திருக்கிருய்!!!

கோதை:— கோழை! நீ ஏன் என்னை எதிர்த்து, நான் என் அப்பனெனும் இனத் துரோகியைக் கொல்லவேண் டிய நேரத்தை வீணுக்குகிருய்? ஊம். இதோ... இதோ ...இதோ...ஒழி......

[என மூன்று இடங்களில் குத்திக் கொன்று மாமல்லனை வென்று விட்டுத் திராவிட பூபதியைத் தேடித் தாக்கச் செல்கிருள்]

பூபதி:— [மாமல்லனேடு போராடி அவ னைக் கொன்றுவிட்டு மாபெரும் வீராங்கனைபோல் ஏறு நடை நடந்து வரும் தன் மகள் பூங் கோதையின் வீரத்தைக் கண்டு உள்ளத்தின் உள்ளே களிப்

பெய்து தன்னையே மறந்து இலயித்து நிற்கிறான்]

ப்ரஹஸ்:— [சற்று தூரத்தில் ஒளிந்திருந்து பார்த்து நிலைமையை யூகித்து உணர்த்து, உடனே பூங்கோதை யின் முதுகில் பாயுமாறு அம்பெய்துவிட்டுக் 'கல கல'வென்று வெற்றிச் சிரிப்புச் சிரித்துக் கொண்டே திராவிட பூபதியிடம் வருகிறான்.]

கோதை:— ஆ..........அம்மா......

[எனச் சாய்கிறாள்]

பூபதி:— ஆங்...? மகளே......!

[எனத் தன்னை மீறிய உணர்ச்சி யினால், அலறிக்கொண்டு ஓடு கிறான் அவளிடம்]

குன்றன்:— பூங்கோதை!

[எனக் கதறித் தன் போர் நிலையையும் மறந்து உடனே திரும்பிப் பூங்கோதையைத் தரையில் விழாமல் தன் கரங்களில் தாங்கிப் பிடிக்கிறான்]

அக்னீத்:— [எதிர்ப்பற்றிருந்த அச்சிறு விநாடிப்போதில் கோழைத்தனமாய்ப் பூங்குன்றன் முதுகில் ஈட்டியால் குத்துகிறான்]

குன்றன்:— ஆ......ய்...பூ...ங்...கோதை........

[என அவள் மீதே தன் தலையைப் போட்டு அவளை ஆலிங்கணம் செய்த வண்ணமே உயிர் விடு கிறான்]

கோதை:— த்தூ! [எனத் தன் தகப்பனாகிய திரா விடபூபதியின் முகத்தில் காறி

உமிழ்ந்து விட்டு உயிர் விடுகிருள்]

மல்லி:— ஆ......ங்......?

[என ஏங்கிய வண்ணம் அந்த இடத்தை விட்டு ஓடுகிருள்]

உபஹாதா
ஹோதா } :— க்ஷத்ரச்ரேஷ்ட க்ஷணுதிபதிகள் ஸ்வாஹா!

அக்னீத்:— ஜேய்...!! ஜெய......விஜயீ...பவா...!!!

[எனக் கூச்சலிடுகிருன்.]

திராவிட மறவர்:— [பெரும்பாலோர் மடிந்துவிட்டனர். சிலர் காட்டை நோக்கித் துரத்தப்படுகின்றனர். சிற்சிலரோ சரணடைகின்றனர்.]

மல்லன்:— [எதிர் பாராத விதமாய்ப் போர் முடிவானது கண்டு மனங் கலங்குகிருன். கையில் கிடைத்த ஒரு கொள்ளிக் கட்டையைச் தூக்கி ஆரியர் பாசறைக் கூடாரத்தின் மீது எறிந்துவிட்டு ஓகிருன்.]

பூபதி:— [தன் முகத்தில் உமிழப்பட்டுள்ள எச்சிலே ஒரு கரத்தால் துடைத்துக்கொண்டே மற்ருேர் கரத்தால் தன் மகளின் பிரேதத்தைத் தூக்கிப் பார்க்கிருன்! அவனுடைய கண்கள் போர்க்கள மெங்கும் பரந்து குவிந்துகிடக்கும் திராவிட மறவர்களின் பிரேதங்களைக் கூர்ந்து கவனிக்கின்றன]

அக்னீத்:— ஹேய், குருதேவ்! இதோ! இச்க்ஷத்திரர்கள் நம்மைச் சரணுகதி அடைந்து, தம்மைச் க்ஷமிக்கப் பிரார்த்திக்கின்றனர்!

ப்ரஹஸ்:— க்ஷிரேஷ்ட க்ஷேணுதிபதியே ! அச்க்ஷத்திரர்களைக் கொண்டுபோய்க் காராக்கிரஹத்தில் அடை!

அக்னீத்:— ஆக்ஞை குருதேவ்......! — ஊ...ம்.

[என அதட்டி அழைத்துச் செல்கிருன்]

உபஹாரதா } : —
ஹோரதா }

[திராவிடபூபதிக்கு அருகில் போய் அவனை ஒருமுறை உற்று பார்த்துவிட்டுப் பிறகு, பூங்கோதை — பூங்குன்றன் முதுகுகளில் குத்தப்பட்டுள்ள ஆயுதங்களை' ஆளுக்கொன்ருய்க் கையில் எடுத்துக்கொண்டு]

பேடிகள்

பூபதி:— யார்...?

உபஹாரதா:— யுத்தத்தில் முதுகில் காயம்பட்ட......

ஹோரதா:— இவர்களே......

பூபதி:— இவர்களா.......? இவர்களா பேடிகள்?-இவர்களா கோழைகள்? — ஒளிந்து மறைந்திருந்து ஒரு பெண்ணின் முதுகில் அம்பெய்து கொன்ற உங்கள் பிரஹஸ்பதி ஒரு வீரன்? உயிர் பதைக்கும் காதலியின் குரல் கேட்டுத் திரும்பியவன் முதுகில் கட்டாரியால் குத்திக் கொன்ற உங்கள் அகினீத்ரன் மற்ருெரு மாவீரன்?? ஆனுல், இதுவரையில் போர்க்களத்திலே புறமுதுகு காட்டி ஒரு எட்டும் எடுத்து வைக்காமல் எதிரிகளை விரட்டு விரட்டென விரட்டி—வெட்டு வெட்டென வெட்டிக் குவித்துவிட்டு வீரமரணம் உற்றிருக்கும் இவர்கள்...........பேடிகள் ???

இப்படி என் எதிரிலேயே சொல்ல என்ன துணிச்சலடா உங்களுக்கு......?

[என உபஹாரதாவின் கன்னத்தில் புறங்கையால் ஓங்கி ஒரு அறை விட்டுக் கீழே விழுத்தாட்டுகிருன்]

ஹோரதா:— ஹாங்? ஹய்யோ

[என அரண்டு ஓடும்போது, எதிரில் எரியும் கூடாரத்துள் வீழ்ந்துவிடுகிருன்]

பூபதி:— [ஆத்திரமிகுதியினுல், அவ்வாரியயனைக் கொல்லத் துரத்திக் கொண்டோடுகிருன்]

ப்ரஹஸ்:—ஹேய், பூதேவேந்த்ரா...!

[எனக் கூவிக்கொண்டே பின்னால் ஓடித் திராவிடபூபதியையும் அந்த எரியுங் கூடாரத்துள் தந்திரமாய்த் தள்ளிவிட்டுத் தப்பி ஓடுகிருன்]

பூபதி:— [பிரஹஸ்பதியினுல், எரியுங் கூடாரத்துள்ளே தள்ளப்பட்டதினுல் உடல் முழுதும் வெந்துபோன நெருப்புக் காயங்களோடு வீரிட்டலறி எழுந்து வெளியே வந்து விழுகிருன்]

——:():——

## காட்சி 35. [காட்டுப்பாதை]

உறுப்பினர்:—பூமகள், மல்லி, மல்லன், (பிரஹஸ்பதியின் குரலும்—திராவிட தஸ்யூவின் குரலும்), ப்ரதிஹர்த்தா, ப்ரஸ்தோதா.

நிகழ்ச்சி:— [போரின் முடிவறிந்து திடுக்கிட்டுப் பொருமுகிருள் பூமகள். பிறகு, "திராவிட மாபாடியம்" எனும் சிறந்த காவியச் சுவடியை மல்லன் மல்லி இருவரிடமும் ஒப்படைத்து, அதை விந்தியமலைக்கு அப்பால் கொண்டுபோய்ச் சேர்க்கும் பொறுப்பை உணர்த்தி அவர்களை அனுப்பிவிட்டு அவள் மட்டும் தனித்து நின்று ஆரியரை வேட்டையாடுகிருள்.]

பூமகள்:— [மனம் ஒரு நிலை இல்லாததால், இருக்கை கொள்ளாது இங்கு மங்குமாய் அலக்கழிந்து கொண்டிருக்கிருள்.]

மல்லி:—அம்மா......!

[என அலறியோடி வருகிருள்.]

பூமகள்:—மல்லி! என்ன......?

மல்லி:—மாண்டு விட்டாள் பூங்கோதை......

பூமகள்:—ஆ...ங்...?—பூங்...குன்...றன்......?

மல்லி:—பூங்கோதைக்காக மாண்டான்!

பூமகள்:—என்ன...! போர்க்களத்திலுமா காதல் விளையாட்டு?

மல்லி:—ஆமாம். அவள் குரல் கேட்டு அவன் திரும்பி இருக்காவிட்டால், அடுத்த விநாடியில் அக்னீத்ரன் தலையையும் உருட்டி இருப்பான் தரையில்!

பூமகள்:—அறிவு கெட்டவனிடம் ஆற்றல் இருந்து என்ன பயன்?

மல்லன்:—அம்மா......!

[என ஓடி வருகிறான்.]

பூமகள்:—ஊ...ம்?

மல்லன்:—திராவிடபூபதி......

பூமகள்:—தீர்ந்தானா?

மல்லன்:— [ஆமாம் என்பது போல்த் தலையைத் தொங்கப் போடுகிறான்.]

பூமகள்:—என் பூங்கோதையின் இரையைப் புசித்தவன் யார்?

மல்லன்:—பூங்கோதை மீது அம்பெய்து கொன்ற பிரஹஸ்பதியேதானம்மா!

பூமகள்:—என்ன சொல்கிறாய்...? 'பிரஹஸ்பதி, திராவிட பூபதியைக் கொன்றுவிட்டான்?'—எப்படி?

மல்லன்:—தீயில் தள்ளி.

பூமகள்:—தீயில் தள்ளியா.....?

[எனப் பயங்கரமாய்ச் சிரித்துவிட்டு]

திராவிடத்தைத் தீய்க்க வந்த யாக குண்டத் தீயை ஆதரித்து ஆர்ப்பரித்தானே அத்திராவிட பூபதி, அவனையும் அத்தீயிலிட்டே கொளுத்திவிட்டானு ஆரியப் பிரஹஸ்பதி......?

[மீண்டும் பயங்கரமாய்ச் சிரித்து ஓய்ந்த பிறகு]

மல்லன்-மல்லி!

மல்லன் } :—அம்மா...!
மல்லி }

பூமகள்:—விந்திய மலைக்கு அப்பாலும் உள்ள விரிந்த திராவிடத்தில், நம் இனத்தோர் வெகு விமரிசையாய் வாழ்கின்றனர் என்று, இதோ இத்திராவிட மாபாடியத்தில் நமது புலவர் பெருமான் மிகத் தெளிவாய்க் குறித்திருக்கிருர்!

இன்று இங்கு நம்மிடையே வெற்றி கண்ட நயவஞ்சக யாகத் தீக்குண்டர்கள், நாளை அங்கும் சென்று இதே யாகத் தீக்குண்டர்களை உண்டாக்கி, அவர்கள் அமைதியையும் அறிவையும் பாழாக்கி ஆரிய மாய வலை விரித்து அட்டூழியங்கள் புரியக் கூடும்!

ஆதலால், இத்திராவிட மாபாடியத்தை எடுத்துக் கொண்டு நீங்கள் இப்போதே புறப்பட்டுப் போங்கள்! அங்குள்ள நம்மினத் தலைவனிடம் இச்சுவடியை ஒப்படைத்துவிட்டு, இங்கு நிகழ்ந்தவற்றை எல்லாம் நம்மவர் இதயந்தோறும் பதிய வைத்து விடுங்கள்!! இதோ, திராவிட மாபாடியம்!!! உம். புறப்படுங்கள்—போங்கள்.

[எனக் கொடுத்தனுப்புகிருள்.]

மல்லன் } :—தலைவி...! தங்கள் கட்டளையைச் சிரமேற்
மல்லி }

ருங்கிச் செல்கிறோம்!!

[எனப் பெற்றுக்கொண்டு செல்கின்றனர்.]

பூமகள்:—விந்தியமலேக்கு அப்பால் ஆரியன் வந்தாலும், வெந்திடும் யாகக் குண்டம் ஒன்றேனும் தோன்றி விடக் கூடாது! ஞாபகமிருக்கட்டும்!!!

மல்லன்
மல்லி } :—

[பூமகளின் கட்டளேயைச் சிர மேற்ருங்கிச் செல்வதற்கு அறி குறியாய்த் திரும்பவும் தலே வணங்கி விட்டுச் செல்கின்றனர்.]

ப்ரஹஸ். குரல் எதிரொலி } :—''நக்ஷ-த்ராய மதிம் தத்யாத்''

தி. தஸ்யூவின் மொழி பெயர்ப்பு } :—''சூத்திரனுக்குப் பகுத்தறிவு உண்டாகும்படி எதுவும் செய்யலாகாது''

பூமகள்:—என்ன...? "சூத்திரனுக்குப் பகுத்தறிவு உண்டாகும்படி எதுவும் செய்யலாகாது'' ஏன்...? அடப்பார்ப்பனப் பதரே' உன் 'புரட்டுகள்! வெளிப்பட்டு விடுமே என்று பயப்படுகிருயா? சூத்திரன்...? திராவிடப் பாட்டாளி! அவன் பகுத்தறிவை மாய்த்து-அவனே மிருகமாக்கி-அவன் உடல் உழைப்பை உறிஞ்சிக் கொழுக்க நினேக்கும் நயவஞ்சகனுகிய நீ, எத்தனே நாளேக்கு இங்கே நிலேப்பாய்? உன் வேத வாக்கை நம்பி நிற்கும் உன் இனமும் எவ்வளவு காலத்திற்குத்தான் இங்கு நிலேத்து விடும்...?

ப்ரஹஸ். குரல் எதிரொலி } :—''ஸ்த்ரீ சூத்ரௌ நாதீயேதாம்''

தி. தஸ்யூவின் மொழி பெயர்ப்பு } :—''பெண்களுக்குக் கல்வி பயில உரிமை இல்லே''

பூமகள்:—ஆஹ்ஹ்ஹ்ஹ்......ஹஹ்......ஹ்ஹ்ஹ்ங்.........
திராவிடத்தில் பார்ப்பனியம் நிலேக்க வேண்டுமானல், பெண்கள் முட்டாள்களாக இருக்க வேண்டும்...... அஹ்ஹஹ்......ஹ்ஹ்......ஹ்ங்.........?

பெண்களில் ஒருத்திக்கேனும் அறிவேற்பட்டு விட்டால், பார்ப்பனியத்தை ஆதரிக்கமாட்டாள் என்பது மட்டுமல்ல, குழிதோண்டிப் புதைத்து விடுவாள் என்பதைப் பிரஹஸ்பதியே அறிந்திருக்கிருன்!

ப்ரஹ்ஸ். குரல் எதிரொலி }:—"விஸ்ரப்தம் ப்ராஹ்மண க்ஷுத்ராத் த்ரவ்யோ பாதான மாசரேத்; நஹி தஸ் யாஸ்தி கிஞ்சித் ஸ்வம் பர்தரு ஹார் யத்னேஹிச"

தி. தஸ்யூவின் மொழி பெயர்ப்பு }:—"சூத்திரனிடத்தில் ஏதேனும் பொருளிருந்தால், அதைப் ப்ராஹ்மணன் பறித்துக் கொள்ளலாம்! ஏனெனில், சூத்திரன் அடிமை ஆதலால், அவனுக்கென்று பொருள் சிறிதேனும் இல்லை."

பூமகள்:—ஆ...ங்...? ஆஹ்ஹ்ஹ்......ஹ்ஹ்ஹ்...ஹங்... சூத்திரனுக்கு...?—உழைப்பவனுக்கு பொருள் ஒரு சிறிதேனும் இல்லையாம்......! பாடுபடும் திராவிடப் பாட்டாளி மகனுக்குப் பலனில் பங்கு ஒரு சிறிதேனும் இல்லையாம்......!! ஆஹ்ஹ்ஹ்...ஹ்ங்......!!!

பார்ப்பன்ன் ஆட்சி பகர்வது கேன்மின்: "சூத்திரனிடம் ஏதேனும் பொருளிருந்தால், அதைப் பார்ப்பனன் பறித்துக் கொள்ளலாம்...?'—சிங்கத்திடம் ஏதேனும் பொருளிருந்தால்...அதைச் சிறு நரி பறித்துக் கொள்ளலாம்...? ஆஹ்ஹ்ஹ்ஹ்ஹ்...ஹ்ஹ்ஹ்...

ப்ரதிஹர்த்தா ப்ரஸத்தோதா }:—"நக்ஷுத்ராய மதிம் தத்யாத்...!" "ஸ்த்ரீ சூத்ரௌ நாதியேதாம்...!!"

[எனப் பெருமிதத்தோடு மந்திரம் ஓதிக்கொண்டு வருகின்றனர்.]

பூமகள்:— [மிகவும் பயங்கரமான சிரிப்போடு ப்ரதிஹர்த்தா மீது ஒரு பெரிய பெண் சிங்கம்போல்ப் பாய்ந்து அவன் கழுத்துச் சங்கைக் கடித்துக் குதங்கெடுத்துக் காறித் துப்பிக் கொன்றுவிட்டுப் ப்ரஸ்த்தோதாவைத் துரத்திக் கொண்டோடுகிருள்.]

ப்ரஸ்த்தோதா:—ஹாங்......ங்........? குருதேவ்......

[என அலறி விழுந்து உருண்டெழுந்து ஓடுகிருன்.]

——:O:——

## காட்சி 36-அ. [இராக்கர்ல—மாமலைக் காடு]

உறுப்பினர்:—ப்ரஹஸ்பதி, அக்னீத்ரன், உபஹாதா, ப்ரஸ் தோதா, பூமகள், திராவிடபூபதி.

நிகழ்ச்சி:— [ப்ரஹஸ்பதியினால் நெருப்பில் தள்ளப்பட்ட பின் உயிர் தப்பிப் புத்துணர்ச்சி பெற்ற திராவிட பூபதி, தன் தவறை உணர்ந்து வெட்கித் தலைமறைவாய்த் திரிந்து கொண்டே தன் துணைவியாகிய பூமகளைக் காக்கும் பணியில் ஈடுபட்டு உயிர் துறக்கிறான்.]

அக்னீ:— [ஓமகுண்டத் தருகே ஒய்யார மான ஒரு ஆசனத்தில் அமர்த்தப் பட்டிருக்கிறான்.]

ப்ரஹஸ்பதி
உபஹாதா }:— [ஓம குண்டத்தின் முன் அமர்ந்து வெற்றி முழக்கம் முழங்குகின் றனர்.]

ஹேய், ஞானஸ்வரூபியான அக்னி தேவனே! நீ, உன் ஜ்வாலைக் கரங்களை விஸ்தரித்துத் திராவிடபூபதியைப் பஸ்பீஹரித்து விட்டு, அக்னீத்ரனை ராஷ்ட்ர பதி ஆக்கினாய்! ப்ராஹ்மணத் துவேஷியான திரா விட மாபாடியைப் பிரேதமாக்கினாய்!! ராக்ஷக்ஷஷப் பூங்குன்றனையும், அவனுடைய லக்ஷக்ஷோப லக்ஷக்ஷம் கறுப்புச் க்ஷேனைகளையும் ஜெயித்தாய்!!! வயோதிகம் ப்ராண நிக்ரஹம் ஷெய்வதுபோல், அநேக வயல்களை யும், தானியக் கோட்டைகளையும் நாஷமாக்கினாய்!!!! வருஷந் தோறும் பால் வருஷிக்கும் பசுக்களை எல் லாம் பஸ்பீஹரித்துத் திராவிட தஸ்யூக்களைப் புஷிக் கப் பாலின்றி நஷிக்கும்படி ஷெய்தாய்.........

ப்ரஸ்தோதா:—ஹேய்...குருதேவ்......குருதேவ்.........

[என அலறிக்கொண்டு ஓடி வருகிறான்.]

ப்ரஹஸ்பதி
உபஹாதா } :—ஹா...ங்......? என்ன.........?
அக்னீத்ரன்

[எனத் திடுக்கிட்டெழுகின்றனர்.]

ப்ரஸ்தோதா:—குருதேவ்......! ராக்ஷக்ஷஷி........

அக்னீத்ரன்
உபஹாதா } :—ராக்ஷக்ஷஷியா... ..? ஹய்யோ........!
ப்ரஹஸ்பதி

[என வெருண்டோடி ஒளிந்து கொள்கின்றனர்.]

ப்ரஸ்தோதா:—குருதேவ்........

[எனக் கதறிக்கொண்டு கூட ஓடுகிறான்.

பூமகள்:—டே...ய்......!

[எனப் பயங்கரமாய்க் கர்ச்சித்து] துரத்திக் கொண்டோடுகிருள்.]

ப்ரஹஸ்பதி
அக்னீத்ரன் } :—
உபஹாதா

[பூமகள் போய்விட்ட தறிந்து, மறைந்திருந்த இடத்தைவிட்டு

வெளியில் வந்து மீண்டும் ஓம குண்டத்தருகில்அமருகின்றனர்.]

ப்ரஹஸ்:—பகலில் பதுங்கிக்கொண்டு, இரவில் பிஸாஸ-போல்த் திரியும் அந்த ராக்ஷக்ஷஷி நாஷமாய்ப் போகட்டும்!

அக்னீத்ரன்
உபஹாதா } :—அவள் நாஷமாய்ப் போகட்டும்...!

ப்ரஹஸ்:—பகலில் பதுங்கிக்கொண்டு, இரவில் பிஸாஸ-போல்த் திரியும் அந்த ராக்ஷக்ஷஷியைப் படுபாதாளம் கவுளீகரம் பண்ணட்டும்!!

அக்னீத்ரன்
உபஹாதா } :—படுபாதாளம் அவளைக் கவளீகரம் பண்ணட்டும்!!!

ப்ரஹஸ்:—பகலில் பதுங்கிக்கொண்டு, இரவில் பிஸாஸுபோல்த் திரியும் ராக்ஷக்ஷஷியைப் பர்வதங்கள் வெடித்துப் பிடித்துக் கொல்லட்டும்!!!

அக்னீத்ரன்
உபஹாதா } :—பர்வதங்கள் வெடித்து அவளைப் பிடித்துக் கொல்லட்டும்!!!

ப்ரஸ்தோதா:— [பயம் தெளிந்து, மறைந்திருந்த இடத்திலிருந்து மெதுவாய் வெளியே தலை நீட்டி நாலா பக்கமும் பார்த்துக்கொண்டு வரும்போது, ஓம குண்டத்தின் வெளிச்சத்திலுல், பூமகளின் நிழலை ஒரு பெரிய பாறை மீது பார்த்துப் பயந்து]

ஹாங்...? பிஸாஸ்...! பிஸாஸ்...!! பிஸாஸு...!!!—ஆய்...........

[என அலறி உளறித் தட்டுத் தடுமாறி ஓம குண்டத்திலேயே விழுந்து எரிந்து சாகிறுன்.]

ப்ரஹஸ்பதி
அக்னீத்ரன்
உபஹாதா } :— ஹா.........ங்? ஹய்யய்யோ.........

[என மீண்டும் அலறிக் கொண்டு ஓடி மறைந்து கொள்கின்றனர்.]

பூமகள்:— [மிகவும் பயங்கரமான மௌனத்தோடு வந்து ஓம குண்டத்தை உற்றுப் பார்த்துவிட்டு அதை உடைத்துத் தகர்த்தெறிந்துவிட்டு இருட்டில் மறைகிருள்]

——[x]——

## காட்சி 36-ஆ

காலம்:—உதயம்.

அக்னீத்:— [கரங்களில் வில்லம்பு ஏந்திய வண்ணம் ஒரு சிறு குன்றின் மறைவிலே ஒளிந்திருக்கிறான்]

ப்ரஹஸ்
உபஹாதா } :— [அக்குன்றின் உச்சியிலுள்ள ஒரு மாபெரும் கூழாங்கல்லின் மறைவில் ஒளிந்திருக்கின்றனர்]

பூமகள்:— [ஒரு குகைக்குள்ளிருந்து வெளியேறி மரங்களிடையே நடந்து வருகிறாள்]

பூபதி:— [அக்னியினால் சிதைக்கப்பட்ட உடலினை உடையவனாய் அக்னீத்ரனுக்குப் பின்னால் வந்து அவன் பூமகள் மீது குறிபார்த்து அம்பெய்யப் போகும் தருணத்தில், ஒரு பெரிய கல்லைத் தூக்கி அவன் மண்டையிலடித்துக் கொல்கிறான்]

அக்னீத்:—ஆய்......! [என அலறி மடிகிறான்]

பூமகள்:— [ஆரியரின் ஓசை கேட்டுக் குன்றோரம் பதுங்கிச் செல்கிறாள்]

ப்ரஹஸ்
உபஹாதா } :— [அக்னீத்ரனின் அபயக் குரல் கேட்டு நடுக்கத்துடன் குன்றின் மீதிருந்து கீழே இறங்கி வரும் போது அக்குன்றோரமாய்ப் பதுங்கிச் செல்லும் பூமகளைக் கண்டு மீண்டும் குன்றின் மீதே திரும்பி ஏறிச் சென்று அம் மாபெரும் கூழாங்கல்லை பூகளின் தலைக்கு நேரே உருட்டிவிட்டு ஓடிப் போய்ப் பதுங்கிக்கொள்கின்றனர்]

பூபதி:— [தக்க சமயத்தில் பாய்ந்து சென்று பூமகளைச் சற்று அப்பால் தள்ளி அவள் உயிரைக் காப்பாற்றுகிருன்! ஆனால், தன் மண்டையை அப்பெரிய கூழாங் கல் உடைத்து நொறுக்கியதால் ஒழுகும் இரத்தத்திலே வீழ்ந்து துடிக்கிருன்]

ஆ...ய்...!

பூமகள்:—யாரது......!

[எனத் திரும்பி கூர்ந்து நோக்கித் திராவிடபூபதியைத் தூக்கி நிறுத்திப் பார்க்கிருள்]

பூபதி:—நா......ன்......

பூமகள்:—துரோகி...?

பூபதி:—ஆ...ம்...!

பூமகள்:— ஆ.....ஹ்ஹ்ஹ்ஹ்ஹஹ்ஹங்......ஹஹ்ஹங்... ஊ...ங்ஹ்ஹ-ம் ஹ-ம்...........

[எனப் பயங்கரமாய்ச் சிரித்து விட்டுப் பைத்தியக்காரியைப் போல் அழுகிருள்]

பூபதி:—மன்னி.....மன்னி...... என்னை மன்னித்துவிடு.

[எனக் கதறி அழுகிருன்]

பூமகள்:—மன்னித்துவிடுவதா..........? உன்னையா......? ஊங்......ஹூம்......!

[எனத் தலையசைத்து மறுக்கிருள்]

பூபதி:—ஐ...யோ...! ஆரியப் போதையன்ரு என் மதியை மயக்கி என்னை மமதையில் ஆழ்த்தி விட்டது...!!—ஆரியம்...? அறிவை மயக்கும் மதம்!!!

சோமச் சாற்றை அளவுக்கு மீறிக் குடித்திருக் கிறேனே—அப்போதுகூட நான் சொரணை இழந்த

தில்லையே!! ஆனால், ஆரியமத போதனையை எப்போது ஏற்றுக் கொண்டேனோ அப்போதே நான் சொரணை இழந்தேன்—சுய நினைவுமற்றேன்—சொந்த இனத்தையே பிணமாக்கிவிட்டேனே ...... இதோ. நானும் பிணமாகப் போகிறேன்......என்னை மன்னித்துவிடு....கண்ணே......! என்னை மன்னித்து விடு...!! என்...னை...மன்...னி.........

[எனப் பரிதவித்துக் கொண்டே சாகிறான்]

பூமகள்:—ஆ...ங்...? துரோகி! நீ, சாகிறாயா....? செத்துப் போகிறாயா.......? இவ்வளவு சீக்கிரமாகவா......? கூடாது! நீ சாகக் கூடாது!! செத்துப் போகக் கூடாது!!! திற! உன் கண்களைத் திற!! திறந்து பார்!!! மூடனே! ஏன் மூடிக் கொண்டாய்? உன் கண்களை ஏன் மூடிக்கொண்டாய்? மூடாதே! திற-திற!! நன்றாகத் திறந்து பார்!!!

முதலில் உன் மண்டையைப் பார்! திராவிட மக்களை திக்கற்றவர்களாய் ஆக்குவதற்கு நீ பக்க பலமாய் இருக்க வேண்டும் என்பதற்காக, ஆரியன் உன்னைப் பூதேவேந்திரன் என்று போற்றி, எந்த மண்டையில் முடி சூட்டினானோ, அந்த மண்டையைத் தான் இப்போது பார்!! எப்படி ஆக்கப்பட்டிருக்கிறது? முடி சூட்டிய அதே ஆரிய நச்சுக் கரங்களாலேயே பொடி பொடியாய் உடைத்து நொறுக்கப்பட்டிருக்கிறதே ........... ஏன்?

இதோ, உன் முகத்தைத் தான் பார்! திராவிட நாட்டின் திருச் செல்வங்களை எல்லாம் யாக குண்டத் தீயிலிட்டுக் கொளுத்தியபோது ஆரிய ஆடல் அணங்கைப் பார்த்துச் சிரித்து மகிழ்ந்து கொண்டிருந்ததே அந்த முகத்தைத்தான் இப்போது பார்! எப்படி ஆக்கப்பட்டிருக்கிறது?—உன்னை ஆரிய ஆடல் அணங்குகளின் மீது தள்ளி விளையாடிக் கேளிக்கை புரிந்த அதே ஆரிய நச்சுக் கரங்களாலேயே கொள்ளியில் தள்ளிக் கொளுத்தப்பட்டிருக்கிறாயே ஏன்??—ஏன் இப்படி எல்லாம் ஆக்கப்பட்டிருக்கிறாய் ???

சொல்...! சொல்...!! சொல்...!!! சொல்லமாட்டாயா? ஓ.....! உன் வாயை நீ மூடிக்கொண்டுவிட்டாய்? ஆம்...... நீ உன் வாயை மூடுவதற்குச் சற்று முன்பு தான் சில வார்த்தைகள் சொன்னுய்'........ஆரியம்...? அறிவை மயக்கும் மதம்! மதம் மக்களை மயக்கும் மது!! அது சோமச் சாற்றைவிடக் கொடியது...!!!' என்ருய்.

உண்மைதான். ஆனல், அந்த உண்மையை உணர் வதற்கு நீ மிக மிகப் பிந்திவிட்டாயே..! நீ, என்றே னும் ஒரு நாள் அந்த உண்மையை உணர்ந்து திருந் தக்கூடும் என்றெண்ணியே எதிர் பார்த்துக் காடேகி காத்துக்கொண்டிருந்த கவி திராவிட மாபாடியையும் சித்திரவதை செய்து கொன்றுவிட்டாயே...!!

அறிவை அழித்து அறியாமையை வளர்த்ததன் பயனை நீயும் அநுபவித்த பின்புதான் செத்திருக் கிருய்......! ஆனல், ஆரியத்தின் கொடுமையை அறிந்து, அதை எதிர்த்தொழிக்கும் எண்ணம், உன் போல் மரண தருவாயை அடையும் திராவிடத் தலை வனுக்குத்தான் ஏற்படும் என்ற இழிநிலை நீடித்துவிட் டால்......! எத்தனை ஆயிரம் ஆயிரம் தலைமுறைகள் இத்திராவிடம் ஆரியத்திற்கு அடிமையாய் இருக்க நேரிடுமோ......?

ப்ரஹஸ்
உபஹாதா } : —

[பதுங்கி இருந்த இடத்தை விட்டு சற்று வெளியே தலைகளை நீட்டி எட்டிப் பார்த்தபின் ஆளுக் கொரு பெரிய கற்களைத் தூக்கிப் பூமகள் தலையில் போடுகின்றனர்]

பூமகள்:—ஆய்...ய்....!ஆய்......!! ஆ...ஹ்...ஹ்......ஹ்...ஹ் ஹ்ஹ்ஹ்ங்....,..ஏ,..ய்! ஆரியத்தின் அடிப்படைச்

சுமைதாங்கிப் பிணமே!! நீ பிணமான பின்னுமா திராவிடச்சியின் தலையில் கற்களைப் போடச் செய்கிறாய்? —ஆய்..........!!!

[எனப் பயங்கரமாய் சிரித்துக் கர்ச்சித்து அப்பிணத்தின் கழுத்தை இறுக்கி அழுத்திக் கொண்டு அதன் மீதே விழுந்து சாகிறாள்]

ப்ரஹஸ்
உபஹாரதா } :— [மேலும் பல கற்களை எடுத்துப் பூமகள் மீது எறிந்து விட்டு வெற்றிச் சிரிப்புச் சிரித்துக் கொக்கரிக்கின்றனர்]

உபஹாரதா:—குருதேவ்......!

ப்ரஹஸ்:—ஷிஷ்யா......!!

உபஹாரதா:—ஜே......ய்...ஜெய விஜயீ பவா!!

ப்ரஹஸ்:—ததாஸ்த்து!!!

———

## காட்சி 37.

இடம்:— சென்னைக் கடற்கரை, காலம்:— இரவு

[பொதுக் கூட்டம்]

உறுப்பினர்:—பெரியார், தளபதி, பாடகர், ஒரு பார்ப்பனர் பொதுமக்கள்.

நிகழ்ச்சி:— [பெரியார் தலைமையில் பேசிக் கொண்டிருக்கும் தளபதி தன் பேச்சை முடித்தவுடன் தலைவர் தனது முடிவுரையைக் கூறு கிறார். அதன் பிறகு நன்றியறி தல், தெரிவிக்கப்பட்டுக் கூட்டம் இனிது கலைகிறது.]

தளபதி:—அன்பர்களே! "ஆரியராவது--திராவிடராவது? அதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது?" என்ற கேள்வியை எழுதிக் கொடுத்துவிட்டு, என்னிடம் பதில் கேட்டு நின்ற நண்பர், ஆரிய வேத பாராயண ராய் இருந்தால், இந்நாடகம்: அவர் மறந்த சுருதி—ஸ்மிருதி ஸ்லோகங்களை மீண்டும் அவருக்கு ஞாபகம் ஊட்டி இருக்கும்!

சரித்திரம் படித்தவராய் இருந்தால், இந்நாடகம் அவர் மறைக்க விரும்பிய பழங்கால வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டி இருக்கும்!!

எதுவுமே அறியாத அப்பிராணியாய் இருந்தால், இந்நாடகம்: அவருக்கு எல்லாவற்றையுமே வெட்ட வெளிச்சமாக்கிவிட்டிருக்கும்!!! என்று கூறிக் கொள்வதோடு என் பேச்சை இத்தோடு நிறுத்திக் கொள் கிறேன். வணக்கம்.

[எனத் தன் இருக்கையில் அமர்கிறார்.]

பொதுமக்கள்:— [மிக்க ஆர்வத்தோடு கைதட்டுகின்றனர்.]

பெரியார்:—தோழர்களே! நமது தளபதி தமது நீண்ட நேரச் சொற்பொழிவினிடையே, நமது திராவிட இயக்கத்திற்கோர் இலக்கியம் போல், "திராவிட பூபதி" எனும் சிறந்த பிரச்சார நாடகம் ஒன்றை நமக்கு அளித்து நம்மெல்லோரையும் களிப்புக் கடலிலும், கவலைக் கனலிலும் மாறி மாறி மூழ்கவிட்டு மூதறிவும், முன்னெச்சரிக்கையும் ஈந்திருக்கிறார்!! இவ்வரிய வாய்ப்பைத், தனது கண்மூடித்தனமான கேள்வி மூலம் நமக்கு ஏற்படுத்திக் கொடுத்த எதிர்க் கட்சித் தோழருக்கு எனது இதயப் பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு அதிக நேரமாகிவிட்டபடியால், என் முடிவுரையையும் இவ்வளவோடு முடித்துக் கொள்கிறேன்!!! வணக்கம்.

[எனக் கூறி அமர்கிறார்.]

பொதுமக்கள்:— [கைதட்டுகின்றனர்.]

[முடிவுப் பாடல்]

பாடகர்:—நன்றி...! நன்றி......!! நன்றி.........!!!

யாவர்க்கும் எங்கள் ஞானமும் தன்மானமும் உறச்
சொல்கின்றோம் நன்றி!
சொல்கின்றோம் நன்றி!!
சொல்கின்றோம் நன்றி!!! [யாவ]

சீர்மிகும் பொதுமக்களே ஒன்றாய்ச்
சேர்ந்திவ்வளவு நேரமாகக்
கூர்ந்தும்—ஆர்ந்தும் இருந்ததினால்
கூறுகின்றோம்—நன்றியுமே......

திராவிடத் தோழர்கள் நாம்!
திராவிடத் தோழர்கள் நாம்!!
திராவிடத் தோழர்கள் நாம்!!!

பொதுமக்கள்:— [ஆர்வமிக்கக் கைதட்டலோடு கீழ்காணும் மொழிகளை முழங்கிக் கொண்டே கலைந்து செல்கின்றனர்.]

தலைவர்...... வாழ்க!

தளபதி...... வாழ்க!!

திராவிடநாடு திராவிடருக்கே!!!



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

## நாடக உலகிற்கோர் நற்செய்தி!

எதிர்பாருங்கள்! எதிர்பாருங்கள்!!

எமது மகத்தான அடுத்த வெளியீடு:

# "மூன்றாவது முத்தம்"

(சமூக சீர்திருத்த நாடகம்)

எழுதியவர்: 'விவேகி'

*

விபரங்களுக்கு:

## திராவிட கலா நிலையம்

57, முக்தாருனிஸா பேகம் தெரு,

சென்னை—2.